உதயன்
விலை ரூபா 15.00
www.uthayan.com
சுடர் 26 வள்ளுவர் ஆண்டு 2041 கார்த்திகை 16 வியாழக்கிழமை (02.12.2010) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 006

# ஜனாதிபதி லண்டன் சென்றுள்ள வேளையில்

# சனல் - 4 இல் மீண்டும் போர்க்குற்ற ஆதாரம்

## 5 நிமிட வீடியோ காட்சிகள் ஐ.நாவுக்கு அனுப்பிவைப்பு

லண்டன்,டிசெம்பர்2

இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ லண்டனுக்கு வருகை தந்துள்ள சமயத்தில், வன்னியில் நடைபெற்ற இறுதிப் போரின் போது இடம்பெற்ற போர்க் குற்றங்கள் எனக் கூறப்படும் புதிய ஆதாரங்களை சனல் 4 தொலைக்காட்சி நிறுவனம் வெளியிட்டுள்ளது. சுட்டுக் கொல்லப்படுவதற்கு முன்னர் இளம் பெண்கள் படையினரால் பாலியல் வல்லுறவுக்கு உள்ளாக்கப்பட்டார்கள் என்பதற்குத் தாம் வெளியிட்டுள்ள வீடியோவில் ஆதாரங்கள் இருக்கின்றன என்று சனல்-4 தனது அறிக்கையில் கூறி உள்ளது.

இலங்கையில் போர் முடிவடைந்ததாக அரசு அறிவித்து மூன்று மாதங்களின் பின், போர்க் குற்றங்கள் தொடர்பான வீடியோ ஆதாரம் ஒன்றை சனல்-4 தொலைக்காட்சி நிறுவனம் வெளியீட்டிருந்தது. அந்த வீடியோ ஆதாரத்தில் இலங்கை அரச படையினர், கிட்டத்தட்ட மரண தண் டனை விதிக்கும் பாணியில் தமிழ் இளை ஞர்களைச் சுட்டுக் கொல்லும் காட்சிகள் பதிவாகி இருந்தன.

கண்களும் கைகளும் கட்டப்பட்ட நிலையில் சேற்று நிலப்பகுதியில் இளைஞர்கள் சுட்டுக் கொல்லப்படும் காட்சிகள் அந்த வீடியோவில் இடம்பெற்றிருந்தன. கொல்லப்பட்டவர்கள் தோற்கடிக்கப்பட்ட தமிழ் இளைஞர்கள் என்றே கருதப்படுகின்றனர். அந்தக் காட்சிகளும் ஆதாரமும் நம்பகத்தன்மை வாய்ந்தவை, உண்மையானவை என்று ஐ.நா. நிபுணர் குழு ஒன்று உறுதிப்படுத்தியது.

முதலில் சனல்-4 வெளியிட்ட ஆதாரத்தில் காட்டப்பட்ட காட்சிகளின் தொடர்ச்சியான காட்சிகளே தற்போது வெளியிடப்பட்டுள்ள வீடியோவில் காணப்படுகின்றன. குற்றம் இழைத்தவர்கள் யார் என் பதை அடையாளம் காணக்கூடியதாக இந்த ஆதாரம் தெளிவாக உள்ளது.

புதிய வீடியோவில், 16 மாதங்களின் முன்னர் சனல்-4 நிறுவனம் காட்டிய அதே காட்சிகளும் அடங்கி உள்ளன. ஆனால், முதலில் காட்டப்பட்ட வீடியோவில் காணப்பட்ட, இரண்டாவது இளைஞன் சுடப்பட்டு வீழும் காட்சியி லிருந்து மேலதிக காட்சிகள் புதிய வீடியோவில் உள்ளன.

புதிய வீடியோவில், இடதுபுறமாகத் திருப்பப்படும் கமெராவின் பதிவுகளில் ஆடைகள் ஏதுமற்ற 7 பெண்களின் சடலங்கள் காட்டப்படுகின்றன. பின்னணியில் படையினரின் உரையாடல் பதிவாகி உள்ளது. அவர்கள் (28ஆம் பக்கம் பார்க்க)

### இலங்கை மறுப்பு

லண்டன், டிசெ.2

சனல்-4 வெளியிட்ட வீடியோ காட்சிகளை லண்டனில் உள்ள இலங்கைத் தூதரகம் நிராகரித்துள்ளது. அது நம்பகத்தன்மையற்றது எனவும் தெரிவித்துள்ளது.

கடந்த ஆண்டும் சனல்-4 இவ்வாறான வீடி யோவை ஒளிபரப்பி இருந்தது; ஆனால், அது முற்றிலும் பொய்யானது என தொழில்நுட்ப உதவியுடன் இலங்கை அரசு நிரூபித்திருந்தது என வும் தூதரகம் தெரிவித்துள்ளது. (28ஆம் பக்கம் பார்க்க)

### உண்மை வெளிவரும்:

#### மன்னிப்புச் சபை கருத்து

லண்டன், டிச. 02

சனல்- 4 நிறுவனம் ஒளிபரப்பிய புதிய ஆதார வீடியோ உண்மையை வெளிக் கொண்டு வருவதற்கான மிக முக்கிய ஆவணம் என்று தெரிவித்துள்ளது சர்வதேச மன்னிப்புச் சபை.

"இதற்கு முன்னர் ஒளி பரப்பப்பட்ட வீடியோ (28ஆம் பக்கம் பார்க்க)

உள்ளே...
உள்நாடு 2
பாம்புகளின் படையெடுப்புக்கும் சுனாமிக்கும் தொடர்பில்லை
வன்னி 9
வைத்தியசாலைக்குள் புத்த விகாரை: அனுமதி பெறப்பட்டதா?
விளையாட்டு 25
காம்பீர் 138: 8 விக்கெட்டுக்களால் வென்றது இந்தியா



லண்டனுக்குப் பயணம் செய்துள்ள ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நேற்று பிரிட்டிஷ் மற்றும் ஐரோப்பிய நாடாளுமன்ற உறுப்பினர்களைச் சந்தித்து உரையாடினார்.

### பாதுகாப்புக் காரணத்தால் ஜனாதிபதியின் உரை ரத்து

கொழும்பு,டிசெ.2

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, ஒக்ஸ்போர்டில் இன்று வியாழக்கிழமை ஆற்ற விருந்த சிறப்பு உரை பாதுகாப்புக் காரணங்களால் ரத்துச் செய்யப்பட்டுள்ளது என்று ஒக்ஸ்பேர்ட் யூனியன் அமைப்பு அறிவித்துள்ளது.

இதுகுறித்து அந்த அமைப்பு தனது இணையத்தளத்தில்ஓர் அறிவித்தலை வெளியிட்டிருந்தது.

இந்த உரையை ஆற்றுவதற்காக இலங்கை ஜனாதிபதி பிரிட்டிஷுக்கு வருகை தந்ததை பிரிட்டனில் வாழும் தமிழர்கள் வன்மையாகக் கண்டித்து விமான நிலையத்தில் ஓர் ஆர்ப்பாட்டத்தையும் நடத்தியிருந்தார்கள்.

(28ஆம் பக்கம் பார்க்க)

### மஹிந்தவுக்கு எதிராகக் கைது உத்தரவு பெற லண்டனில் வாழும் தமிழர்கள் மும்முர முயற்சி

கொழும்பு,டிசெ.2

லண்டனுக்குப் பயணம் மேற்கொண்டுள்ள ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவையும் அவருடன் சென்ற சிரேஷ்ட இராணுவப் பிரதிநிதிகளையும் கைதுசெய்வதற்காக யுத்தக் குற்ற பிடிவிறாந்தைப் பெறும் முயற்சியில் லண்டன் சட்டத்தரணிகள் முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றனர் - என்று பிரபல இணையத்தளமான 'தி கார்டியன்' செய்தியொன்றை வெளியிட்டுள்ளது.

பிரிட்டனிலுள்ள தமிழ் ஆதரவு அமைப்பின் சார்பில் இம்முயற்சி (28ஆம் பக்கம் பார்க்க)

### கடும் காற்றுடன் கூடிய மழை இன்று பொழியும்

யாழ்ப்பாணம்,டிசெ.2

இலங்கைக் கரையோரமாக மையங்கொண்டிருந்த தாழமுக்கம் இலங்கையை விட்டு நகரத் தொடங்கியிருப்பதால் இன்று நாட்டின் பல பகுதிகளிலும் கடும் காற்று மற்றும் இடியுடன் கூடிய பலத்த மழை பெய்யும் என வானிலை அவதான நிலையம் அறிவித்துள்ளது.

வடக்கு, வடமத்தி, கிழக்கு, வடமேற்கு மாகாணங்களில் இன்று மதியம் முதல் இரவுவரை இடியுடன் மழை பெய்யலாம் (28ஆம் பக்கம் பார்க்க)

நுவரெலியா பொலிஸ் நிலையத்தில் நேற்று எதிர்பாராத சம்பவம்

### கைதான முன்னாள் சிப்பாய் கைக்குண்டை வெடிக்க வைத்ததால் 14 பொலிஸார் காயம்

நுவரெலியா,டிசெ.2

நுவரெலியாப் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட முன்னாள் இராணுவச் சிப்பாய் ஒருவர் கைக்குண்டு ஒன்றை பொலிஸ் நிலைய வாசலில் வெடிக்கச் செய்ததால், 14 பொலிஸார் படுகாயமடைந்தனர். முன்னாள் இராணுவச் சிப்பாய் எனச் சந்தேகிக்கப்படும் குறித்த நபர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

கஞ்சா கடத்தினார் (28ஆம் பக்கம் பார்க்க)

### எச்சரிக்கை அறிவிப்பு

யாழ்ப்பாணம், டிசெ.2

யாழ். கரையோரப் பகுதிகளைச் சேர்ந்த மக்களை அறிவுறுத்தும் வகையில் நேற்றிரவு ஒலிபெருக்கி மூலம் அறிவுறுத்தல்கள் விடுக்கப்பட்டன.

மழை, கடும் காற்று, மின்னல் போன்ற காரணங்களால் அனர்த்தங்கள் ஏற்படக்கூடிய சாத்தியங்கள் காணப்படுவதால் -

(28ஆம் பக்கம் பார்க்க)

நுளம்புகளின் தொல்லைக்கு ஒரே தீர்வு.....
சொல்பெக் EW 050

Hayleys
047, ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம்.
021 2221292

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# பாம்புகளின் படையெடுப்பால் ஆழிப்பேரலை அச்சம் இல்லை

## மட்டக்களப்பு வானிலை அவதான நிலையம் அறிவிப்பு

மட்டக்களப்பு,டிசெ2

மட்டக்களப்பு கல்லடிப் பாலத்தின் கீழுள்ள ஆற்றில் ஒரே தடவையில் ஆயிரக்கணக்கான பாம்புகள் வெளிப்பட்டமையால் மக்கள் மத்தியில் அச்சம் ஏற்பட்டுள்ளது. இது ஆழிப்பேரலை எழுவதற்கான அனர்த்த அறிகுறி என எண்ணி இவர்கள் கலங்குகிறார்கள். இந்நிலையில் மட்டக்களப்பு மாவட்ட வானிலை அவதான நிலையம், இவ்வாறு அச்சம் கொள்ளத் தேவையில்லை என்று அறிவித்துள்ளது.

மட்டக்களப்பு கல்லடிப்பாலத்தின் கீழுள்ள ஆற்றில் செவ்வாய்க்கிழமை இரவு தோன்றிய அதிசயப் பாம்புகளால் அங்குள்ள மக்கள் பெரிதும் பீதியடைந்துள்ளனர். ஒரே தடவையில் ஆயிரக்கணக்கான பாம்புகள் இங்கு படையெடுத்து வந்தமை மக்கள் மத்தியில் பழைய ஆழிப்பேரலை நினைவுகளை மீட்டிப்பார்க்க வைத்துள்ளது என அங்குள்ளவர்கள் தெரிவிக்கின்றனர்.

2004ஆம் ஆண்டு டிசெம்பர் 26ஆம் திகதி ஏற்பட்ட ஆழிப்பேரலை அனர்த்தத்திற்கு இரண்டு தினங்களுக்கு முன்னர், அதாவது டிசெம்பர் 24ஆம் திகதி இதே ஆற்றில், இதேபோன்ற ஆயிரக்கணக்கான வெள்ளைப் பாம்புகள் தோன்றியிருந்தன. இப்பொழுதும் அதேபோலத் தோன்றியிருப்பதாலேயே மக்கள் மத்தியில் பீதி ஏற்பட்டுள்ளது.



மனிதனால் உணரமுடியாத மிக நுட்பமான அதிர்வுகளை அறியக்கூடிய சக்தி பாம்புகளுக்கு உண்டு. ஆற்றில் நீந்திச் சென்ற பாம்புகளை வலை வீசி பிடிக்க முற்பட்ட பலரது முயற்சி தோல்வியிலேயே முடிந்திருக்கிறது. சுமார் 3 அடி நீளம் கொண்ட வெள்ளைப் பாம்புகளின் முதுகில் நீலநிறக் கோடுகள் காணப்பட்டன என்று சம்பவ இடத்திலிருந்த பொதுமக்கள் தெரிவித்திருக்கிறார்கள்.

அத்தோடு இரண்டு பக்கமும் நீந்திச் செல்லும் சக்தியுடையவையாக இப்பாம்புகள் இருந்தன என்றும் அங்குள்ளவர்கள் தெரிவிக்கிறார்கள்.

இவ்விடயம் தொடர்பாக மட்டக்களப்பு மாவட்ட வானிலை அவதான நிலையத்தின் கடமை நேர உத்தியோகத்தர் மொஹமட் ஷாலி ஹீனைத் தொடர்பு கொண்டு கேட்டபோது,

"எங்களுக்கும் இதுபோன்ற பல தொலை பேசி அழைப்புகள் வந்தன. ஆனால், ஆழிப் பேரலை ஏற்படுவதற்கான அறிகுறிகள் எதுவுமே இன்னும் எங்களுக்கு கிடைக்கவில்லை. பெரும் நில அதிர்வு ஏற்பட்டால்தான் ஆழிப் பேரலை ஏற்படும் சாத்தியம் இருக்கிறது. அப்படி நடைபெறக்கூடிய சூழ்நிலை இருக்கிறது என எங்களுக்குத் தகவல் கிடைக்கவில்லை. எனவே இவ்விடயம் தொடர்பில் பொது மக்கள் அச்சம் கொள்ளத் தேவையில்லை."-என்றார். (ஒ-சி)

## சொந்த வீடுகளுக்குச் சென்ற

# கிளி. பொன்னகர் மக்கள் படையினரால் விரட்டியடிப்பு

கிளிநொச்சி, டிசெ.2

தமது சொந்த வீடுகளுக்கு முன்னால் தற்காலிகமாகக் குடியமர்த்தப்பட்ட மக்கள், வெள்ளம் காரணமாக தமது வீடுகளுக்குச் சென்றபோது நேற்று இராணுவத்தினரால் விரட்டியடிக்கப்பட்டனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

கிளிநொச்சி பொன்னகர் மக்களே இந்த அவலத்துக்கு முகம் கொடுத்துள்ளனர்.

யுத்தம் காரணமாக இடம் பெயர்ந்த மக்கள் மீள்குடியேற்றப்பட்டபோது அவர்களது சொந்த வீடுகளில் குடியமர்த்தப்படவில்லை. மாறாக அவர்களது சொந்த வீடுகளுக்கு முன்பாகத் தற்காலிக கூடாரங்களில் குடியமர்த்தப்பட்டார்கள்.

அடைமழை காரணமாக தற்காலிகக் கொட்டில்களில் வெள்ளம் நிரம்பியதும், தமது சொந்த வீடுகளுக்குச் சென்றபோது அவர்கள் இராணுவத்தினரால் வெளியேற்றப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பாக கிளிநொச்சி மாவட்ட அரச அதிபரிடம் கேட்டபோது,

அந்த மக்கள் தற்போது தங்குவதற்கான ஏற்பாடுகள் செய்து கொடுக்கப்பட்டிருப்பதாகவும், அவர்களுக்கு சமைத்த உணவு வழங்கப்படுவதாகவும் கூறினார். (சி)

# ஆலயத்துக்குச் சென்று திரும்பிய பெண்ணின் தங்கச் சங்கிலி அபேஸ்

வலிவடக்கு,டிசெ.2

ஆலயத்துக்குச்சென்று விட்டு திரும்பிய வயோதிபப் பெண் ஒருவரின் சுமார் அறுபதாயிரம் ரூபா பெறுமதியான தங்கச் சங்கிலி பட்டப்பகலில் பறிபோனது.

சுன்னாகம் மயிலணி ரயில் நிலைய வீதியில் நேற்றுமுன் தினம் இந்தச் சம்பவம் இடம் பெற்றது.

பகல் 11.30 மணியளவில் ஆலயத்துக்குச் சென்றுவிட்டு குறித்த வயோதிபப் பெண் திரும்பி வந்துகொண்டிருந்தார். அப்போது மழையும் பலமாகப் பெய்துகொண்டிருந்தது. அவ்வேளையில் திடீரெனச் சைக்கிளில் எதிரே வந்த இளைஞர் ஒருவர் நேரே சென்று விட்டு பின்னர் வயோதிபப் பெண்ணின் பின்புறமாக வந்து அவரது கழுத்தில் இருந்த சங்கிலியை அறுத் தெடுத்துக் கொண்டு தப்பிச் சென்று விட்டார்.

வயோதிபப் பெண்ணும் அவருக்குப் பின்னால் வந்த இளம் பெண்ணும் கூக்குரலிட்ட போதிலும் பொதுமக்கள் வருவதற்கு முன்னர் சம்பந்தப்பட்ட இளைஞன் அங்கிருந்து தலைமறைவாகிவிட்டதாகக் கூறப்படுகிறது. (எ-86)

# மாற்று வலுவுள்ளோர் தின நிகழ்வுகள் நாளை

யாழ்ப்பாணம்,டிசெ.2

சர்வதேச வலுவிழந்தோர் தினத்தை முன்னிட்ட நிகழ்ச்சிகள் நாளை வெள்ளிக்கிழமை 47/2, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி வடக்கு என்னும் முகவரியில் அமைந்துள்ள மாற்று வலுவுடையோர் சங்கத்தில் நடைபெறவுள்ளது. இந்த நிகழ்வில் அனைத்து மாற்று வலுவுடையோரையும் கலந்துகொள்ளுமாறு மாற்று வலுவுடையோர் சங்கச் செயலாளர் செல்வி எஸ். நிர்மலகுமாரி தெரிவித்துள்ளார். (உ-313)

# யாழ். ஆஸ்பத்திரி தாதியர் இன்று ஒரு மணிநேரப் பணிப்பகிஷ்கரிப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 2

யாழ். போதனா வைத்தியசாலையில் பணியாற்றும் அரசாங்கத் தாதிமார் சங்கத்தினர் தமது கோரிக்கைகளை மீண்டும் வலியுறுத்தி இன்று வியாழக்கிழமை முற்பகல் 11.30 முதல் 12.30 மணிவரையான ஒரு மணி நேர பணிப்புறக்கணிப்பில் ஈடுபடப்போவதாக அறிவித்துள்ளனர்.

கடந்த வருடம் டிசெம்பர் மாதம் தொடக்கம் 6 அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து நாடு முழுவதிலுமுள்ள அரசாங்கத் தாதிமார் சங்கத்தினர் போராட்டங்களை நடத்திவருகின்றனர்.

இதன் அடுத்த கட்ட நடவடிக்கையாகவே யாழ். போதனா வைத்தியசாலையின் அரசாங்கத் தாதிமார் சங்கத்தினர் இந்தப் போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளனர் என்று சங்கத்தின் செயலாளர் பி.பீ.சிவயோகம் தெரிவித்தார். (ஒ-10-319)

# கிளிநொச்சியில் ஒரே நாளில் விபத்துக்களில் மூவர் மரணம்

கிளிநொச்சி, டிசெ.2

கிளிநொச்சிப்பகுதியில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற இரண்டு வெவ்வேறு விபத்துச் சம்பவங்களில் மூவர் உயிரிழந்துள்ளனர்.

நேற்று முன்தினம் இரவு 10 மணியளவில் கிளிநொச்சி ஜந்தாம் வாய்க்கால் பகுதியில் - பரந்தன் பூநகரி வீதியில் - இடம்பெற்ற வாகன விபத்தில் இருவர் உயிரிழந்தனர்.

மோட்டார் சைக்கிள் ஒன்றை எதிரே வந்த டிப்பர் வாகனம் மோதியதாலேயே இந்த விபத்து இடம் பெற்றதாகத் தெரிவிக்கப்பட்டது.மோட்டார் சைக்கிளில் வந்தவர்களை மோதிவிட்டு, குறித்த டிப்பர் வாகனம் அவ்விடத்திலிருந்து தப்பியோடி விட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.இச்சம்பவம் தொடர்பாகக் கிளிநொச்சிப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இச்சம்பவத்தில் கிளிநொச்சியைச் சேர்ந்த ந.திருவாகரன் (வயது-24) , மு.சசிக்குமார் (வயது-28) ஆகியோரே உயிரிழந்தவர்கள் ஆவார்.

இதே வேளை நேற்று முன்தினம் காலை 6.30 மணியளவில் முறிகண்டிப் பகுதியில் மாடுகள் மேய்த்துக் கொண்டு வந்த ஒருவரை எதிரே வந்த வாகனம் மோதியதில் காயமடைந்து கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பயனளிக்காத நிலையில் மரணமானார். இச்சம்பவத்தில் மணியம் (வயது-30) என்பவரே உயிரிழந்தவர் ஆவார். (ஒ-405)

# பரோபகார மணி கே.கே.சுப்பிரமணியம் காலமானார்

யாழ்ப்பாணம்,டிசெ.2

சைவப்பெரியாரும் சமூகத் தொண்டருமான பரோபகார மணி கே.கே.சுப்பிரமணியம் தமது 82ஆவது வயதில் நேற்றுக் கொழும்பில் காலமானார்.

காரைநகர் தங்கோடையைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் சுங்கத் திணைக்களத்தில் நீண்ட காலமாக உயர் அதிகாரியாகப் பணியாற்றியவர். சமயப் பணிகளில் மிகுந்த ஈடுபாடும் ஆன்மீக நாட்டமும் கொண்ட இவர் பல ஆலயங்களின் வளர்ச்சிக்கும் உதவியவர். சமூக, சமயப் பணிகளுக்கு தாராள நிதி செய்தவர். கலைஞர்களைக் கௌரவித்து சிறப்புச் செய்வதில் முன்னிற்பவர். அன்னார் முன்னாள் இந்து கலாசார அமைச்சர் தி. மகேஸ்வரனின் மாமனும் ஆவார். சில வாரங்கள் நோய்வாய்ப்பட்டிருந்த இவர் நேற்றிரவு கொழும்பு அப்பலோ ஆஸ்பத்திரியில் உயிர் நீத்தார். (அ)

# ஐ.தே.கவின் 2குழுக்கள் ஏட்டிக்குப் போட்டியாக 'சிறிகொத்த' முன் நேற்று சத்தியாக்கிரகம்

கொழும்பு,டிசெ.2

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான சிறிகொத்தவுக்கு முன்பாக நேற்று சத்தியாக்கிரகம் செய்த இரு தரப்பினரிடையே கடும் வாக்குவாதம் ஏற்பட்டது.

ஐக்கிய தேசியக் கட்சியின் புத்தளம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பாலித்த ரங்கே பண்டார, தம்மைத் தாக்கிய நபர்களுக்கு எதிராகக் கட்சி எதுவித ஒழுக்காற்று நடவடிக்கையும் எடுக்கவில்லை எனத் தெரிவித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

இந்த நிலையில் தாக்குதல் நடத்தியவர்களுக்கு எதிராக கட்சி ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்தி புத்தளம் மாவட்ட ஐக்கிய தேசியக் கட்சி ஆதரவாளர்களினால் நேற்று இந்த சத்தியாக்கிரகம் நடத்தப்பட்டது.

நாடாளுமன்ற உறுப்பினர் பாலித்த ரங்கே பண்டார மீது கடந்த ஏப்ரல் மாதம் 10ஆம் திகதி சிலாபத்தில் வைத்து தாக்குதல் மேற்கொண்டதாக ஐ.தே.கட்சியின் வடமேல் மாகாண சபை உறுப்பினர் சாந்த சிசிர குமாரவின் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

சிறிகொத்தவுக்கு முன்பாக நாடாளுமன்ற உறுப்பினர் பாலித்த ரங்கே பண்டாரவின் [illegible] சத்தியாக்கிரகப் போராட்டத்துக்கு ஏட்டிக்குப் போட்டியாக மேற்படி குற்றம் சுமத்தப்பட்ட வடமேல் மாகாண சபை உறுப்பினர் சாந்த சிசிர குமாரவும் அவரது ஆதரவாளர்களும் சத்தியாக்கிரகத்தில் ஈடுபட்டனர் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் புத்தளம் மாவட்ட முஸ்லிம் விவகாரங்களுக்கான இணைப்பாளர் அமின் நேற்றுத் தெரிவித்தார்.

ஏட்டிக்குப் போட்டியான சத்தியாக்கிரகப் போராட்டத்தில் ஈடுபட்ட வடமேல் மாகாண சபை உறுப்பினர், தங்களின் சத்தியாக்கிரகப் போராட்டத்தை குலைக்கும் வகையிலான முயற்சிகளில் ஈடுபட்டனர் என்றும் அவர் கூறினார்.

நேற்று 12.30 மணிக்கு ஆரம்பிக்கப்பட்ட சத்தியாக்கிரகப் போராட்டம் பிற்பகல் 2.40 மணி வரை நடத்தப்பட்டது.

இதனையடுத்து சிறிகொத்த வளாகத்தினுள் சத்தியாக்கிரகிகள் நுழைய முயற்சித்த போது தடை விதிக்கப்பட்டது என்றும், இந்த விடயம் தொடர்பாக ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் மற்றும் பொதுச் செயலாளர் ஆகியோரைச் சந்தித்துப் பேச்சு நடத்த சந்தர்ப்பம் தருமாறு கேட்டுக் கொண்டதாகவும் அவர் தெரிவித்தார். (ஒ-சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேலதிக மாவட்டப் பதிவாளர் பதவிகளில் பல வெற்றிடங்கள்

### பட்டதாரி அரச ஊழியர் திணைக்களம் மாறலாம்

யாழ்ப்பாணம், டிசெ.2

பட்டதாரி நியமனம் பெற்று அரச சேவையிலுள்ளவர்கள் வடக்கு - கிழக்கு மாகாணங்களில் உள்ள மேலதிக மாவட்டப் பதிவாளர் பதவிகளுக்கு திணைக்கள மாற்றம் செய்து கொள்ள முடியும் என மேலதிக பதிவாளர் நாயகம் என்.சதாசிவஐயர் தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு -

வடக்கு-கிழக்கு மாகாணங்களில் மேலதிக மாவட்டப் பதிவாளர் பதவிகளுக்குப் பல வெற்றிடங்கள் உள்ளன. 2005ஆம் ஆண்டு வழங்கப்பட்ட பட்டதாரி நியமனங்களின் போது உள்வாங்கப்பட்டவர்கள் இந்த வெற்றிடங்களுக்கு விண்ணப்பிக்க முடியும். அரச சேவையிலுள்ள பட்டதாரிகள் தமது திணைக்களத் தலைவர் ஊடாகப் பதிவாளர் நாயகத்துக்கு விண்ணப்பங்களை அனுப்பி வைக்க முடியும்.

அவ்வாறு திணைக்கள மாற்றம் செய்யும் போது சம்பள அளவுத் திட்டத்தில் எவ்வித மாற்றமும் ஏற்படப்போவதில்லை. மேலதிக மாவட்டப் பதிவாளர்களாக திணைக்கள மாற்றம் செய்து கொள்பவர்கள் மேலதிக மாவட்டப் பதிவாளர்கள் தரம் II, தரம் I ஆகியவற்றுக்குப் பதவியுயர்வு பெற்றுச்செல்வதற்கான சந்தர்ப்பங்களும் அதிகம் உண்டு.

இவ்வாறான திணைக்கள மாற்றமானது 2010 ஆம் ஆண்டு 16ஆம் இலக்க சுற்று நிருபத்துக்கு அமைவாகவே இடம்பெறும் - என்றார். (த-14)

# விடுமுறை எண்ணிக்கை குறைக்கப்படவேண்டும்

கொழும்பு,டிசெ.2

வெளிநாட்டு முதலீடுகளைக் கவர்வதற்காக விடுமுறை நாள்களின் எண்ணிக்கையை குறைக்க வேண்டும் என ஐக்கிய தேசியக் கட்சி வலியுறுத்தியுள்ளது.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க இது தொடர்பாக கூறுகையில், இலங்கையில் வருடமொன்றிற்கான வேலை நாள்களின் எண்ணிக்கை 277 ஆகவும் இந்தியாவில் இந்த எண்ணிக்கை 301 ஆகவும் இருப்பதாக கூறினார்.

'இலங்கையில் முதலீடு செய்வதற்குமுன் முதலீட்டாளர்கள் இருதடவை சிந்திக்கிறார்கள். மேலும் அதிக எண்ணிக்கையான வெளிநாட்டு முதலீட்டாளர்களைக் கவர்வதற்காக இக்குறைபாடுகளை நிவர்த்தி செய்ய வேண்டும்' என்றார்.

'மின்சாரம் மற்றும் நீர்விநியோகக் கட்டணங்கள் அதிகமாக இருந்தால் உற்பத்தி செலவு அதிகரிக்கும். இப்படியிருந்தால் உலக சந்தையில் ஏனைய நாடுகளுடன் நாம் போட்டியிட முடியாது' எனவும் அவர் தெரிவித்தார். (த)

## தமிழ்ச்செல்வனின் கணினி முல்லைத்தீவில் மீட்கப்பட்டதாம்

யாழ்ப்பாணம்,டிசெ.2

விமானப் படையினரின் குண்டுத் தாக்குதலுக்கு இலக்காகி பலியான தமிழீழ விடுதலைப் புலிகளின் முன்னாள் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் பயன்படுத்திய 'லப்டொப்' கணினி மீட்டெடுக்கப்பட்டுள்ளதாக லக்பிம பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

குறித்த 'லப்டொப்' கணினியுடன் பெருந்தொகைப் பணமும் மீட்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறு கைப்பற்றப்பட்ட கணினியில் அரசியல் பணிமனையில் காணப்பட்ட இரகசிய தகவல்கள் காணப்படுவதாகக் குறிப்பிடப்படுகிறது.

குறித்த 'லப்டொப்' கணினியும், பணமும் முல்லைத்தீவு மாவட்டத்தின் வெள்ளமுள்ளிவாய்க்கால் பிரதேசத்தில் மீட்கப்பட்டுள்ளன.

தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழீழ விடுதலைப் புலிகளின் முன்னாள் உறுப்பினர் ஒருவர் வழங்கிய தகவல்களின் அடிப்படையில் குறித்த பொருள்கள் மீட்டெடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (த)

### போர் ஓய்ந்த நிலையில்...



மரியாதை: கடற்படையினரின் 60ஆவது ஆண்டு நிறைவையொட்டி அணிவகுப்பு மரியாதை நடைபெற்றது. கடற்படைத்தளபதி வைஸ் அட்மிரல் [illegible].ஜி.சமரசிங்க அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக் கொள்கிறார்.

## தொலைபேசிக் கட்டணம் குறைவடையும் வாய்ப்பு

கொழும்பு,டிசெ.2

2011ஆம் ஆண்டுக்கான வரவு, செலவுத் திட்டத்தில் வரிகள் அகற்றப்பட்டமையால் நிலையான தொலைபேசி மற்றும் கையடக்க தொலைபேசிகளுக்கான மாதாந்த கட்டணங்கள் 10 வீதம் முதல் 15 வீதம் வரை குறையுமென்று எதிர்பார்க்கப்படுவதாக இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு தெரிவித்தது.

இந்த வரிக் குறைப்பினால் நிலையான தொலைபேசி மற்றும் கையடக்க தொலைபேசிப் பாவனை அதிகரிப்பதுடன், தொலைத்தொடர்பு கைத்தொழிலிலும் பெரும் வளர்ச்சி ஏற்படுமென்று எதிர்பார்ப்பதாக தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக் குழுவின் தலைவர் அனுஷ பெல்பிட்ட நேற்றுத் தெரிவித்தார். (த)

## நத்தார் பண்டிகையை முன்னிட்டு கோழி இறைச்சி, முட்டை இறக்குமதி

கொழும்பு,டிசெ.2

நத்தார் பண்டிகையை முன்னிட்டு எதிர்வரும் 10 தினங்களுக்குள் கோழி இறைச்சியும் முட்டையும் இறக்குமதி செய்யப்படுமெனக் கூட்டுறவு மற்றும் உள்நாட்டு வர்த்தக அமைச்சு தெரிவிக்கிறது.

இந்தியா மற்றும் பிரேசில் ஆகிய நாடுகளிலிருந்து கோழி இறைச்சியும் முட்டையும் இறக்குமதி செய்யப்படவுள்ளதாக அந்த அமைச்சின் செயலாளர் சுனில் சிறிசேன தெரிவித்தார்.

1,500 மெற்றிக் தொன் கோழி இறைச்சியை இவ்விருநாடுகளிலிருந்தும் இறக்குமதி செய்வதுடன் 50 லட்சம் முட்டைகள் இந்தியாவிலிருந்து கொண்டுவரப்படுமென்றும் அவர் தெரிவித்தார்.

கோழி இறைச்சி மற்றும் முட்டையின் விலை அதிகரிப்பைக் கட்டுப்படுத்துவதற்காக அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவின் ஆலோசனைக்கு அமைய இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாக அவர் மேலும் சொன்னார். (த)

# திருமறைக் கலாமன்றத் தினம் நாளை

யாழ்ப்பாணம்,டிசெ.2

திருமறைக்கலாமன்றத் தினம் நாளை வெள்ளிக்கிழமை கொண்டாடப்படவுள்ளது. இதனை முன்னிட்டு பல்வேறு சிறப்பு நிகழ்வுகள் திருமறைக் கலாமன்றத்தால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

திருமறைக் கலாமன்றம் ஆரம்பிக்கப்பட்டு இவ்வாண்டுடன் 45 ஆண்டுகள் நிறைவு பெறுவதை முன்னிட்டு இம்முறை சிறப்பாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ள திருமறைக்கலாமன்ற தின நிகழ்வுகளில் இலங்கையில் தமிழ் - சிங்கள பிராந்தியங்களில் இயங்கும் இருபது திருமறைக் கலாமன்றங்களின் இணைப்பாளர்களும் ஆளுநர் சபை உறுப்பினர்களும் கலைஞர்களும் பங்கேற்கவுள்ளார்கள்.

நாளை காலை 7 மணிக்கு மன்றத்தின் கலைத்தூது கலையகத்தில் இடம்பெறும் வழிபாட்டு நிகழ்வுடன் திருமறைக்கலாமன்ற தின நிகழ்வுகள் ஆரம்பமாகும். தொடர்ந்து மு.ப.10 மணிக்கு கலைத்தூது மணி மண்டபத்தில் இரத்ததான நிகழ்வு இடம்பெறும். அதன் பின்னர் திருமறைக்கலாமன்ற இணைப்பாளர்கள், ஆளுநர் சபை உறுப்பினர்களுக்கான ஒன்று கூடல் இடம்பெறும்.

கலை நிகழ்வுகள் மாலை 5.15 மணிக்கு கலைத்தூது கலையகத்தில் ஆரம்பமாகும். இதில் பிராந்திய திருமறைக்கலாமன்றக் கலைஞர்களின் பல்வேறு நடன நிகழ்வுகள், கலைஞர் ஜின்னா சரிபுதீனின் கவிதைச் சரம், யாழ். திருமறைக்கலாமன்றக் கலைஞர்களின் நாட்டிய நாடகம் உட்பட பல நிகழ்வுகள் இடம்பெறும். (த)

# 'விக்கிலீக்ஸ்' தரவுகள் குறித்து அரசு கருத்து வெளியிடாது

### வெளிவிவகார அமைச்சு தெரிவிப்பு

கொழும்பு,டிசெ.2

'விக்கிலீக்ஸ்' இணையத்தினால் வெளியிடப்பட்ட தரவுகள் குறித்து அரசு எவ்வித கருத்துக்களையும் வெளியிடாது என வெளிவிவகார அமைச்சு அறிவித்துள்ளது.

இராஜதந்திர உறவுகள் தொடர்பில் எந்தவிதமான கருத்துக்களையும் வெளியிடத் தயாரில்லை என அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

அமெரிக்க ராஜாங்கத்திணைக்களத்திற்கும் இலங்கைக்கான அமெரிக்க தூதரகத்திற்கும் இடையில் பரிமாறிக் கொள்ளப்பட்ட 3166 ஆவணங்கள் தொடர்பில் அண்மையில் விக்கிலீக்ஸ் பரபரப்புதகவல் வெளியிட்டிருந்தது.

விக்கிலீக்ஸ் இணையத்தின் நடவடிக்கைகளினால் நாடுகளுக்கு இடையில் முரண்பாடு ஏற்படக்கூடுமென இலங்கைக்கான அமெரிக்கத் தூதரகம் சுட்டிக்காட்டியுள்ளது.

சில தனிப்பட்ட நபர்களின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தக்கூடிய அதேவேளை, நாடுகளுக்கு இடையில் பிளவினை ஏற்படுத்தவும் சாத்தியம் காணப்படுவதாக தெரிவித்துள்ளது.

இலங்கைக்கான அமெரிக்கத் தூதரகத்தின் பேச்சாளர் [illegible] டேவிஸ் தெரிவித்துள்ளார்.

இந்தத் தரவுகள் தொடர்பில் கருத்துக்கள் எதனையும் வெளியிடமுடியாதென அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த ஆவணங்களின் உண்மைத் தன்மை குறித்து தற்போதைக்கு எவ்வித தகவல்களையும் வெளியிட முடியாதெனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த ஆவணங்கள் உத்தியோகபூர்வமானவை என கருத முடியாது எனவும் அநேகமானவை மிகவும் ஆரம்பகட்ட தகவல் பரிமாற்றங்கள் தொடர்பான ஆவணங்கள் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (த)

## ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சைக்கு புனர்வாழ்வு பெற்ற 153 போராளிகள்

கொழும்பு,டிசெ.2

புனர்வாழ்வுபெற்ற போராளிகள் ஜி.சீ.ஈ சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றுகின்றனர்

புனர்வாழ்வளிக்கப்பட்ட 153 முன்னாள் தமிழீழ விடுதலைப் புலி உறுப்பினர்கள் இம்முறை ஜி.சீ.ஈ சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ளனர்.

இவர்களுள் 43 பேர் பெண் பிள்ளைகளெனப் புனர்வாழ்வு ஆணையாளர் நாயகம் பிரிகேடியர் சுசந்த ரணசிங்க குறிப்பிட்டார்.

புனர்வாழ்வு நடவடிக்கைகளில் பங்குபற்றி விசேட பாடசாலைகளில் கல்விகற்ற மேலும் ஒரு பிரிவினர் இம்மாதம் நடைபெறவுள்ள ஜி.சீ.ஈ சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றுவதாக அவர் மேலும் தெரிவித்தார்.

வவுனியா தமிழ் மகாவித்தியாலய ஆரம்பப் பிரிவில் அமைக்கப்படவுள்ள மத்திய நிலையத்தில் இவர்கள் பரீட்சைக்குத் தோற்றவுள்ளதாக அவர் கூறினார்.

இவர்களுக்காக விசேட கற்கைநெறிகள், கருத்தரங்குகள் இந்த வருடம் முழுவதும் நடத்தப்பட்டதனால் இவர்கள் பரீட்சைகளில் சிறந்த முறையில் பெறுபேறுகளைப் பெறுவார்களெனப் புனர்வாழ்வு ஆணையாளர் நாயகம் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**டிப்பர் வாகனங்கள் வாடகைக்குத் தேவை**

ஒரு வருட ஒப்பந்த அடிப்படையில் 3கியூப் அல்லது 3 கியூப்பிற்கு மேற்பட்ட வாகனங்கள் வாடகைக்குத் தேவை.

தொடர்பு:- 0772557020


# மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு: 20.04.1994
இறப்பு: 06.12.2007

## ஆனந்தராசா நிதர்சன்

ஆண்டுகள் மூன்று அகன்றபோதும்
அகத்தில் அகலாதிருக்கின்றாய்
மீண்டும் மீண்டும் உனது நினைவே
வந்து வந்தெம்மை இயக்கும் அதனால்
வாழ்ந்தோம் இனியும் வாழ்வோம்
வாழ்க உன் நினைவு வையக மீதிலே!

துயர் பகிர்வோர்:
அப்பா, அம்மா, அக்கா.
புலோலி மேற்கு, பருத்தித்துறை.

# போதையால் மயக்கம்; பறிபோனது சைக்கிள்

வலி.வடக்கு.டிசெ.2

மதுபோதையில் வீதியில் வீழ்ந்து கிடந்த நபரின் சைக்கிள் திருடர்களால் களவாடப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் இரவு சுன்னாகம் கந்தரோடை வீதியில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதுகுறித்து மேலும் தெரியவருவதாவது:-

மதுபோதையில் வந்த குறிப்பிட்ட நபர் வீதியோரத்தில் வீழ்ந்து கிடந்துள்ளார். இதனை அவதானித்த அப்பகுதி இளைஞர்கள் சுன்னாகம் பொலிஸ் நிலையத்திற்கு தகவல் கொடுத்துள்ளார்கள்.

குறிப்பிட்ட இடத்திற்கு வந்த பொலிஸார் வீதியில் கிடந்தவரை எழுப்பிய வேளையில் அவரின் பொக்கற்றில் பெருந்தொகையான பணமும் பெறுமதியான கையடக்கத் தொலைபேசியும் பத்திரமாக இருந்துள்ளன. எனினும் 10 ஆயிரம் ரூபா பெறுமதியான தனது சைக்கிள் காணாமல் போயிருப்பதாக அவர் அப்போது பொலிஸாரிடம் தெரிவித்துள்ளார். இது குறித்து பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ-86)


# அடிப்படை உடல் பரிசோதனை.

கிரமமான உடல் பரிசோதனைகள் பாரிய நோய்களை முற்கூட்டியே இனங்காட்டி உங்களை பாதுகாக்கும்.




*இலவச வைத்திய ஆலோசனை வழங்கப்படும்

A full package includes
Scan,ECG,Blood and Urine Tests&Reports

Lava Diagnosis & Lava Hospitals

Member of Reg No:PV74170
Lava Holdings Pvt Ltd

கணனி மயப்படுத்தப்பட்ட ஆய்வுகூடம் மற்றும் அறிக்கைகள்.

Tel: 0212224333 | # 75,Temple Road,Jaffna | www.Lavahospitals.com


# கண்ணீர் அஞ்சலி

எமது சங்க அங்கத்தவரும், பாதுகாப்பு உத்தியோகத்தருமான என்.இராஜறட்ணம் அவர்களின் அன்புத் தாயார்

## திருமதி பூமணி நாகமணி

அவர்கள் காலமானதையிட்டு அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன் அவரின் ஆத்ம சாந்திக்காவும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பாதுகாப்பு உத்தியோகத்தர் நலன்புரி சங்கம்,
யாழ்.பல்கலைக்கழகம்.

(106775)

# கண்ணீர் அஞ்சலி

எமது கல்வி நிறுவனத்தின் தமிழ் ஆசிரியர் ஐ.ரமேஸ் அவர்களின் அன்புத் தாயார்

## ஐயாத்துரை யோகராணி

அவர்களின் திடீர் மறைவால் துயருற்றிருக்கும் அவரின் குடும்பத்திற்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர்,
ஆசிரியர்கள், மாணவர்கள், ஆளணியினர்.

The Express Institute, Irupalai, Kopay.

(வி/573306)

# மரண அறிவித்தல்

## சண்முகம் பரஞ்சோதி

(சோதி ஸ்ரோர்ஸ் உரிமையாளர், கோண்டாவில்)



கோண்டாவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சண்முகம் பரஞ்சோதி கடந்த (29.11. 2010) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ் சென்றவர்களான சண்முகம்-செல்லம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான நாகலிங்கம்-சின்னத்தங்கம் தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற மகேஸ்வரியின் அன்பு கணவரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று 02.12.2010 வியாழக்கிழமை பகல் 11 மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் கோண்டாவில் கட்டையாலடி இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கோண்டாவில்.
0778312284

தகவல்:
குடும்பத்தினர். (ராசன்)

(106778)

# மரண அறிவித்தல்

## இராமநாதர் கணபதிப்பிள்ளை

(பெரியதம்பி நெடுந்தீவு கிழக்கு)

நெடுந்தீவு கிழக்கைப் பிறப்பிடமாகவும், 48/3, முரசுமோட்டை, பரந்தனை நிரந்தர முகவரியாகவும் 25A, மாதிரி உறைவிட வீதி, குருமன்காடு, வவுனியாவை தற்காலிக முகவரியாகவும் கொண்ட இராமநாதர் கணபதிப்பிள்ளை 29.11.2010 அன்று காலமானார்.

அன்னார் இராமநாதர்-கதிராசிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், கந்தையா-ஆச்சிமுத்து தம்பதியரின் அன்பு மருமகனும், கண்மணியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான தங்கம்மா, சுப்பிரமணியம் மற்றும் பொன்னம்மா காலஞ்சென்றவர்களான சின்னம்மா, பரமலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற தையல்முத்து மற்றும் பராசக்தி, செல்லம்மா ஆகியோரின் மைத்துனரும், திருஞானசம்பந்தர், காலஞ்சென்ற கருணாகரன் மற்றும் கேதீஸ்வரன், இராசகோபால், கோடீஸ்வரி, காலஞ்சென்ற சிவகடாற்சம் மற்றும் கோபால கிருஷ்ணன், தனலக்ஷ்மி ஆகியோரின் பாசமிகு தந்தையும், ஞானலோஜினி, சுமதி, ஜெயந்தி, திலீப்குமார், யாழினி, கோணேஸ்வரன் ஆகியோரின் மாமனாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் தற்காலிக முகவரியில் இன்று (02.12.2010) வியாழக்கிழமை பி.ப. 2 மணியளவில் நடைபெற்று தட்சணாம்குளம் இந்து மயானத்தில் தகனக்கிரியை நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல. 25ஏ,
மாதிரி உறைவிட வீதி,
குருமன்காடு, வவுனியா.
தொ.பே. : 0245682353

தகவல் :
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(வி/573142)

# மரண அறிவித்தல்

## திருமதி மங்கையர்க்கரசி கைலாசபிள்ளை

சிறுப்பிட்டி தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மங்கையர்க்கரசி கைலாசபிள்ளை நேற்று (01.12. 2010) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கைலாசபிள்ளையின் அன்பு மனைவியும் மகேசலிங்கம், நடேஸ்வரி ஆகியோரின் அன்புத் தாயும் ஜெகதேவி, காலஞ்சென்ற முத்துக்குமாரசாமி ஆகியோரின் அன்பு மாமியும், விக்கினேஸ், முருகதாஸ், ரகுவரன், சிவேந்தினி ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.12.2010) வியாழக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் சிறுப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சிறுப்பிட்டி தெற்கு,
நீர்வேலி.

(வி/573312)

தகவல் :
குடும்பத்தினர்.

# 41 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

எங்கள் குடும்பத்தின் தெய்வமாய்
திகழ்ந்து அன்போடும் பண்போடும்
பாசத்தோடும் எம்மைப் பேணி
பாதுகாத்து நல்வழிப்படுத்தி இன்று
எம்மையெல்லாம் விட்டுப் பிரிந்து
நாற்பத்தொரு நாள் சென்றாலும்
என்றும் உங்கள் நினைவுடன்....



மலர்வு : 09.04.1954
உதிர்வு: 24.10.2010

கடந்த 24.10.2010 அன்று இறைபதமடைந்த எமது அன்புத் தெய்வத்தின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் இன்று (02.12.2010) வியாழக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும். இந்நிகழ்விலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அழைத்து நிற்கின்றோம்.

அமரர்
செல்லையா தெட்சணாமூர்த்தி
(சாமி)

குடும்பத்தினர்
பண்ணாகம், சுழிபுரம்.

(106767)


# மாற்றுத்திறன் கொண்ட சிறுவர்களையும் இளைஞர்களையும் வாழவைப்போம்.



சர்வதேச மாற்றுவலுவுள்ளோர் தினத்தை முன்னிட்டு இலங்கை அரசின் அங்கீகாரத்துடன் வடமாகாணத்தின் மாற்று வலுவுள்ள 35 வயதுக்குட்பட்ட சிறார்களையும், இளைஞர்களையும் அவர்களின் கல்வி, தொழில் மற்றும் வாழ்வாதாரத்துக்கான செயற்பாடுகளுக்கும் பல்வேறு வழிகளில் உதவிகளை வழங்கி அவர்களின் வாழ்வு மேம்பட தங்குமிட வசதியுடன் அவர்களை அரவணைக்கவுள்ள பெற்றோர்களே! சமூக சேவையாளர்களே! உதவி தேவைப்படும் மாற்றுவலுவுள்ள சிறார்களை நீங்கள் அறிந்திருந்தால் சர்வதேச மாற்றுவலுவுள்ளோர் தினமான டிசெம்பர் 3ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்குக் கீழ்வரும் முகவரியில் சமுகமளித்து அவர்களின் வாழ்வு பிரகாசிக்க உறுதுணையாக இருங்கள்

**Gods Own Children Foundation**

மாற்றுவலுவுள்ளோர் சிறுவர் காப்பகம்,
அச்சுவேலி அரசினர் வைத்தியசாலை அருகில், அச்சுவேலி.

தொடர்புகளுக்கு: 077 3627055, 077 4083656 , 021 222 5796.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

## மீண்டும் ஒரு பொறியில் வீழ்த்த முனையாதீர்!

இருபத்திரண்டு வருடங்களின் பின்னர், தாம் வளர்ந்த, பிறந்த சொந்த ஊரைப் பார்க்கச் சென்ற இளவாலை வடக்கு, வடமேற்கு மற்றும் வித்தகபுரம் மக்களுக்கு அங்கு காலடி வைத்ததும் உண்டான உணர்வுகளும், மகிழ்ச்சியும் எழுத்தில் வடிக்க முடியாதவை. தாயை விட்டும் பிரிந்துபோன கன்றுகளாக இத்தனை வருடங்களும் மனதுக்குள் அழுது நீர் வற்றியிருந்த அவர்களது கண்கள் தங்கள், காணிகளைப் பார்த்ததும் ஆனந்தக் கண்ணீர் மல்கின.

அரச படைகளின் பாதுகாப்புக் கருதியும், இராணுவத்தினரின் நடவடிக்கைகள் வெளியில் தெரியாமல் இருக்கவும் உயர்பாதுகாப்பு வலயமாக்கப்பட்ட குடாநாட்டின் பிரதேசங்களில் நீண்டு அகன்ற வலி.வடக்கும் ஒன்று. இப்போது, கடந்த வார இறுதியில் அப்பிரதேசத்தின் குறிப்பிட்ட மூன்று கிராமங்களும் மக்கள் பாவனைக்குத் திறந்துவிடப்பட்டன.

இந்தக் கிராமசேவகர் பகுதிகளில் இருந்த வீடுகளில் மிகப்பெரும்பாலனவை நிர்மூலமாகியுள்ளன. அந்தப் பிரதேசங்கள் முழுவதுமே புதர் மண்டிக் காணப்படுகின்றது. காணி எல்லைகள் எதுவும் இல்லை. மீளக்குடியமர அனுமதிக்கப்பட்ட போதிலும் சில இடங்களில் மிதிவெடிகள் வெடிக்கலாம் என அஞ்சப்படுகிறது.

குறிப்பிட்ட மூன்று பிரதேச மக்களும் விவசாயம், கடற்றொழில் மற்றும் பனைவளம் சார்ந்த தொழில்களில் ஈடுபட்டு பாடுபட்டு உழைத்து வாழ்க்கையில் முன்னேற்றம் கண்டவர்கள்.

விசேடமாகக் கூறுவதெனில் பனைவளம் சார் தொழில்களில், உற்பத்திகளில் சிறப்புப் பெயர்பெற்றவை இக்கிராமங்கள். கூவில் பனங்கள்ளைத் தேடிச் சென்று குடிக்கவேண்டும் என்றும், அப்பிரதேசப் பனங்கட்டி தரத்தில் சிறந்தது என்றும் பெயர் பெற்றவை. அவற்றால் மக்கள் நல்ல வருமானம் ஈட்டினர். அந்தப் பகுதிப் பனம் பாய்கள் அங்கு உற்பத்தி செய்யப்பட்ட பனங்கிழங்கு, பாணிப் பனாட்டு என்பனவும் தரமானவையும், அதன் காரணமாக பிரபல்யம் மிக்கனவும் ஆகும்.

காலையிலும், மதியத்திலும், மாலையிலும் என்று முப்பொழுதும் பல இன, ருசிமிக்க மீன் வகைகளை, பிடிக்கப்பட்ட சில மணிநேரத்தில் வாங்கக்கூடிய வாய்ப்பும் வசதிகளும் அந்தக் காலத்தில் இருந்தன.

முன்னர் குறிப்பிட்ட மூன்று கிராமங்களும் இயற்கை வளங்களாலும், உற்பத்தித் துறைகளாலும் செல்வம் கொழித்துச் சிறந்து இருந்தவை.

அந்தக் கிராமங்களில் மீளக்குடியேறி வாழத்துடித்த மக்களுக்கு இப்போது கதவு திறந்துவிடப்பட்டிருக்கிறது. ஆனால், தமது சொந்தக் கிராமங்களில் பழைய வாழ்க்கையைக் காணப் பல வருடங்கள் பிடிக்கும் என்ற ஏக்கநிலை அவர்களைப் பீடித்திருக்கிறது. இவர்களுக்கு உரிய புனர்வாழ்வு, புனர்நிர்மாணப் பணிகள் உடனடியாகத் தொடங்கப்படவேண்டும். அரசும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளும் அவை குறித்து உடனுக்குடன் உரிய அக்கறை செலுத்த வேண்டும்.

உயர்பாதுகாப்பு வலயம் நீக்கப்பட்டுவிட்டது; மக்கள் அங்கு மீளக்குடியமர அனுமதிக்கப்பட்டுவிட்டார்கள் என்று பிரசாரம் செய்து, வாய்ச் சம்பிரதாயம் நடத்தினால் மட்டும் போதாது. அவர்கள் தமது பழைய வாழ்க்கை நிலைக்கு விரைவில் திரும்புவதற்கு உரிய சகல வசதிகளும் இயன்றளவு குறுகிய கால இடைவெளியில் செய்து கொடுக்கப்படவேண்டும். அதற்கான முழுப் பொறுப்பையும் அரசாங்கமும் அதன் அதிகாரிகளும் பகிர்ந்துகொள்ள வேண்டும்.

குடியிருப்பு வசதி, மக்கள் தத்தமது தொழில்களைச் செய்வதற்கான உதவிகள் மற்றும் வாழ்க்கையைத் தொடங்குவதற்கான மூலாதார வசதிகள் விரைந்து செய்யப்படவேண்டும்.

மூன்று கிராமங்களும் நீண்டு முடிவுறும் பகுதியில் அமைக்கப்பட்ட இராணுவப் பாதுகாப்பரண் இன்னும் நீக்கப்படவில்லை. அதனை அண்டிய பகுதிகளில் மிதிவெடி அபாயம் என்ற அறிவிப்புப் பலகை தொடர்ந்து இருக்கிறது. அதாவது இன்னும் மிதிவெடி அபாயம் இருப்பதாக எச்சரிக்கப்படுகிறது. அப்பகுதியில் மீளக்குடியமர இருக்கும் மக்களுக்கு உயிராபத்து நிகழக்கூடும் என்பதனை மறைமுகமாகச் சொல்வதாக உள்ளது இது.

மக்கள் தமது காணிகளைத் துப்பரவு செய்து குடியமர ஆயத்தமாவதற்கு முன்னர், மிதிவெடி ஆபத்து நீக்கப்பட வேண்டும். மேலும் காடுகளாக மாறியுள்ள முந்திய குடியிருப்புப் பகுதிகளில் உள்ள பற்றைகளை வெட்டித் துப்புரவாக்க பெரும் பணம் செலவாகும். இது விடயத்தில் பரப்புக்கு ஆயிரம் ரூபா மட்டுமே உதவிப் பணமாக அரசினால் வழங்கப்படுகிறது. இது குறித்தும் அரசும், அதிகாரிகளும் மறுபரிசீலனை செய்வது அவசியம்.

குடாநாட்டின் மூன்று பிரதான வளங்களும் நிறைந்த ஒரு பகுதியிலிருந்து உயர்பாதுகாப்பு வலயத்தை நீக்கி விட்டோம், அங்கு மீளக்குடியமர்வதற்கான ஏற்பாடுகளுக்கு உதவுவோம் என்று பிரசித்தப்படுத்துவதனால் அந்தப் பகுதியில் - குறிப்பிட்ட மூன்று கிராம சேவையாளர் பிரிவுகளைச் சேர்ந்த கிராமங்களில் - வசித்த மக்கள் உரிய பலனைப் பெறமுடியாது. மொத்தத்தில் அரசும் அதன் உயரதிகாரிகளும் நடத்திய நாடகமாக அல்லது ஏமாற்று முயற்சியாக இது மாறக்கூடாது என்பதனை இடித்துரைக்க விரும்புகிறோம்.

இருபத்திரண்டு வருடங்களாத் தமது சொந்தப் பூமியை இழந்துவிட்ட உணர்வில் ஏங்கித் தவித்து வாடிய - பல இடங்களுக்கு மாறி மாறி, அனுபவிக்கக்கூடாத இன்னல்களை எல்லாம் எதிர்கொண்ட - இம்மக்களை மீண்டும் ஒரு பொறியில் வீழ்த்த முனையக்கூடாது.

# மீள் குடியேற்ற வீடமைப்புப் பணிகளுக்கு மணல் பெறுவதில் நெருக்கடி நிலைமை

### இணையத் தலைவர் அரச அதிபருக்கு கடிதம்

யாழ்ப்பாணம், டிசெ, 2

மீள்குடியேற்றம் தொடர்பான வீடமைப்பு வேலைகளை மேற்கொள்ளும் அரசசார்பற்ற நிறுவனங்கள் கட்டட வேலைகளுக்குத் தேவையான மணலைப் பெற்றுக் கொள்வதில் பெரும் நெருக்கடிகளை எதிர்கொண்டு வருகின்றன என்று யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம் தெரிவித்துள்ளது.

இந்த விடயம் தொடர்பாக இணையத் தலைவர் வி.கேசவன் ஒப்பமிட்ட கடிதம் ஒன்று யாழ். அரச அதிபருக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

மீள்குடியேற்றம் தொடர்பான வீடமைப்பு வேலைகளை மேற்கொள்வதற்கு எமது அரச சார்பற்ற நிறுவனங்கள் தேவையான நேரத்தில் கட்டட வேலைக்கான மணலைப் பெறுவதில் பாரிய சிரமங்களை எதிர் கொள்ள வேண்டியுள்ளது.

மணல் விநியோகத்துக்குப் பொறுப்பான நிறுவனத்திடம் உரிய கட்டணம் செலுத்திய பின்பு நீண்ட காலம் விநியோகத்திற்காக காத்திருக்க வேண்டிய நிலை உள்ளது.

இவ்வாறு மணல் பெறுவதற்கு மிகவும் சிரமப்படுகின்றமையால் எமது அங்கத்துவ நிறுவனங்கள் தாம்மேற்கொள்ளும் குடிசைகள் மற்றும் வீடமைப்புத்திட்டங்களை ஒப்புக்கொள்ளப்பட்ட நேரத்திற்குள் பூர்த்திசெய்யமுடியாது சிரமத்துக்குள்ளாகின்றன.

இதனால் வேலைகளைப் பூர்த்தி செய்யும் முகமாக வெளிச்சந்தையில் மிகவும் அதிகரித்த விலையில் மணல் கொள்வனவு செய்ய வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு உள்ளாவதுடன் அதிகரித்த செலவீனத்தால் ஏற்படும் தாக்கத்தையும் தாங்க வேண்டி உள்ளன.

ஜனாதிபதி செயலணியால் அனுமதி வழங்கப்பட்ட அனைத்துத் திட்டங்களையும் டிசெம்பர் 31 ஆம் திகதிக்கு முன்னதாக எவ் வித தடங்கலுமின்றி முடிக்கும்படி பணித்துள்ளதும் தாங்கள் அறிந்ததே.

இதே நிலையே சாதாரண பொது மக்களுக்கும் ஏற்படுகின்றது.

பொதுமக்களைப் பொறுத்தவரையில் முற்பணம் செலுத்திய பின்னரும் மணல் பெறுவதற்காக பல மாதங்கள் காத்திருக்க வேண்டியுள்ளது.

இந்த விடயத்தில் தாங்கள் உடனடியாக தலையிட்டு மணல் விநியோக நடமுறையை சீர் செய்து நிர்ணயிக்கப்பட்ட விலையில் சகலரும் மணல் பெறவதற்குரிய ஏற்பாடுகளை மேற்கொள்ளும்படி வேண்டிக்கொள்கின்றோம். - என்றுள்ளது.(ம)

# நவம்பர் மாதம் 492.2 மி.மீ.மழை குடாநாட்டில் பதிவாகியுள்ளது

யாழ்ப்பாணம், டிசெ. 02

யாழ். குடாநாட்டில் கடந்த நவம்பர் மாதம் 492.2 மில்லிமீற்றர் மழை பதிவாகியுள்ளது. தற்போதுள்ள மழைக் காலநிலை இன்னும் ஒருவார காலத்திற்கு தொடரும் சாத்தியக் கூறுகள் உள்ளது என்று வளிமண்டலவியல் திணைக்களத் தின் யாழ். பிராந்தியப் பணிமனையின் வானிலை அவதானிப்பாளர் ரி.பிரதீபன் தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில்:-

நவம்பர் மாதம் 26 ஆம் திகதி தொடக்கம் 27ஆம் திகதி வரையான 24 மணி நேரத்தில் 118.2 மி.மீ. மழை பதிவாகியுள்ளது.

அதேபோல 27ஆம் திகதி தொடக்கம் 28ஆம் திகதி வரையும் 7.3 மில்லிமீற்றர் மழையும், 28ஆம் திகதி தொடக்கம் 29ஆம் திகதி வரையும் 33.8 மில்லிமீற்றர் மழையும், 29ஆம் திகதி தொடக்கம் 30 ஆம் திகதி வரையும் 10.6 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சியும் பதிவாகியுள்ளது.

அத்துடன் இந்த வருடம் ஆரம்பம் தொடக்கம் நவம்பர் 30ஆம் திகதி வரையும் பெய்த மழை வீழ்ச்சியின் மொத்த அளவு 1120.8 மில்லி மீற்றர் ஆகப்பதிவாகியுள்ளது.

அதேபோல் கடந்த வருடம் நவம்பர் மாதத்துக்கான மழைவீழ்ச்சி 371.6 மில்லிமீற்றர் பதிவாகியுள்ளது.

நவம்பர் மாதத்தில் 24 மணி நேரத்தில் பெய்த அதிகூடிய மழை வீழ்ச்சியாக 50.7 மில்லிமீற்றர் பதிவாகியுள்ளது. கடந்த வருடம் ஜனவரி மாதம் தொடக்கம் நவம்பர் மாதம் இறுதி வரையும் 1270.9 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சி பதிவாகியிருந்தது. டிசெம்பர் மாதம் 401.7 மில்லிமீற்றர் மழை பதிவாகியிருந்தது - என்றார். (ம-14)

# பரீட்சை அனுமதி அட்டையில் தவறிருப்பின் கோட்டக்கல்வி அதிகாரியுடன் தொடர்பு கொள்க

### சாதாரணதர மாணவர்களுக்கு அறிவுறுத்து

யாழ்ப்பாணம்,டிசெ.2

ஜி.சீ.ஈ.சாதாரணதரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களின் பரீட்சை அனுமதி அட்டைகளில் தவறுகள் இருப்பின் எதிர்வரும் 6 ஆம் திகதிக்கு முன்னர் தத்தமது கோட்டக் கல்விப் பணிப்பாளர்களுடன் தொடர்பு கொள்ளுமாறு வட மாகாணக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் அறிவித்துள்ளார்.

எதிர்வரும் 13 ஆம் திகதி நடைபெறவுள்ள சாதாரணதரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கான அனுமதி அட்டைகள் விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

அந்த அனுமதி அட்டைகளில் தவறுகள் ஏதுமிருப்பின் தத்தமது கோட்டக்கல்விப் பணிப்பாளர்களுடன் நேரடியாகத் தொடர்புகொள்ளும் பட்சத்தில் அவர் பரீட்சைத் திணைக்களத்திற்கு நேரடியாகச் சமுகமளித்து அங்கு விவரங்களைக் கையளித்து அனுமதி அட்டைகளின் தவறுகளை நிவர்த்தி செய்து கொடுப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இந்த விடயத்தில் மாணவர்கள் கவனமெடுத்துச் செயற்படுமாறும் அவர் மேலும் அறிவுறுத்தியுள்ளார். (ம-9)

# பூநகரி - சங்குப்பிட்டி பாலம் ஜனவரியில் திறந்து வைப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 2

பூநகரி - சங்குப்பிட்டி பாலத் திறப்பு வைபவம் எதிர்வரும் ஜனவரி மாதத்திற்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

பூநகரி - சங்குப்பிட்டி பால வேலைகள் பூரணமாக முடிவடைந்த நிலையில் எதிர்வரும் 10 ஆம் திகதி ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் திறந்து வைப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

இருப்பினும் மழை காரணமாக இந்த நிகழ்வு ஜனவரி மாதத்திற்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (ம-15)

## நாளை

கார்த்திகை 17 : 03.12.2010
வெள்ளிக்கிழமை
திதி: : திரயோதசி
பி.இ. 02.10 வரை
நட்சத்திரம் : சுவாதி
மு.இ. 08.25 வரை
சுபநேரம் : 06.15-07.45 வரை
ராகுகாலம் : 10.45-12.15 வரை

# முயற்சி திருவினையாக்கும்

மனித அச்சினுள் தெய்வத்துவம் நிரப்பப் பெற்றவனே மனிதன். ஒவ்வொன்றும் அவ்வாறேதான். ஆனால் இந்த ஒப்பற்ற தன்மையை அறியும் திறமை பெற்றிருப்பது மனிதனுக்கு மட்டுமே உள்ள தனிச்சிறப்பு. இதுவே மனிதனுக்கு உபநிடதங்கள் கூறும் செய்தி. இந்தச் செய்தியே சாதுக்களின் முழக்கங்களிலும், மறை நூல்களிலும் எதிரொலிக்கிறது.

நீயும், பிரபஞ்ச முழுவதிலும் நிறைந்திருப்பதும் ஒன்றே. நீயும் நித்தியமும் ஒன்றே. நீ தனி மனிதனல்ல. குறிப்பிட்ட ஒருவனுமல்ல. தற்காலிகமும் அல்ல. இதனை உணர்ந்துகொள். இதனை அறிந்து கொள். அதற்கு இசைவாகச் செயற்படு.

உனது முயற்சிகளை ஊக்குவிக்கவும், தேவையான உதவிகளைத் தரவுமே நான் காத்துக்கொண்டிருக்கின்றேன்.தெரிவுசெய்வது உன்னைப் பொறுத்தது. எப்பொழுது என்று தீர்மானிப்பதும் உன்னைப் பொறுத்தது. ஆனால், நான் ஒவ்வொரு கணமும் உனது முயற்சியை ஆவலோடு எதிர்பார்த்துக் காத்துக் கொண்டிருக்கின்றேன்.

கருடனும் சிறகை விரித்துப் பறக்காவிட்டால் எந்தத் தூரத்தையும் தாண்ட முடியாது. சிறு எறும்பும் தன் சின்னக்கால்களை வைத்து முதலடி எடுத்துத்தான் நீண்ட தூரங்கள் பயணிக்கிறது. ஆகாயவிமானம் மேலெழும்பிப் பறக்காவிட்டால் எந்தத் தூரமும் சாத்தியமில்லை.ஆரம்பிப்பது உனது சுய இச்சை. அந்த உனது சுதந்திரத்தில் நான் குறுக்கிடமாட்டேன். தொடக்கப்பட்டால் அதை முடித்துவைப்பது எனது பொறுப்பு.



கட்டுப்பட்டிருப்பதல்ல, சுதந்திரமாக இருப்பதே உனது பிறப்புரிமை. பிரபஞ்சத்துக்குப் பொதுவான எல்லையற்ற தர்மத்தால் ஒளியூட்டப்பட்ட நீ உன்னை அதன் வழியில் நடத்திக் கொண்டு போகும்போது தான் நீ உண்மையான சுதந்திரமாய் இருக்கிறாய்.

சாயி சிந்தனை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சேவைநலன் பாராட்டும் பிறந்தநின வாழ்த்தும்



**சண்முகம் சொல்வேந்தன்**

(நிறைவேற்று உத்தியோகத்தர்)
இலங்கை வங்கியில் கடந்த 34 வருடங்கள் சிறந்த சேவையாற்றி இன்றுடன் ஓய்வுபெற்றுச்செல்லும் **சண்முகம் சொல்வேந்தன்** அவர்களை பிறந்த நாளாகிய இன்று பல்லாண்டு காலம் வாழ்க வளத்துடன் என வாழ்த்துகின்றோம்

முகாமையாளரும்,
சக ஊழியர்களும்
இலங்கை வங்கி
2 ஆம் மேற்தரக் கிளை
ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

(572851)


# மானிப்பாயில் வீதியோரக்கடைகள் பொலிஸ் உதவியுடன் அகற்றல்

மானிப்பாய் பிரதேசத்தில் போக்குவரத்துக்கு இடையூறு ஏற்படுத்தும் வகையில், பிரதேச சபையின் அனுமதியின்றி வீதியோரங்களில் அமைக்கப்பட்டுள்ள வர்த்தக நிலையங்கள் பொலிஸாரின் உதவியுடன் அகற்றப்படவுள்ளன. இதற்கான ஒழுங்குகளைச் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மேற்கொண்டுள்ளனர்.

நாட்டில் ஏற்பட்டுள்ள சமாதானச்சூழ் நிலையைத் தொடர்ந்து வாகனப் போக்குவரத்தும் மக்கள் நடமாட்டங்களும் அதிகரித்துள்ள இவ் வேளையில் வலி.தென் மேற்குப் பிரதேசத்தில் மானிப்பாய் பட்டினத்தில் பிரதேச சபையின் அனுமதியின்றி வீதியோரங்களில் வர்த்தக நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இது குறித்து பொதுமக்கள் வலி. தென் மேற்குப் பிரதேச சபையின் கவனத்திற்குக் கொண்டுவந்துள்ளதைத் தொடர்ந்து, பிரதேச சபையின் அனுமதியின்றிப் போக்குவரத்துக்கு இடையூறு ஏற்படுத்தும் வகையில் வீதியோரங்களில் அமைக்கப்பட்டுள்ள வர்த்தக நிலையங்களை அகற்றுவதற்கான ஒழுங்குகளை பிரதேச சபை மேற்கொண்டுள்ளது.

இது குறித்து சம்பந்தப்பட்ட வர்த்தகர்களுக்கு அறிவிக்கப்பட்ட போதிலும், அவற்றை அகற்ற முற்படாததினால் பொலிஸாரின் உதவியுடன் வர்த்தக நிலையங்கள் அகற்றப்படவுள்ளன.(201- 115)


## SALE! SALE! SALE!

நத்தார் புதுவருடத்தை முன்னிட்டு | அதிரடி விலைக்கழிவு

எமது அன்பு வாடிக்கையாளரின் வேண்டுகோளுக்கிணங்க
01.12.2010 - 31.12.2010 வரை
ஆடவர், பெண்கள், சிறுவர்களுக்கான அனைத்துப் புடைவைத் தினுசுகளையும் மாணவ மாணவிகளுக்கான சீருடைத் துணிவகைகளையும் மிகவும் குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

**லைடன் புடைவை நிலையம்**

410, ஆஸ்பத்திரி வீதி, (பஸ்நிலையம் முன்பாக) யாழ்ப்பாணம்.


## மஹஜன சம்பத — Mahajana Sampatha

அலுவலக முடிவுகள்

30.11.2010

சீட்டிழுப்பு இல. 2325

வெற்றி எழுத்து: P — வெற்றி எண்கள்: 1 4 1 7 6 7

வலமிருந்து இடமாக பரிசு அமைப்பு

| பரிசு | எழுத்து/எண்கள் | தொகை | பரிசுகள் |
|---|---|---|---|
| சுப்பர் பரிசு | P 1 4 1 7 6 7 | ரூபா. 12,314,885/= | பரிசு - |
| 1 பரிசுகள் | 1 4 1 7 6 7 | ரூபா. 2,000,000/= | பரிசுகள் 01 |
| 2 பரிசுகள் | 4 1 7 6 7 | ரூபா. 100,000/= | பரிசுகள் 12 |
| 3 பரிசுகள் | 1 7 6 7 | ரூபா. 10,000/= | பரிசுகள் 129 |
| 4 பரிசுகள் | 7 6 7 | ரூபா. 1,000/= | பரிசுகள் 1270 |
| 5 பரிசுகள் | 6 7 | ரூபா. 100/= | பரிசுகள் 12563 |
| 6 பரிசுகள் | 7 | ரூபா. 20/= | பரிசுகள் 124888 |

இடமிருந்து வலமாக பரிசு அமைப்பு

| பரிசு | எழுத்து/எண்கள் | தொகை | பரிசுகள் |
|---|---|---|---|
| 7 பரிசுகள் | 1 4 1 7 6 | ரூபா. 10,000/= | பரிசுகள் 12 |
| 8 பரிசுகள் | 1 4 1 7 | ரூபா. 1,000/= | பரிசுகள் 125 |
| 9 பரிசுகள் | 1 4 1 | ரூபா. 100/= | பரிசுகள் 1265 |
| 10 பரிசுகள் | 1 4 | ரூபா. 50/= | பரிசுகள் 12513 |
| 11 பரிசுகள் | P | ரூபா. 20/= | பரிசுகள் 49759 |

இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்தப் பரிசுத் தொகை Rs. 11,506,390.00

அடுத்த சீட்டிழுப்பிற்கான சுப்பர் பரிசு Rs. 13,429,579.00

உங்களின் செழிப்பு நாட்டின் செழிப்பு
தேசிய லொத்தர் சபை
234/2 காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி: 2470662, 4607000, Hotline: 2433631 மின்னஞ்சல்: www.nlb.lk

## அபிவிருத்தி அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

1247 நீலம் — 30-11-2010

வெற்றி இலக்கங்கள்: 07 14 38 47 — மீனம்

ஜக்பொட் பரிசு ரூபா. 6,566,825/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 229,640 | 20/- | 4,592,800/- |
| 2 இலக்கங்கள் | 21,162 | 40/- | 846,480/- |
| 1 இல. + லக்கினம் | 20,901 | 60/- | 1,254,060/- |
| 2 இல. + லக்கினம் | 1,839 | 200/- | 367,800/- |
| 3 இலக்கங்கள் | 550 | 1000/- | 550,000/- |
| 3 இல. + லக்கினம் | 56 | 10,000/- | 560,000/- |
| 4 இலக்கங்கள் | 03 | 200,000/- | 600,000/- |
| 4 இல. + லக்கினம் | - | 6,566,825/- | - |
| பிரதான சீட்டிழுப்பில் பரிசுகளின் மொத்தம் | | | 8,771,140/- |
| இரண்டாம் வாய்ப்புக்கான பரிசுகள் | 622 | | 1,309,500/- |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | 274,773 | | 10,080,640/- |

இந்த வெள்ளிக்கிழமை சுப்பர் பரிசுத் தொகை ரூபா 7,079,700/-

### இரண்டாவது வாய்ப்பு

வெற்றி இலக்கங்கள்: 26 40 51 54

ஜக்பொட் பரிசு ரூபா. 800,000/- வெல்லப்பட்டுள்ளது

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 3 இலக்கங்கள் | 619 | 500/- | 309,500/- |
| 4 இலக்கங்கள் | 2 | 100,000/- | 200,000/- |
| 4 இல. + லக்கினம் | 1 | 800,000/- | 800,000/- |
| இரண்டாவது வாய்ப்புக்கான மொத்தத் தொகை | 622 | | 1,309,500/- |

அடுத்த வெள்ளிக்கிழமைக்கான இரண்டாவது வாய்ப்பின் ஜக்பொட் ரூபா. 200,000/-

நெஞ்சம் நெகிழும் நினைவுகளுடன்

# 45ஆம் நாள் நினைவலைகள்



மண்ணில்: 15.10.1938 — விண்ணில்: 19.10.2010

## அமரர் முத்துத்தம்பி தம்பிராசா (துரை)

அன்பான அப்பாவே! எங்களை விட்டு நீங்கள்
பிரிந்தபோது எமது சந்தோஷம், அரவணைப்பு
உறவு, பந்தம், பாசம் அனைத்தையும்
கூடவே எடுத்துச்சென்றுவிட்டீர்கள் எஞ்சி இருப்பவை
வலி, துக்கம், கவலை, கண்ணீர் மட்டும்தான்

உங்கள் நினைவுகளுடன்: குடும்பத்தினர்
உடுவில் மகளிர் பாடசாலை மேற்கு வீதி, உடுவில் சுன்னாகம்.
ஹம்சிகா பான்சி ஹவுஸ்
மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

# மரண அறிவித்தல்

## திருமதி இராசையா முத்தம்மா



ஏழாலை வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராசையா முத்தம்மா நேற்று முன்தினம் (30.11.2010) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பிமுத்து - வள்ளிப்பிள்ளை தம்பதியரின் அன்புமகளும் காலஞ்சென்றவர்களான கந்தையா சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற இராசையாவின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான சிவராசா, பாலசுந்தரம், சரவணமுத்து மற்றும் கிருஷ்ணமூர்த்தி (ஜேர்மனி), கணேசமூர்த்தி (கனடா) காலஞ்சென்ற இரத்தினசிங்கம் மற்றும் சரோஜினிதேவி (ஜேர்மனி), சாந்தினிதேவி (ஜேர்மனி), சாரதாதேவி (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தாயும் தவமணி, இராசலட்சுமி, சரோஜினிதேவி, ஜெயவதனா (ஜேர்மனி), மாலினி (கனடா), காலஞ்சென்ற ஜெயதேவன் மற்றும் சிறிதரன் (ஜேர்மனி), ஜெயபாலசேகரன் ஆகியோரின் அன்பு மாமியும் கல்யாணி, சுகந்தி, கோபால், ராஜி, குமுதி, தனம், சசி, ராசன், ஜீவன், வினோ, நதியா, கரன், விரோணிக்கா, ஜெனன், ஜெனாத், கனிஸ்ரன், சுவிஸ்ரன், அனிஸ்ரன், றூபி, சுதா, துஷ்யந்தன், லதா, கிளாடியா, டியானா, அபிலாஷ், ஜெயசாந், ஜெய்தா, சகானா ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (02.12.2010) வியாழக்கிழமை மு.ப. 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் உசத்தியோடை இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஏழாலை வடக்கு,
ஏழாலை.

(106758)

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிதிவெடி அபாயம் நிறைந்துள்ள

# சேந்தாங்குளம் - கீரிமலை வீதிக்கு வடக்கே பொதுமக்கள் செல்வதைத் தவிர்க்கவும்

## வலி.வடக்கு பிரதேச செயலர் அறிவுறுத்து

யாழ்ப்பாணம், டிசெ.2

வலி.வடக்கில் மீள்குடியமர்வுக்கு அனுமதிக்கப்பட்ட மூன்று கிராம சேவையாளர் பிரிவுகளில் இளவாலை வடக்குப் பிரிவில் ஜே/222 சேந்தாங்குளம் - கீரிமலை வீதியின் வடக்குப் பக்கமாக உள்ள சில பகுதிகளுக்குச் செல்ல வேண்டாமென்று பொது மக்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மிதிவெடி அபாயம், பாதுகாப்பு அரண் (மண் அணை) ஆகியன காணப்படுவதால் மறுஅறிவித்தல் வரை அப்பகுதியில் நடமாட வேண்டாமென்று வலி. வடக்குப் பிரதேச செயலர் எஸ். முரளிதரன் அறிவுறுத்தியுள்ளார்.

பன்னாலை சேர்.கனகசபை வித்தியாலயத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற வலி.வடக்கில் மீள்குடியமர்வுக்கு அனுமதிக்கப்பட்ட பகுதி மக்களுடனான சந்திப்பின்போது அவர் மேற்கண்டவாறு அறிவுறுத்தலை வழங்கியுள்ளார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:-

வலி.வடக்குப் பகுதியில் மீள்குடியமர்வுக்கு அனுமதிக்கப்பட்ட இளவாலை வடக்கு, இளவாலை வடமேற்கு, வித்தகபுரம் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வகையில் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அத்துடன் பொதுமக்கள் தமது காணிகளில் உள்ள பற்றைகளைத் துப்புரவு செய்யும்போது அவதானமாகச் செயற்பட வேண்டும்.

ஏதாவது அபாயகரமான பொருள்களைக் கண்டால் பிரதேச செயலகத்துக்கோ, அல்லது அருகில் உள்ள இராணுவ முகாமுக்கோ தகவல்களை வழங்க வேண்டும்.

இப்பகுதியில் சேந்தான்குளம்-கீரிமலை வீதியின் வடக்குப் பக்கமாக உள்ள சில பகுதிகளுக்கு மறுஅறிவித்தல் வரை உட்பிரவேசிக்க வேண்டாம் - என்றார். (ம-9)

## சேவைக்குப் பரிசு...



கௌரவிப்பு: சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியின் முன்னாள் அதிபர் திருமதி அ.வேலுப்பிள்ளை சேவை நலன் பாராட்டு விழாவும் புதிய அதிபராகக் கடமையேற்கும் வை.ஸ்ரீகாந்தனின் வரவேற்பு விழாவும் அண்மையில் இடம்பெற்றது. நிகழ்வில் கல்லூரியின் முன்னாள் அதிபர் திருமதி அ.வேலுப்பிள்ளைக்கு கல்லூரி பழைய மாணவர் பாக்டர் செ.கண்ணதாசன் பொன்னாடை வழங்குகிறார். புதிய அதிபராகக் கடமையேற்கும் வை.ஸ்ரீகாந்தனும் படத்தில் உள்ளார். (201)

# டெங்கின் தாக்கம் கட்டுப்பாட்டில் இருப்பினும் தொடர்ந்தும் விழிப்புடன் செயற்படுங்கள்

## யாழ். அரச அதிபர் அறிவிப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.2

குருநகர், நாவாந்துறை பிரதேசங்களைத் தவிர ஏனைய இடங்களில் டெங்கு நோயின் தாக்கம் கட்டுப்பாட்டில் உள்ளது. எனினும் மழை பெய்யத் தொடங்கியுள்ளதால் அனைவரும் தொடர்ந்து விழிப்புடன் செயற்படவேண்டும்.

டெங்கு ஒழிப்பு வாரத்தை முன்னிட்டு யாழ்.அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்:-

இந்தவாரம் டெங்கு ஒழிப்பு வாரமாக (டிசெம்பர் 1-7) பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. யாழ்ப்பாணத்தில் ஓரளவு கட்டுப்பாட்டிலிருந்த டெங்கு நோயின் தாக்கம் தற்போது பெய்துள்ள மழையினால் மீண்டும் அதிகரித்துள்ளது.

முன்னர் மேற்கொள்ளப்பட்ட டெங்கு ஒழிப்பு நடவடிக்கை ஓரளவு வெற்றியைத் தந்துள்ளது. இருப்பினும் இன்னமும் குன்றும் குழியுமாக காணப்படும் இடங்களில் தேங்கி நிற்கும் நீரினால் டெங்கு நுளம்பு அதிகரிக்கும் சாத்தியம் காணப்படுகிறது.

எனவே அவ்வாறான இடங்களை நிரப்பி சீர்செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

அதேசமயம் பல்கலைக்கழக மருத்துவப் பீட வளாகத்தில் காணப்படும் கழிவுகளை ஊழியர்கள் உரிய முறையில் அகற்றாமையினால் மாணவர்கள் சிரமங்களை எதிர்நோக்குவதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. அவற்றை அகற்ற நடவடிக்கை எடுக்குமாறும் பணிக்கப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்டத்தில் காணப்படும் 'பங்கர்'களை மூடிவிடுவதற்கு சிவில் அலுவலகத்தினர் சம்மதித்துள்ளனர். அதற்கேற்றவாறு சில 'பங்கர்'கள் மூடப்பட்டுவிட்டன. ஏனையவற்றையும் மூடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகள் சகல மட்டங்களிலும் வேகமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன - என்றார். (ஒ-15)

# கழிவுநீர் வாய்க்கால்கள் உரியமுறையில் பேணப்படுவதில்லை என விசனம்

கைதடி, டிசெ.2

கைதடிச் சந்தியில் உள்ள கழிவு நீர் ஓடும் வாய்க்கால்கள் பிரதேச சபை ஊழியர்களால் உரிய முறையில் பேணப்படுவதில்லையென கைதடி வணிகர் கழகத்தில் அங்கம் வகிக்கும் வர்த்தகர்கள் சிலரால் விசனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி கழிவுநீர் வாய்க்கால்களின் உள்ளே பெருமளவு திண்மக்கழிவுகள் நிறைந்து இருப்பதாக தற்போது பெய்துவரும் மழையால் கழிவு நீர் வாய்க்கால்களில் மழைநீர் தேங்கி வெளியேற முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் அந்தப் பகுதியில் துர்நாற்றம் வீசுவதுடன் டெங்கு போன்ற பாரிய நோய்கள் பரவ வாய்ப்புள்ளதாகவும் கூறப்படுகின்றது.

இது சம்பந்தமாக ஊழியர்களுக்குத் தெரியப்படுத்தியும் அவற்றை சீர்செய்ய பின் நிற்கின்றனர். எனவே இவ்விடயத்தில் பிரதேச சபை உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் வர்த்தகர்களால் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (201-288)

# பழைய வீட்டை இடித்த வேளையில் சுவர் இடிந்து வீழ்ந்து குடும்பஸ்தர் சாவு

## சாவகச்சேரி கச்சாய் வீதியில் சம்பவம்

யாழ்ப்பாணம், டிசெ.2

சாவகச்சேரி, கச்சாய் வீதியில் பழைய வீடொன்றை இடித்த வேளை சுவர் இடிந்து வீழ்ந்து குடும்பஸ்தர் ஒருவர் மரணமாகியுள்ளார்.

நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் நடைபெற்ற இந்தச் சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையான டானியல் தேவகுமார் (வயது36) என்பவரே உயிரிழந்தவர் ஆவார்.

சம்பவம் பற்றி தெரியவருவதாவது:- தனது காணியில் இருந்த பழைய வீடு ஒன்றை இடித்து அகற்றிக் கொண்டிருந்தபோது பின்புறமாக இருந்த மற்றைய சுவர் திடீரென இடிந்து வீழ்ந்துள்ளது.

இதில் சிக்குண்ட நிலையில் இவர் சம்பவ இடத்திலேயே மரணமானார் என்று தெரிவிக்கப்பட்டது.

சடலம் சாவகச்சேரி மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்பட்டு விசாரணைகளின் பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (ஓ-10-207)

# நல்லூர் பிரதேச சபை எல்லையில் 51.61 மில்லியன் செலவில் 11 வீதிகள் திருத்தம்

யாழ்ப்பாணம், டிசெ.2

நல்லூர்பிரதேச சபை எல்லைக்கு உட்பட்ட பரவைக்குளம் வீதி உட்பட பதினொரு வீதிகளுக்கான புனரமைப்பு வேலைகள் எதிர்வரும் 14ஆம் திகதி ஆரம்பமாகும் என நல்லூர் பிதேச சபையின் செயலாளர் மே. காந்தசீலன் தெரிவித்தார்.

உள்ளூராட்சி கட்டமைப்பு மேம்பாட்டுத்திட்டத்தின் கீழ் பிரதேச சபைப் பிரிவின் கீழ் 6.09 கிலோமீற்றர் தூரம் வரையான வீதிப் புனரமைப்புப்பணிகள் 51.61 மில்லியன் ரூபா செலவில் திருத்தியமைக்கப்படவுள்ளதாகவும் புனரமைப்புப் பணிகள் 8 மாதங்களில் பூர்த்தியடையும் என்றும் செயலாளர் சாந்தசீலன் மேலும் தெரிவித்தார். (ம-7)

குடாநாட்டின் பிரதேசச் செய்திகள்

# சாவகச்சேரி நடமாடும் சேவையில் 106 முதியோருக்கு அ.அட்டைகள்

யாழ்ப்பாணம், டிசெ.2

சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற நடமாடும் சேவையில் 106 முதியவர்களுக்கு முதியோர் அடையாள அட்டைகள் விநியோகிக்கப்பட்டுள்ளன.

நடமாடும் சேவையில் முதியோர் அடையாள அட்டைக்கு விண்ணப்பித்த முதியவர்களுக்கு இலவசமாக புகைப்படம் எடுத்து வழங்கி உடனுக்குடன் முதியோர் அட்டைகள் பிரதேச சமூக சேவைகள் பிரிவினரால் விநியோகிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

மேற்படி நடமாடும் சேவையில் சான்றிதழ் பெற்றுக் கொடுக்கும் நிகழ்வில் 300 பேருக்கு இலவசமாக சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (201-207)

# பிரான்பற்றில் ஆயுள்வேத வைத்தியசாலை



பிரான்பற்றில் அமைக்கப்பட்டுள்ள கிராமிய ஆயுள்வேத வைத்தியசாலை திறந்து வைப்பதற்காகக் காத்திருக்கிறது

பண்டத்தரிப்பு, டிசெ.2

பிரான்பற்று மக்கள் நலன்புரிச் சங்கம், சுதேச வைத்தியர் திணைக்களத்திற்கு அன்பளிப்பாக வழங்கிய ஏழு பரப்பு நிலத்தில் ஒருகோடியே 85 லட்சம் ரூபா செலவில் நவீன வசதிகளுடன் கிராமிய ஆயுள்வேத வைத்தியசாலை அமைக்கப்பட்டுள்ளது.

இந்த வைத்தியசாலையில் 32 பேர் தங்கியிருந்து சிகிச்சை பெறக்கூடிய விடுதி வசதி உள்ளது.

மேற்படி வைத்தியசாலை மிக விரைவில் திறந்து வைக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (201-130)

# சண்டிலிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்கு விரைவில் நிரந்தரக் கட்டடம்

சண்டிலிப்பாய் டிசெ.2

சண்டிலிப்பாய் பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்கு நிரந்தரக் கட்டடம் அமைப்பதற்கு சமூக சேவையாளர் ஒருவர் 4பரப்புக் காணியை அன்பளிப்பாக வழங்க முன்வந்துள்ளார்.

இந்தக் காணியை நேரில் சென்று பார்வையிட்ட சம்பந்தப்பட்ட அதிகாரிகள் அனுமதி வழங்கியதைத் தொடர்ந்து மேற்படி காணி அந்தப் பகுதி மக்களால் சிரமதானம் மூலம் துப்புரவு செய்யப்பட்டுள்ளது.

மக்கள் மத்தியில் சுகாதார சேவையை பரவலாக்கும் திட்டத்தின் கீழ் ஒவ்வொரு பிரதேசத்திற்கும் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை நிறுவப்பட்டுச் செயற்பட்டு வருகின்றது. சில பணிமனைகள் சொந்தக் கட்டடத்திலும் சில பணிமனைகள் வாடகைக் கட்டடத்திலும் இயங்கி வருகின்றன.

சண்டிலிப்பாய் பிரதேசத்திற்காக ஆரம்பிக்கப்பட்டுள்ள சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை தற்பொழுது மானிப்பாய் கிறீன் வைத்தியசாலைக் கட்டடத்தின் ஒரு பகுதியில் இயங்கி வருகிறது.

இந்தப் பணிமனைக்கு நிரந்தரக் கட்டடம் அமைப்பதற்கு நவாலியைச் சேர்ந்த சமூக சேவையாளர் ஒருவர் டச்சு வீதியிலுள்ள 4 பரப்புக் காணியை அன்பளிப்பாக வழங்கியுள்ளார். (201-115)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குருப் பெயர்ச்சி உங்களுக்கு எப்படி?

## 21.11.2010 முதல் 07.05.2011 வரை

வாசகர்களே !
நீங்கள் எதிர்பார்த்துக் காத்திருந்த குருப் பெயர்ச்சி வந்து விட்டது. இதுவரை கும்ப ராசியில் சஞ்சரித்து சிறிது காலப் பகுதியில் குருவாசம் செய்து, பின் மீனத்துக்கு அதிகாரமாகச் சென்று, பலா பலன்களைக் கொடுத்து மீண்டும் கும்பத்துக்கு வந்து ஒரு சில நாள்கள் மட்டும் இருந்த குரு இப்பொழுது 12 ஆம் இடமான மீனராசியில் கடந்த 21ஆம் திகதி முதல் சஞ்சரித்து உங்களுக்கான பலா பலன்களை வழங்கவுள்ளார்.




நடுநிலைமையுடன் நடக்க விரும்பும் துலாம் இராசி அன்பர்களே! உங்கள் ராசிக்கு ஆறாம் இடத்தில் குருபகவான் பெயர்ச்சியாகி உள்ளார். ஏழரைச்சனியில் விரயச் சனியின் தாக்கம் ஒருபுறம் இருக்க, குருபகவானின் அமர்வும் உங்களுக்கு மேலும் சில இடைஞ்சல்களைத் தருவதாக இருக்கிறது. இருப்பினும் குருவின் பார்வை பெறுகிற இடங்கள் ஓரளவு பலன்களை வழங்கும். குரு தனது 5, 7, 9 ஆகிய பார்வையால் முறையே ராசிக்கு 10, 12, ஆகிய இடங்களை பார்க்கிறார். இந்நிலையில், உங்கள் உடல்நலம் பாதிக்கப்படலாம் என்பதால் மிகவும் சீரான உணவுப்பழக்கம், உடற்பயிற்சி, தியானம், நற்சிந்தனை தரும் அறநூல்களைப் படிப்பது போன்ற செயல்கள் உடலுக்கு நன்மை தரும். உங்கள் பேச்சு மற்றவர்களுக்கு ஏதோ வேதம்போல இருக்கும். ஆனால், நீங்கள் அந்த அறிவுரைகளைக் கடைப்பிடித்து விட்டால் வாழ்வில் சந்தோஷம் தான். பணவரவு அன்றையச் செலவுக்கு போதுமான அளவுக்கு இருக்கும். சேமிப்பையெல்லாம் இப்போது எதிர்பார்ப்பதற்கு இல்லை. சமூகப்பணியில் ஆர்வம் குறையும். சகோதர, சகோதரிகள் அன்புடன் நடந்து கொள்வர். வீடு, வாகன வகையில் பராமரிப்புச் செலவு அதிகரிக்கும். தாயின் தேவையை அறிந்து நிறைவேற்றுவீர்கள். புத்திரர்கள், உங்களது எண்ணங்களை உணர்ந்து அதற்கேற்ப செயல்படுவது மனதிற்கு ஆறுதலாக இருக்கும். இஷ்ட தெய்வ அருள் பெறுவதற்குரிய வழிபாடுகளைச் செய்வீர்கள். எதிரிகளால் பெரும் இடைஞ்சல் வர வாய்ப்பிருக்கிறது. இந்த நிலையில், நீங்கள்தான் அவர்களை விட்டு விலகியிருக்க வேண்டும். உணர்ச்சி வசப்படுத்தும் நிகழ்ச்சிகள் நடந்தாலும்கூட ஒதுங்கிப் போவது நன்மை தரும். தம்பதியரிடையே கருத்துவேறுபாடு ஏற்படும். தந்தைவழி உறவினர்கள் உதவி செய்வதுடன், சிக்கலான நேரங்களில் வழிகாட்டவும் செய்வர். இவ்வளவு இக்கட்டான நிலையிலும் சிலருக்கு பங்குச் சந்தை வகையிலோ, பிறவகைகளிலோ அதிர்ஷ்டப் பரிசுபெறும் வாய்ப்பு பலமாக உள்ளது. சுற்றுலா பயணத்திட்டம் இனிதாக நிறைவேறும். வெளிநாட்டு வேலை வாய்ப்பில் அதிக வருமானம் பெறுவீர்கள்.

**தொழிலதிபர்கள்:** பாத்திரங்கள், தோல், தண்ணீர் சார்ந்த பொருள்கள், புடைவைகள், வாகனம், கட்டுமானப் பொருள்கள், பீங்கான் உற்பத்தி செய்யும் தொழிலதிபர்கள் உற்பத்தி மற்றும் ஒப்பந்தம் பெறுவதில் பல்வேறு சிரமங்களை எதிர்கொள்வர். மிகுந்த முன்யோசனையுடன் நடந்தால் சிரமங்களில் இருந்து தப்பலாம். மற்றவர்களுக்கும் சுமாரான இலாபமே இருக்கும். கடன் தொந்தரவு மனச்சஞ்சலத்தை ஏற்படுத்தும். அனுபவம் நிறைந்த நிர்வாகப் பணியாளர்களை விட்டுவிடாதீர்கள். கல்வி, நிதி நிறுவனம், விடுதி மருத்துவமனை நடத்துபவர் சுமாரான அளவில் முன்னேற்றம் காண்பர்.

**வியாபாரிகள்:** நகை, புடைவை, மளிகை, அழகு சாதனப் பொருள்கள், பால் பொருள்கள், மாவு வகைகள், எண்ணெய், குளிர்பானம், மலர்வகை, மின்சார பொருள்கள், கண்ணாடி, பீங்கான், பிளாஸ்டிக், பேக்கரிப் பொருள்கள், தளபாடங்கள், மருந்து, கட்டுமானப் பொருள்கள், வாசனைத் திரவியங்கள், சோப்பு, இசைக்கருவி விற்பனை செய்பவர்கள் அபிவிருத்திப் பணிகளை நிறைவேற்றுவர். விற்பனை சீராகி ஓரளவு பணவரவைத்தரும். அனுபவம் இல்லாத பிற வியாபாரத்தில் கூட்டுச் சேர முயற்சிக்க வேண்டாம். வாகன பராமரிப்பில் செலவு கூடும்.

**பணியாளர்கள்:** அரசு மற்றும் தனியார் துறையில் பணிபுரிபவர்கள் பணியில் நேர்த்தியும் குறித்த காலத்தில் இலக்குகளை நிறைவேற்றுவதுமான தன்மை மிகுந்திடும். குடும்பத் தேவைகளை பூர்த்தி செய்வதற்கான கடன் நிர்

**தருபவர் வித்யா**

வாகத்திடம் எதிர்பார்த்த வகையில் கிடைக்கும். பணி பார்த்தபின் கிடைக்கும் ஓய்வு நேரத்தை சரியாக பயன்படுத்துவதால் உடல்நலம் புத்துணர்வு பெறும். சக பணியாளர்களுடன் சுமூக நட்பு இருக்கும். சிலருக்கு பணியிட மாற்றம், வெளியூர் வேலைவாய்ப்பு போன்றவற்றை எதிர்கொள்ளும் சூழ்நிலை உண்டு.

**பெண்கள்:** பணிபுரியும் பெண்கள் பணியிடங்களில் சுமூக சூழ்நிலை அமைந்து பணி இலக்கை எளிதாக நிறைவேற்றுவர். ஊக்கத்தொகை, சலுகை பயன் கிடைக்கும். குடும்பப் பெண்கள் கணவரிடம் தேவையற்ற வாக்குவாதம் பேசக்கூடாது. குடும்பச் செலவுகளுக்கான பணவசதி நிறைவாகக் கிடைக்கும். அன்றாட பணிகளுடன் உடல்நலத்திலும் கவனம் வேண்டும். சுயதொழில் புரியும் பெண்கள் கூடுதல் பணத்தில் தொழிலை அபிவிருத்தி செய்வர். உற்பத்தி சிறந்து உபரி பணவருமானம் கிடைக்கும்.

**மாணவர்கள்:** பொறியியல் மருத்துவம், இதழியல், விடுதி முகாமைத்துவம், விவசாயம், சட்டம், ஆசிரியர் பயிற்சி, சினிமா தொழில்நுட்பம், இரசாயனம், பௌதிகம், பொருளாதாரம், உயிரியல், வங்கியியல் துறை மாணவர்கள் படிப்பில் மந்தநிலைக்கு உட்படுவர். தொழில்நுட்ப பயிற்சியில் உள்ளவர்கள் சிறிது வளர்ச்சி நிலை காண்பர். படிப் புக்கான பணவசதி திருப்திகரமாக கிடைக்கும். சுற்றுலா பயணங்களில் உரிய பாதுகாப்பு அவசியம். வேலைவாய்ப்பில் எதிர்பார்ப்புக்கு அதிகமான நன்மை கிடைக்கும். ஆரம்ப, மேல் நிலை மாணவர்கள் படிப்பில் அதிக கவனம் செலுத்தினால்தான் சிறப்பான புள்ளிகள் பெற முடியும்.

**விவசாயிகள்:** பயிர் வளர்ப்பில் புதிய முறைகளைப் புகுத்த அதிக செலவாகும். கால்நடை வளர்ப்பில் சுமாரான இலாபமும் கிடைக்கும். நிலம் தொடர்பான விவகாரங்களை தீர்வுக்குக் கொண்டு வர கால தாமதம் ஏற்படும்.


(வளரும்).

---

### சமூகப்பாதுகாப்பு ஓய்வூதிய உறுதிகள்

சாவற்கட்டு ஜே/131 கிராம சேவையாளர் பிரிவில் சமூகப் பாதுகாப்பு ஓய்வூதியத் திட்டத்தில் இணைந்து கொண்டவர்களுக்கான உறுதிகள் கிராமசேவையாளர் அலுவலகத்திற்கு எடுத்துவரப்பட்டுள்ளன. உரியவர்கள் உடன் வந்து இவற்றைப் பெற்றுக்கொள்ளுமாறு கிராமசேவையாளர் வை.சந்திரராசா கேட்டுள்ளார். (204 -100)

### 31 ஆம் நாள் நினைவஞ்சலி



மலர்வு:
29.10.1966

உதிர்வு:
02.11.2010

அமரர்
## துரைசிங்கம் ஸ்ரீ பாஸ்கரன்

அன்பின் திருவுருவே! பாசத்தின் பிறப்பிடமே!!
பண்பின் சிகரமே!!! அணையா விளக்கே...
விரைந்தோடிச் சென்று நாள்கள்
முப்பத்தொன்று ஆனதடா
புன்னகை மாறாத உன் திருமுகம்
நெஞ்சம் நிறைந்து நிற்குதடா
பெருமை மிகும் நின் குணத்தை எம்
நெஞ்சத்தில் நித்தமும் நினைத்திருப்போம்

நாவலர் சனசமூக நிலையம்,
நாவலடி, உடுப்பிட்டி.

என்றும் நினைவில்:
குடும்பத்தினர்.

### ஆங்கிலக் கதைகள் கையேடு மாணவருக்கு

யாழ். வைத்தீஸ்வராக் கல்லூரியின் வெளிச்சவீடு பாடசாலை அலகு 2011 இல் கல்வி கற்கவிருக்கும் யாழ். கல்வி வலயப் பாடசாலைகளிலுள்ள 7, 8, 9 ஆம் தர மாணவர்களின் ஆங்கில வாசிப்புப் பழக்கத்தை மேம்படுத்தும் பொருட்டு 'லேடி பேர்ட்' கதைகள் அடங்கிய கையேடுகளை இலவசமாக விநியோகிக்கவுள்ளது.

கையேடுகள் அடங்கிய பொதிகளைப் பாடசாலை அதிபர்கள் தமது கோட்டக் கல்வி அலுவலகங்களில் பெற்றுக் கொள்ளமுடியும் என்றும் அறிவிக்கப் பட்டுள்ளது. (ஓ-ற)

### மாநகரசபை மாதிரி முன்பள்ளி விரைவில் திறந்து வைப்பு

யாழ். மாநகர சபையின் புதிய முன்பள்ளிக் கட்டடம் எதிர்வரும் 21ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 10மணிக்கு திறந்து வைக்கப் படவுள்ளது.

செயற்பாட்டறை மற்றும் சிறுவர்களுக்கு உகந்த வசதிகளுடன் ஹேமாஸ் மற்றும் யூநெப் நிறுவனங்களின் உதவியுடன் மேற்படி மாதிரி முன்பள்ளிக் கட்டடம் அமைக்கப்பட்டுள்ளது. யாழ். மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா தலைமையில் முன்பள்ளியின் திறப்புவிழா இடம்பெறவுள்ளது. (201-7)

### செவிலித்தாயார் தேவை (பராமரிப்பாளர்)

எமது ஆச்சிரமத்தில் தங்கியிருந்து சிறுகுழந்தைகளை (02 மாதக் குழந்தைகள் தொடக்கம் 6வயது குழந்தைகள் வரை) பராமரித்து வளர்க்கக்கூடிய சேவையுள்ளமும் கருணையும் நற்பண்பும் தேக ஆரோக்கியமும் குடும்பப் பொறுப்புகள் குறைவாகவும் கொண்ட பெண்கள் தேவைப்படுகின்றார்கள். வயது 40 தொடக்கம் 50 வரை இருப்பது விரும்பத்தக்கது. சம்பளம் பேசித் தீர்மானிக்கலாம். விரும்புபவர்கள் ஆச்சிரம சிறுவர் இல்லத்துக்கு நேரில் 04.12.2010 ஆம் திகதி மு.ப. 10 மணிக்கு சமூகம் தருமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தி.இராசநாயகம்
தலைவர்
மகாதேவா ஆச்சிரமம், புதுமுறிப்பு, கிளிநொச்சி.
026 326 7571, 0773868 566

### யாழ்.மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்க ஊழியர் நலன்புரி சங்க அபிவிருத்தி நிதிக்கான அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு முடிவுகள்

1. முதலாம் பரிசு 1920
2. இரண்டாம் பரிசு 1616
3. மூன்றாம் பரிசு 2271
4. ஆறுதல் பரிசில்கள்: 3529, 865, 1931, 641, 885.

அதிர்ஷ்டசாலிகள் தங்களது அதிர்ஷ்டலாபச் சீட்டுக்களை 10.12.2010 ஆம் திகதிக்கு முன் சமர்ப்பித்துப் பொருள்களைப் பெற்றுக்கொள்ளவும்.

தலைவர்,
ஊழியர் நலன்புரி சங்கம்.

### சபிண்டீகரண அழைப்பு



நெல்லியடி, கரவெட்டி

கடந்த 01.11.2010 அன்று அமரத்துவமடைந்த
எமது குடும்பவிளக்கு

**திருமதி செல்லம்மா செல்லத்துரை**

அவர்களின் ஆத்ம சாந்திக்காக நெல்லியடியிலுள்ள நெல்லை முருகன் திருமண மண்டபத்தில் நாளை (03.12.2010) வெள்ளிக்கிழமை நடைபெற இருக்கும் மதியபோசன நிகழ்வில் பங்குபற்றிச் சிறப்பிக்குமாறு தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

திரு.சி.நற்குணலிங்கம் - மருமகன்
(அதிபர், யா/சிதம்பராக் கல்லூரி),
திருமதி மனோகரி நற்குணலிங்கம் மகள்,
(ஆசிரியர் யா/நெல்லியடி
ம.ம.வித்தியாலயம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வைத்தியசாலைக்குள் புத்தவிகாரை அமைக்க நகரசபையின் அங்கீகாரம் பெறப்பட்டதா?

## வவுனியா நகரசபையின் உப தலைவர் கேள்வி

வவுனியா, டிசெ.2

வவுனியா மாவட்ட வைத்தியசாலைக்குள் புத்தவிகாரை அமைப்பதற்கான அங்கீகாரம் நகரசபையிடமிருந்து பெறப்பட்டதாவென வவுனியா நகர சபையின் உபதலைவரான எம்.எம்.ரதன் கேள்வி எழுப்பியுள்ளார்.

வவுனியா நகரசபைக்கான மாதாந்தக் கூட்டம் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்றபோதே அவர் இந்தக் கேள்வியை எழுப்பினார். அவர் அங்கு தொடர்ந்து உரை நிகழ்த்துகையில்:-

இவ்வைத்தியசாலைக்கு அனைத்து இன மக்களும் தமது வைத்தியத் தேவைகளுக்காக வந்து செல்கின்றனர். ஆரம்பகாலம் தொட்டே இவ்வைத்தியசாலையில் விநாயகர் ஆலயம் ஒன்று உள்ளது. காலப்போக்கில் வைத்தியசாலையின் பின்புறம் கிறிஸ்தவ தேவாலயம் ஒன்று கட்டப்பட்டது. ஆனால் இவ்வைத்தியசாலையின் உள்ளேயோ அல்லது சுற்றுப் புறங்களிலோ புத்த விகாரை இருந்தமைக்கான சான்றுகள் எதுவும் இல்லை. ஆயினும் தற்பொழுது இவ்வைத்தியசாலையினுள் இருந்த பழைய கட்டடம் ஒன்று இடிக்கப்பட்டு மிகப்பெரிய அளவிலான புத்த விகாரையொன்று கட்டப்படுவதற்கான நடவடிக்கைகள் இடம்பெற்று வருவதனை நான் நேரில் சென்று பார்வையிட்டேன். எனவே இவ்வாறு ஒரு விகாரை அமைக்கப்படுவதற்கு எமது சபையின் அங்கீகாரம் பெறப்படவேண்டுமா? அல்லது அது வைத்தியசாலை நிர்வாகம் தொடர்புடையதா? என்பதை நாம் எமது மக்களுக்குத் தெரியப்படுத்தவேண்டும். ஏனென்றால் விகாரை அமைப்பது தொடர்பாக வவுனியா நகரமக்கள் பலர் விசனம் தெரிவிப்பதோடு இதற்கு அனுமதி வழங்கியது யாரெனவும் கேட்கின்றார்கள். எமது தாயகப் பிரதேசத்தில் புதிது புதிதாகக் கட்டப்படும் புத்த விகாரைகளுடன் இதுவும் இணைந்து கொள்கின்றதா எனக் கேள்வி எழுப்பினார்.

அத்துடன் வவுனியா நகரிலிருந்து பிச்சைக்காரர்களை ஒழிக்க வேண்டுமெனக் கோரிய அவர் நகரசபைக்கு உட்பட்ட பகுதிகளில் கட்டாக்காலி மாடுகள், நாய்கள் என்பவற்றைக் கட்டுப் படுத்துவதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டுமெனவும் கேட்டுக்கொண்டார்.

(க-501)

## சொந்த இடத்தில்

தேராவில் தமிழ் வித்தியாலயம் நேற்று மீண்டும் சொந்த இடத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதற்கான நிகழ்வுகள் நேற்று புதன்கிழமை காலை 7.30 மணிக்கு நடைபெற்றன.

தேராவில் கிராமத்தில் கடந்த வாரம் மக்கள் மீள்குடியேற்றப்பட்ட நிலையில் இந்தப் பாடசாலை சொந்த இடத்தில் ஆரம்பித்துள்ளது. தரம் 1 தொடக்கம் 7 வரையுள்ள இந்தப் பாடசாலை புதுக்குடியிருப்புக் கோட்டத்தில் மூன்றாவது பாடசாலையாக ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே இந்தப் பாடசாலையில் கல்வி கற்ற மாணவர்கள் தற்போது வெளிமாவட்டங்களில் கல்வி கற்றுவரும் நிலையில் தமது சொந்தப்பாடசாலையில் கல்வியைத் தொடரமுடியும் என அதிபர் அறிவித்துள்ளார்.

(க-10-125)

## இயற்கையின் நியதி.....



எதிர்நீச்சல்: வன்னியில் மீள்குடியமர்ந்த மக்கள் தொடர்ந்து பெரும் அவலப்படுகின்றனர். அவர்களது கொட்டில் வீடுகள் நீரில் மிதக்கின்றன.

(405)

# யுத்தத்தினால் பாதிப்படைந்த பெண்களுக்கு புலம் பெயர்ந்து வாழ்பவர்களால் உதவிகள்

கிளிநொச்சி, டிசெ.2

வன்னி மாவட்டத்தில் யுத்தத்தினால் பாதிப்படைந்த பெண்களுக்கான வாழ்வாதார உதவிகளை வன்னியில் இருந்து வெளிநாடுகளில் புலம் பெயர்ந்து வாழ்பவர்கள் ஒன்றிணைந்து வழங்கி வருகின்றார்கள்.

கணவன்மாரைப் போரின்போது இழந்த விதவைப் பெண்கள், தடுப்பு முகாம்களில் கணவன்மாரைப் பிரிந்து வாழும் பெண்கள், வேறு பிறவிடயங்களால் பாதிப்படைந்து வாழ்விழந்த பெண்கள் என அனைவருக்கும் கிராமங்கள் ரீதியாக இந்த உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

இவர்களின் வாழ்க்கைத் தேவைகளைப் பூர்த்தி செய்யக் கூடியவகையில் கோழி வளர்ப்புக்குத் தேவையான உபகரணங்கள், கோழிகள், தையல் இயந்திரங்கள் போன்றன வழங்கப்படுகின்றன.

மீள்குடியேறியுள்ள உருத்திரபுரம், இராமநாதபுரம், வட்டக்கச்சி, ஆனந்தபுரம், கனகபுரம், கனகாம்பிகைக்குளம், பரந்தன் போன்ற இடங்களைச் சேர்ந்த பாதிப்படைந்த பெண்களுக்கே இவ்வாழ்வாதார உதவிகள் வழங்கப்படுகின்றன.

(க-313)

# இரத்தினபுரம் மக்களை வெளியேற்ற நடவடிக்கை

கிளிநொச்சி, டிசெ.2

கிளிநொச்சி இரத்தினபுரத்தில் ஆற்றங்கரையோரமாகக் குடியிருக்கும் மக்களை அங்கிருந்து வெளியேறுமாறு கேட்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகின்றது.

கிளிநொச்சி நகரத்தில் இருந்து சுமார் ஒரு கிலோ மீற்றர் தூரத்தில் அமைந்துள்ளது இரத்தினபுரம். இதில் ஆற்றங் கரையோரமாகவுள்ள தாழ்வான அரச காணி மேய்ச்சல் நிலத்திற்கென ஒதுக்கப்பட்டது. ஆனால் இக்காணியில் நீண்ட காலமாகவே சில குடும்பங்கள் வசித்து வருகின்றன. இந்தக்காணி தாழ்வான நிலப்பரப்பில் அமைந்துள்ளதாலும், கனகாம்பிகைக் குளத்தின் மேலதிக நீர் திறந்து விடப்படும் சந்தர்ப்பங்களில் இதன் ஓரமாகவுள்ள ஆற்றில் நீர் பாய்ந்து செல்வதனாலும் வருடாவருடம் இங்கு வசிக்கும் மக்கள் வெள்ளப் பாதிப்புகளுக்கு ஆளாகி வருவது வழக்கம். இங்கு வசிக்கும் மக்களுக்கு அரசினால் எந்தவித காணி அனுமதிப் பத்திரமும் வழங்கப்படவில்லை.

யுத்தத்தின் போது இடம்பெயர்ந்த இந்தப் பகுதி மக்கள் தற்காலிக வீடுகளை அமைத்து மீள்குடியேறியுள்ள்னர். ஆனால் காணி வசதிகளோ அல்லது அனுமதிப் பத்திரங்களோ இல்லாததன் காரணமாக இவர்களுக்கான நிரந்தர வீடுகளை வழங்கும் திட்டமும் தாமதமடைகின்றது.

இடப்பெயர்வுக்கு முன்னரே இவர்களை இங்கிருந்து வெளியேற்றி வேறு இடங்களில் காணிகளை வழங் குவதற்கு அரச அதிகாரிகள் முயன்ற போதிலும் இந்த மக்கள் வெளியேற மறுத்ததால், அது சாத்தியப்படவில்லை யெனக் கூறப்படுகின்றது. தற்போது சுமார் 62 குடும்பங்கள் மழை வெள்ளம் காரணமாக மோசமாகப் பாதிக்கப்பட்ட நிலையில் உள்ளனர். இவர்களைப் பார்வையிடுவதற்குக் கிராம அலுவலர், அனர்த்த முகாமைத்துவப் பிரிவு அதிகாரிகள், பிரதேச இராணுவ அதிகாரிகள் ஆகியோர் சென்றுள்ளனர். மேலும் இந்த மக்களைச் சந்தித்த இந்த அதிகாரிகள் இவர்கள் குடியிருக்கும் இடம் குடியிருப்புக்குப் பொருத்தமற்றது என்பதைக் கூறி இதிலிருந்து வெளியேறுமாறு கேட்டுக் கொண்டனர். ஆனால் மக்கள் இதற்குச் சம்மதிக்காது தொடர்ந்து குடியிருந்து வருவதாகத் தெரிகின்றது.

(க-405)

## வெள்ளத்தில் பயிர்கள்

முல்லைத்தீவு, டிசெ.2

முல்லைத்தீவு மாவட்டத்தில் தொடரும் மழையினால் நெற்பயிர்கள் மட்டுமன்றி மேட்டுப் பயிர்களும் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. பெரும்போக நெற்செய்கையிலும், சிறு தானியப் பயிர்ச் செய்கையிலும் மீள் குடியேறிய மக்கள் ஆர்வத்துடன் ஈடுபட்டுள்ளனர்.

ஆனால் ஆரம்பத்தில் மழை வீழ்ச்சி இல்லாத நிலையில் தற்போது பெருமழை பெய்து வருகின்றது. இதனால் சகலபயிர் வகைகளும் வெள்ள நீரில் மூழ்கியுள்ளன. அத்துடன் வாவிகள், குளங்களும் நிறைந்து காணப்படுகின்றன.

(க-500)

# படித்த இளைஞர், யுவதிகளுக்கு வாழ்வளித்த முத்தையன்கட்டுக் குடியேற்றத் திட்டங்கள்

முல்லைத்தீவு, டிசெ.2

முல்லைத்தீவு மாவட்டத்தில் பெரிய நீர்ப்பாசனக் குளமாக விளங்குவது முத்துஐயன் கட்டுக்குளமாகும். 1960 களில் இந்தக் குளம் கட்டப்பட்டது. காடுகள் அழிக்கப்பட்டு விளை நிலங்களாக மாற்றப்பட்டன. காணி இல்லாதவர்களுக்கு தலா 03 ஏக்கர் வீதம் காணி வழங்கப்பட்டது. இக்குளத்தின் கீழ் உப உணவுச் செய்கையினைப் பிரதான நோக்கமாகக் கொண்டே பாரிய வேலைத் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டன. அக்காலகட்டடத்தில் படித்த இளைஞர், யுவதிகளிடையே வேலையில்லாப் பிரச்சினை தலைதூக்கவே அதனை நீக்கும் பொருட்டு படித்த இளைஞர்களுக்குத் தனியாகவும் படித்த யுவதிகளுக்குத் தனியாகவும் காணிகள் பகிர்ந்தளிக்கப் பட்டன. ஏற்று நீர்ப்பாசனச் செய்கைக்காக நீர்ப்பம்பிகளும் பொருத்தப்பட்டு தற்காலிக வீடு, விவசாய உபகரணங்கள் எனப் பல்வேறு உதவிகளுடன் உபஉணவுச் செய்கைக்கான தானிய வகைகளும் வழங்கப் பட்டன. பெண்களுக்கு ஒட்டு சுட்டான், புளியங்குளம் பகுதியில் பெண்கள் குடியேற்றத் திட்டமும், ஒட்டுசுட்டான், வித்தியாபுரம் பகுதியில் படித்த வாலிபர் திட்டமும் உருவாக்




கப்பட்டு அவ்விடங்களில் அவர்கள் பயிர்கள் செய்யத் தொடங்கினர். பெண்கள் குடியேற்றத்திட்டத்திலும், படித்த வாலிபர் திட்டத்திலும் இனம், மதம், மாவட்டம் என்ற பாகுபாடுகளின்றிக் காணிகள் பகிர்ந்தளிக்கப்பட்டன. பெண்கள் குடியேற்றத்திட்டத்தில் யாழ்ப்பாணம், வவுனியா, மன்னார், முல்லைத்தீவு, திருகோணமலை, மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களிலிருந்து பெண்கள் குடியேறினர். அங்கு நிரந்தரமாகப் பயிர்களைச் செய்து சிறந்த அறுவடைகளைப் பெற்று வந்தனர். இதனால் உத்தியோகம் பார்க்க வேண்டும் என்ற எண்ணம் இல்லாமல் தொடர்ந்து மிளகாய், வெங்காயம், புகையிலை, உருளைக்கிழங்கு, மரவள்ளி போன்ற பலவகையான பயிர்களை நாட்டி அதன் மூலம் அறுவடை செய்யும் பொருள்களை தென்பகுதிக்கு எடுத்துச் சென்று விற்று நல்ல இலாபத்தையும் பெற்றனர். இதேபோன்று படித்த வாலிபர் திட்டத்திலுள்ள இளைஞர்களும் நல்ல பல பயன்களை அடைந்து வந்தனர். சிறிது காலத்தின் பின் காணிகளுக்கு நீர் சென்றடையும் வாய்க்கால்கள் பழுதடைந்தமையாலும், ஏற்று நீர்ப்பாசன நீர்ப்பம்பிகள் பழுதடைந்தமையாலும் அக்காணிகளுக்கான நீர்ப்பாசனம் சிறிது சிறிதாகத் தடைப்பட்டன. அத்துடன் அரசாங்கத்தின் உதவிகளும் சிறிது சிறிதாகக் குறைவடைந்த நிலையில் காணிகளை விட்டு வெளியேற [illegible]கள் வெளியேறத் தொடங்கினர். காணிகள் மீண்டும் காடுகளாக மாறத்தொடங்கின.

ஓரளவு வசதி படைத்த இளைஞர்களும், யுவதிகளும் கிணறுகளை வெட்டி வான்பயிர்களையும் உபஉணவுச் செய்கையினையும் தொடர்ந்து மேற்கொண்டனர். ஆனால் பக்கத்துக் காணிகள் செய்கை பண்ணப்படாமையினால் காட்டு மிருகங்களால் அழிவை எதிர்கொள்ள முடிந்ததே தவிர வருவாயைப் பெறமுடியவில்லை. மீண்டும் நீர்ப்பம்பிகள் பொருத்துவதற்கான நடவடிக்கைகளில் அவர்கள் அரசாங்கத்தை நாடிய போதிலும் அரசாங்கம் பாராமுகமாய் இருந்ததே தவிர அவர்கள் மீது அக்கறை கொள்ளவில்லை. நாட்டின் பிரச்சினைகள் காரணமாகவும் இயற்கை அனர்த்தங்களினாலும் தொடர்ந்து அங்கிருப்பதில் பயனில்லை என்ற கருத்து பலரிடமும் எழுந்தது. சிலர் காணிகளை விற்பதற்கு முற்பட்டனர். சிலர் காணிகளைக் கைவிட்டனர். இருந்தும் சிலர் திருமணம் செய்து மீண்டும் அங்கு குடியேறத் தலைப்பட்டும் அது தோல்வியிலே முடிந்தது.

இன்றைய நிலையில் குடியேற்றத் திட்டங்கள் இருந்த இடங்கள் பெரும் காடுகளாக மாறிப் பயிர் செய்ய முடியாத நிலையில் வன விலங்குகளின் வசிப்பிடமாக மாறியுள்ளன. அரசாங்கமானது இத்திட்டங்களை மீண்டும் இயங்கவைப்பதற்கு முன்வருமேயானால் இந்தப் பிரதேச மக்களின் வாழ்வு வளம் பெறக்கூடிய வாய்ப்பு ஏற்படும். முத்துஐயன் கட்டுக்குளம் என்றும் வற்றாத வைகை நதியாக உள்ளது. அதிலிருந்து நீரைப் பெற்றுக் கொள்வதற்கான வாய்க்கால்களைப் புனரமைத்துக் கொடுப்பார்களேயானால் அங்கு மீண்டும் பழைய நிலையினை உருவாக்க முடியும்.

பெண்கள் குடியேற்றத்திட்டம், படித்த வாலிபர் திட்டம் என்பனவற்றின் ஆரம்பவைபவத்தின்போது அன்றைய நாடாளுமன்ற உறுப்பினர் அமரர் தா. சிவசிதம்பரம் அவர்கள் உரையாற்றியதிலிருந்து ஒருபகுதியை இங்கே குறிப்பிடுவது சாலப் பொருத்தமாக இருக்கும்.

**சிலையூர் தனம்**


(வளரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'நீட்வூட்' தேயிலை நிறுவனக் கிளை யாழ். நகரில் திறந்து வைப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.2

2000 இற்கும் மேற்பட்ட வாடிக்கையாளர்கள் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் என்பதால் அவர்களது வாடிக்கையாளர் சேவையினை வலுப்படுத்தும் நோக்கில் யாழ்.நகரில் 'நீட்வூட்' தேயிலை கிளையினைத் திறந்து வைத்துள்ளோம் என 'நீட்வூட்' தேயிலை நிறுவத்தின் முகாமையாளர் அஜித் ரட்ணாயக்கா தெரிவித்துள்ளார்.



'நீட்வூட்' தேயிலை நிறுவனக் கிளை நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை யாழ்.போதனா வைத்தியசாலை முன்பாக திறந்து வைக்கப்பட்டது.

இந்தக் கிளையினைத் திறந்து வைத்து உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றும் போது:-

42 வருட காலமாக சேவையினை வழங்கும் எமது நிறுவனத்தின் கிளைகள் புத்தளம், கொழும்பு ஆகிய பிரதேசங்களில் அமைந்துள்ளன.

எனினும் யாழ்.மாவட்டத்தில் 2000 இற்கும் மேற்பட்ட வாடிக்கையாளர்கள் உள்ளனர். இவர்களுக்கான சேவையை இலகு படுத்தும் முகமாக புதிதாக ஒரு கிளையினை யாழ்.நகரில் அமைத்துள்ளோம்.

யாழ்.நகர் தற்போது யுத்தம் முடிவடைந்து சமாதான சூழலில் சகல துறைகளிலும் முன்னேற்றமடைந்து வருகின்றது. இதனால் மேலும் எமது வாடிக்கையாளர்கள் அதிகரிப்பார்கள் என எதிர்பார்க்கின்றோம்.

முதல்ரகத் தேயிலையில் இருந்து எவ்வித இரசாயனக் கலவைகளும் இல்லாமல் தரமான தேயிலையினை எமது நிறுவனம் வழங்குகின்றது.

வாடிக்கையாளர்கள் எம்மை நாடி வரும்போது அதிர்ஷ்டமான முறையில் அவர்களைத் தெரிவு செய்து அவர்கள் இலாபம் பெறும் வகையில் எமது கிளை நிறுவனம் சேவையை வழங்கும் - என்றார்.

இந்த நிகழ்வில் யாழ்.வேம்படி பெண்கள் உயர்தரப்பாடசாலை அதிபர் திருமதி பொன்னம்பலம், யாழ்.தேசிய சேமிப்பு வங்கி முகாமையாளர் அருளானந்தன், கிளை முகாமையாளர் (நீட்வூட்) மதுரா சுகாசினி ராஜேந்திரன் மற்றும் கிளை ஊழியர்கள், வாடிக்கையாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். (ம-313-311)

# இரண்டு புதுவகை பிஸ்கட்டுக்கள் நீரிழிவு நோயாளிக்கு உகந்தவை


நீரிழிவு நோயாளிகளுக்கேற்ற இரண்டு வகையான பிஸ்கெட்டுக்களை பிரிட்டானியா என்ற இந்திய நிறுவனம் அறி முகப்படுத்தியுள்ளது.

'ஓட்ஸ் குக்கீஸ்' மற்றும் 'ராகி குக்கீஸ்' என்ற பெயர்களில் இவை தயாரிக்கப்பட்டுள்ளன.

இது குறித்து நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் வினிதா பாலி கருத்துத் தெரிவித்தார்.

இந்தியாவில் 8 பேரில் ஒருவர் நீரிழிவு நோயால் பீடிக்கப்பட்டுள்ளார். உலகிலேயே மிக அதிக எண்ணிக்கையில் நீரிழிவு நோயாளிகள் உள்ள நாடாக இந்தியா மாறிவருகிறது.

நீரிழிவு நோயாளிகளுக்கு சர்க்கரை இல்லாத அதேசமயம் அவர்களுக்குத் தேவைப்படும் சத்துகள் நிறைந்துள்ள பிஸ்கெட்டுகளாக இவை அறிமுகப் படுத்தப்படுகின்றன. சர்க்கரைச் சத்து இல்லாதவையும் கொழுப் பற்றவையும் நார்ச்சத்து நிறைந்தவையும் கூட்டு கார்போ ஹைட்ரேட் சத்துக் கொண்டவையுமாக இந்த பிஸ்கெட்டுகள் தயாரிக்கப் பட்டுள்ளன.



ஓட்ஸ் மற்றும் கேழ்வரகு மூலம் இவை தயாரிக்கப்பட்டுள்ளன. ஓட்ஸ் குக்கீஸ் இந்திய நாணயப்படி ரூ. 25 விலையிலும், ராகி குக்கீஸ் ரூ. 50 விலையிலும் இந்தியாவில் விற்பனைக்கு வந்துள்ளன என்று அவர் தெரிவித்தார்.

இந்த பிஸ்கெட்டுகள் இலங்கையிலும் விற்பனைக்கு விடப்பட உள்ளன. இலங்கையிலும் நீரிழிவு நோய் உள்ளவர்களின் எண்ணிக்கை அதிகம். அதனால் வியாபார நோக்கு ஒருபுறம் இருக்க மனிதாபிமான அடிப்படையிலும் இந்த பிஸ்கெட்டுகள் இலங்கைக்கும் அனுப்பப்பட வேண்டும் என்று உற்பத்தியாளர்கள் விரும்புகின்றனர்.




### கௌரவிப்பு...



பாராட்டு: மக்கள் வங்கியின் சுன்னாகக் கிளை மண்டபத்தில் அண்மையில் தீபாவளிக் கொண்டாட்டமும் வாடிக்கையாளர் கௌரவிப்பு நிகழ்வும் நடைபெற்றன.
இந்த நிகழ்வில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட ஓய்வுபெற்ற வங்கி உத்தியோகத்தர் எஸ்.தம்பித்துரை நீண்ட கால வாடிக்கையாளராகிய எஸ்.அருளம்பலத்துக்கு ஞாபகார்த்த பரிசில் வழங்குகிறார். அருகில் வங்கி முகாமையாளர் சு.இராசமனோகரன், விழா ஒருங்கிணைப்பாளர் க.ஜெகதீஸ்வரன் ஆகியோர் நிற்கின்றனர். (204)

## மணிக்கு 1600 கி.மீற்றர் அதிவேகக் கார்

உலகில் அதிவேகமாகச் செல்லக்கூடிய கார் ஒன்றை இங்கிலாந்து உருவாக்கவுள்ளது.

உலகிலேயே அதிவேக மாகச் செல்லும் புல்லட் ரயிலை விட இந்தக் கார் அதிவேகம் கூடியதாக இருக்கும் என்று தெரிவிக்கப்படுகிறது. அதிவேக புல்லட் ரயில் சீனா வில் ஓடுகிறது. இது மணிக்கு 1200 கி.மி. வேகத்தில் பாய்ந்து செல்கிறது. ஆனால் அதைவிட மணிக்கு சுமார் 1,600 கி.மீற்றர் வேகத்தில் பறந்து செல்லத்தக்க விதத்தில் இக்காரை இங்கிலாந்து விஞ்ஞானிகள் உருவாக்க உள்ளனர். கார் தயாரிக்கும் பணியில் விஞ்ஞானி ரிச்சர்ட் நோபல் தலைமையிலான விஞ்ஞானிகள் குழுவினர் ஈடுபட்டுள்ளனர். இப்பணி எதிர் வரும் ஜனவரி மாதம் ஆரம்பிக்கப்படவுள்ளது.

# டொயோட்டா-NDB இணைந்து வழங்கும் வாகனங்களுக்கான சிறந்த குத்தகை வசதி

டொயோட்டா லங்கா நிறுவனமும், NDB வங்கியும் இணைந்து வாகனங்களுக்கு குறைந்த வட்டி வீதத்தில் சிறந்த குத்தகை வசதியை வழங்கி வருகின்றன. இதற்காக அவை புரிந்துணர்வு உடன்படிக்கை செய்துகொண்டுள்ளன.

இதன்படி பங்குடமையின் கீழ் டொயோட்டா லங்கா நிறுவனம் தெரிவுசெய்யப்பட்ட வாகனங்களை NDB லீசிங் வாடிக்கையாளர்களுக்கு வழங்கும். டொயோட்டா யாரிஸ்,டொயோட்டா கொரோலா 141 மற்றும் டொயோட்டா சிங்கிள் 'கெப்' ஆகியன NDB வங்கியின் தனிப்பட்ட லீசிங் பிரிவின் கீழ் வழங்கப்படும்.

அதேவேளை, HINO மோட்டார் லொறிகள்சிறிய மற்றும் நடுத்தர வர்த்தக முயற்சியாளர்களுக்கு வழங்கப்படவுள்ளன.

இந்த விசேட சலுகையினைத் தெரிவுசெய்யும் வாடிக்கையாளர்களுக்கு டொயோட்டா நிறுவனத்திலிருந்து கொள்வனவு செய்யப்படும் வாகனங்களுக்கென விசேட கட்டணங்கள் நிர்ணயிக்கப்படும். அதேவேளை, விசேட வட்டி வீதங்களும் இந்த ஊக்குவிப்புத் திட்டத்தின் கீழ் வழங்கப்படும்.

அத்துடன் NDB வங்கி மற்றும் டொயோட்டா சின்னங்கள் தாங்கிய விசேட வெகுமதி ஒன்றும் இணைந்த பரிசாகவாடிக்கையாளர்களுக்கு வழங்கப்படும்.

இந்தப் பங்குடமைச் சேவை தொடர்பில் கருத்துத் தெரிவித்த NDB வங்கியின் பிரதம நிறைவேற்று அதிகாரி ரசல்டிமெல், தொடர்ச்சியாக எமது வாடிக்கையாளர்களுக்கு சந்தைப் பெறுமதியுடன்ஒப்பிடுகையில் மிக நியாயமான வட்டி வீதத்தை நாம் வழங்குவதுடன், காப்புறுதி மற்றும் மேலதிக பெறுமதி சேர் சேவை, களில் விசேட கட்டணக் கழிவுகளையும் வழங்கி வருகிறோம்.

டொயோட்டா நிறுவனத்துடன் மேற்கொண்டுள்ள இந்த ஒப்பந்தம் மூலம் எமது வாடிக்கையாளர்களுக்கு இன்னும் அதிகமாக பெறுமதி சேர் சேவைகளை வழங்குவதும், வாகனம் ஒன்றைக் குத்தகைக்கு எடுக்கும் போது அவர்களுக்கு நல்லதொரு அனுபவத்தினைக் கொடுப்பதுமே எமது பிரதான இலக்காகும் என்றார்.

டொயோட்டா லங்கா நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் யொஷியாக்கி கதோ கருத்துத் தெரிவிக்கையில், ''டொயோட்டா ஆர்வத்தைக் கொண்டுள்ள வாடிக்கையாளர்கள் நியாயமான கட்டணத்தில் தமக்கென வாகனம் ஒன்றைச் சொந்தமாக்கிக் கொள்வதற்கான சிறந்ததொரு சந்தர்ப்பத்திற்கு இது வழி வகுத்துக் கொண்டிருக்கின்றது.

NDB வங்கி வழங்கும் சேவைகள் மீது எனக்குப் பெரும் நம்பிக்கையும், திருப்தியும் உள்ளது. அதேநேரம் விற்பனைக்குப் பின்னரான தரமிக்க திருத்தச் செயற்பாடுகளை வழங்குவதற்கான உறுதியினை நான் அளிக்கிறேன்'' என்றார்.

NDB லீசிங் வசதியினை ரூபா 1,00,000 இற்கு மாதாந்தம் ரூபா 1,980/-, (வரிகள் உள்ளடங்கலாக) என்ற அடிப்படையில் 6 வருடங்கள் வரையான காலப்பகுதிக்குப் பெற்றுக் கொள்ளலாம்.

# ஸ்ரீ லங்கா ரெலிகொம்மிற்கு இரண்டு லட்சம் ஏ.டி.எஸ்.எல். வாடிக்கையாளர்கள்

ஸ்ரீலங்காரெலிகொம், ஏ.டி.எஸ்.எல். 2+ தொழில் நுட்பம் மூலம் 2,00,000 வீடுகளுக்கும் வர்த்தக நிலையங்களுக்கும் (தொழில் முனைவர்கள், சிறிய - நடுத்தர மற்றும் பெரிய நிறுவனங்கள் உட்பட) அகலப்பட்டைச் சேவைகளை வழங்குவதாகப் பெருமையுடன் அறிவித்துள்ளது. இச் சாதனை இலங்கையின் மொத்த அகலப்பட்டை வாடிக்கையாளர் தளத்தின் 70சதவீதத்தையும் ஸ்ரீலரெ மெகாலைன் (பி.எஸ்.ரி.என்./ கம்பியிணைப்பு) தொலைபேசியின் 20சதவீதத்திற்கும் அதிகமான வாடிக்கையாளர் தளத்தையும் பிரதிநிதித்துவப்படுத்துகிறது.

இக்கம்பனி, தனது 2010 ஆம் ஆண்டிற்குரிய இலக்கை முன்னதாகவே அடைவதில் வெற்றி கொண்டுள்ளது. அதற்கான பிரதான காரணம், அது அண்மையில் நாடளாவிய ரீதியில் நடத்தி முடித்த அகலப்பட்டை பிரசாரமான, "ஸ்ரீலரெ அகலப்பட்டை இருபதுக்கிருபது ஊக்குவிப்புத் திட்டம் '' ஆகும்.

2010ஆம் ஆண்டிலே மொத்தமாக 80,000 புதிய வாடிக்கையாளர்கள், அதிவேக இணைய இணைப்புகளுக்காக, ஸ்ரீலரெ அகலப்பட்டை சேவைகளுடனும் ஐ.பி.ரி.வி.(பி.இ.ஒ.ரி.வி.) உடனும் இணைந்திருக்கிறார்கள்.

செலவு அதிகமற்றதும் இலகுவில் அடையக்கூடியதும் கம்பியிணைப்பினால் வழங்கப்படுவதுமான ஏ.டி.எஸ்.எல். அகலப்பட்டையின் எந்த நேரமும் இயங்கும் இணைப்பு, அதிவேகம், நம்பிக்கைத் தன்மை மற்றும் தடையற்ற சேவை போன்றவைகளால் வாடிக்கையாளர்கள் பெரிதும் நன்மையடைகிறார்கள்.

இணையத்தைப் பயன்படுத்தும் அதேநேரத்தில், தொலைபேசி அழைப்புகளை மேற்கொள்வதும் ஏற்றுக்கொள்வதும் அது வழங்கும் சிறந்த பெறுமதிகளில் ஒன்றாகும்.


மேலும் ஸ்ரீலரெ அகலப்பட்டையின் ஒரு தனித்த கம்பியிணைப்பின் மூலமாக குரல்வழி, அகலப்பட்டை இணையம் மற்றும் தொலைக்காட்சி/ ஊடகம் மற்றும் பல்வேறு நன்மைகளையும் வாடிக்கையாளர்கள் பெறுகிறார்கள்.


2008இல் ஸ்ரீலரெ தனது அகலப்பட்டைத் தளத்தின் மூலம் ஐ.பி.ரி.வியை வழங்குவதற்கு ஆரம்பித்து, அச் சேவையை இன்று நாட்டிலுள்ள கிட்டத்தட்ட எல்லா மாகாணங்களிலும் உள்ளடக்குவதில் வெற்றியடைந்துள்ளது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆவரங்கால் நடராச ராமலிங்க சுவாமி ஆலயம்

தொகுப்பு: ஞானஆதவன்








வலி.கிழக்கில் அமைந்துள்ள' சிவன் கோயில்களில் வரலாற்றுத் தொன்மையும் அருள்வியாபகமும் மிக்கதாக விளங்கும் ஆவரங்கால் 'ஸ்ரீ பார்வதவர்த்தனி சமேத நடராச ராமலிங்கம் சுவாமிகள் ஆலயம்'' யாழ்ப்பாணம், பருத்தித்துறை நெடுஞ்சாலையில் ஆவரங்கால் சிவசக்தி மணிமண்டபத்துக்கு முன்னால் வீதிக்கு கிழக்கு பக்கத்தில் அமைந்துள்ளது.

இலங்கை போர்த்துகேயரின் ஆக்கிரமிப்புக்கு உள்ளாகி சைவ ஆலயங்கள் இடித்தளிக்கப்பட்ட காலப்பகுதியில் ஆக்கிரமிப்பாளர்களின் அழிப்புக்கு உள்ளாகாமல் அருள்பாலித்துக் கொண்டிருந்தது. டச்சுக்காரர் தோம்பு எழுதிய காலப்பகுதியிலேயே நடராஜ ராமலிங்கசுவாமி பேரில் ''பல்வினையான் கொய்யாவளை நெற்பரப்பு நூறு'' என்று சொல்லும் தோம்புக் காணி உடையவராக விளங்குவது குறித்த தோம்பு காணியிலேயே ஆலயமும் அந்தணர் இருக்கையும் அமைந்திருந்தன.

காசி விசாலாட்சியம்மை சமேத விசுவநாதப் பெருமானும் பார்வதவர்த்தனியம்மை சமேத ராமலிங்கேஸ்வரப் பெருமானும் ஒருங்கிணைத்திருப்பது போன்ற சிறப்புடைய தலம் இங்கு எழுந்தருளியிருக்கும் பெருமான் பார்வதவர்த்தனியம்மை சமேத நடராச ராமலிங்கப் பெருமான் இந்த நாம சம்பந்தத்தாலே தரிசிக்க முத்தி தரும் தலமாகிய சிதம்பரத்து நடராசப் பெருமானும் இம் மூர்த்திகளுடன் சேர்ந்துகொண்டார். எனவே இராமேஸ்வரம், சிதம்பரம் காசி ஆகிய மூன்று சிறந்த தலங்களிலும் உள்ள மூர்த்திகள் மூவரும் சங்கமாகிய ஒரு மூர்த்தியாய் எழுந்தருளியிருக்கும் மூர்த்தி விசேடமும் தல விசேடமும் ஆலயச் சூழலெங்கும் உவர் நீரே இருக்க கோயிலின் தீர்த்தக்கேணியும் ஆலயத்தில் அமைந்துள்ள கிணறும் அமிர்தம் போன்ற அதிமதுர நன்னீராக அமைந்திருப்பதால் தீர்த்த விசேடமும் கொண்ட திருத்தலமாக விளங்குகின்றது.

ஆவரங்காலில் வாழந்து இறைபதம் அடைந்த ஆச்சிமுத்து அம்மா என்ற சன்னாசியம்மா துறவு பூண்டு காசிக்குச் சென்று தரிசனம் செய்து கொண்டிருந்தபோது காசிநாதப் பெருமான் அவர் கனவிலே தோன்றி ''ஆவரங்காலிலே தெருவிற் காசி இருக்கின்றது. அங்கே நாம் வீற்றிருக்கின்றோம். அங்கே போயிருந்து எனக்குத் தொண்டு புரிந்து வருக'' என்று கட்டளையிட்டாராம். அதனால் அம்மையார் இங்கு வந்து கோயிலுக்கு அண்மையில் திருநந்த வனமும், திருமடமும், திருக்கிணறும் அமைத்து நீண்ட காலம் இருந்து தொண்டாற்றி வந்தார்.

ஆவரங்கால் வாழ் இராமநாத உடையாரால் காசியில் இருந்து கொண்டு வரப்பட்டு ஆலயம் அமைக்கப்பட்டு தாபிக்கப்பட்ட நடராச ராமலிங்க சுவாமிக்குப் பூசை, அர்ச்சனை செய்வதற்கு காசியில் இருந்து கங்காபட்டர் குடி அந்தணர்கள் அழைத்துவரப்பட்டு நித்திய, நைமித்திய பூசை வழிபாடுகள் செய்யப்பட்டன. ஆலயச் சூழலில் அந்தணர்கள் குடியிருந்து கிரியைகளை மேற்கொண்டனர். (தொடரும்).

# அச்சுவேலி புனித தெரேசாள் மகளிர் கல்லூரி

(சென்றவாரத் தொடர்ச்சி)

வலி.கிழக்குப் பிரதேச செயலர் பிரிவில் அமைந்துள்ள அச்சுவேலி புனித தெரேசாள் மகளிர் கல்லூரியின் அமைவிடமும் சுவி நிலையும், கற்றலுக்கான உணர்வை மாணவர் மத்தியில் ஏற்படுத்தும் வகையில் அமைந்திருப்பதோடு, கல்லூரி வளாகத்தினுள்ளே பிரவேசிக்கும் அனைத்து தரப்பினரையும் தாம், தாம் கல்விகற்ற கல்விக் கூடங்களின் கட்டமைப்புக்களுடன் ஒப்பிட்டு நோக்கும் நிலைக்கு உள்ளாக்கும்.

1988 ஆம் ஆண்டு முந்திய காலப்பகுதியில் அச்சுவேலி-சங்கானை வீதி பொதுப் போக்குவரத்துப் பயன்பாட்டிற்கு உட்பட்டிருந்த நிலையில் வலிகாமம் வடக்கு, வலிகாமம் தெற்கு பிரிவுகளில் இருந்தும் பெருமளவு மாணவிகள் கல்லூரியில் அனுமதிபெற்று கற்றுவந்தனர். 1995 ஆம் வரை நடைபெற்ற இராணுவ நடவடிக்கைகளின் போது காலத்துக்குக் காலம் கல்லூரி பெருமளவில் சேதத்துக்கு உள்ளாகியதோடு, இடம்பெயரும் நிலைக்கும் உள்ளாகிவந்தது. இதனால் மாணவர்களின் எண்ணிக்கை பெருமளவில் குறைவடைந்து சென்றபோதிலும் 1996 ஆம் ஆண்டு மீள்குடியேற்றத்தை அடுத்துத் தொடர்ச்சியாக மாணவர் எண்ணிக்கை அதிகரித்து தற்பொழுது ஆரம்ப பிரிவில் 315 மாணவர்களும் கனிஷ்ட, இடைநிலையில் 415 மாணவிகளும் ஜி.சீ.ஈ உயர்தர வகுப்பில் 68 மாணவிகளுமாக மொத்தம் 858 மாணவிகள் கற்கின்றனர். கல்லூரியின் ஆரம்பத்தில் இருந்து இன்றுவரை அதிபர்களாக கடமையாற்றிய 10 அருட்சகோதரிகளின் விவரங்கள் வருமாறு:

அருட்சகோதரி றெஜினா பாடசாலையின் ஆரம்பத்தில் இருந்து 1946 டிசெம்பர் வரை, அருட்சகோதரி மேரி அலஹெஹ்யூ 1947 இல் இருந்து 1949 வரை, அருட்சகோதரி மேரி சபினா 1949 இல் இருந்து 1952வரை, அருட்சகோதரி மேரி எவறில்டா 1952 இல் இருந்து1970 வரை, அருட்சகோதரி ஸ்ரனிஸ்லிஸ் மேரி 1970 இல் இருந்து 1974 வரை, அருட்சகோதரி சிசிலியா மேரி 1975 இல் இருந்து 1981 வரை, அருட்சகோதரி மேரி பிடெலினா 1981 இல் இருந்து1986 ஆம் ஆண்டு வரை, அருட்சகோதரி மேரி கலிஸ்ரா 1986 இல் இருந்து 1990 வரை, அருட்சகோதரி மேரி எத்தல் வீவா 1990 இல் இருந்து 2000 வரை, அருட்சகோதரி மரிய றொசாறியோ 2000 ஆம் ஆண்டிலிருந்து இன்றுவரை.

க.பொ.த. உயர்தர பிரிவில் கலைப் பிரிவும்,வர்த்தகப் பிரிவும் செயற்படுகின்றது. உயர் தரத்தில் கல்வி கற்கும் மாணவர்கள் ஆண்டு தோறும் பல்கலைக்கழக அனுமதியும், நுண்கலைத்துறை அனுமதியும் பெற்று பட்டம் பெறுவதோடு பாடத்துறை ரீதியாக தேசியக் கல்வியியல் கல்லூரியில் அனுமதி பெற்றும் வருகின்றனர். கல்வி அடைவு மட்டத்தில் மட்டுமல்ல இணைப்பாட விதானச் செயற்பாடுகளிலும் கல்லூரி மாணவர்கள் உரிய பெறுபேறுகளைப் பெற்று முன்நிலையில் நிற்கின்றனர். பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பழைய மாணவர் சங்கம் ஆகியன கல்லூரி வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்து உதவி வருகின்றன. கல்லூரியின் எதிர்கால வளர்ச்சி தொர்பாக கல்லூரியின் அதிபர் அருட்சகோதரி மரிய றொசாறியோ கருத்து தெரிவிக்கையில்:

''கல்லூரியில் கல்விபயிலும் மாணவர் எண்ணிக்கைக்கு ஏற்ப வகுப்பறைக் கட்டமைப்பும் கட்டடவசதியும் இல்லாமல் இருப்பது பெரும் குறைபாடாக இருக்கின்றது எனத் தெரிவித்ததோடு, 100 x 20 அடி பரப்பளவு கொண்ட மண்டபத்தில் 6 வகுப்புக்கள். ஏறத்தாள 200 மாணவர்கள் வரையில் கல்வி பயில்வதாக தெரிவித்தார். அத்துடன் கோப்பாய் கல்விக் கோட்டத்தில் ஒரே ஒரு மகளிர் கல்லூரியாக இருக்கும் நிலையில் கூட மஹிந்த சிந்தனை 1000 பாடசாலை அபிவிருத்தித் திட்டத்தில் கல்லூரியை இணைத்துக் கொள்ளாமல் இருப்பது கல்லூரிச் சமூகத்துக்கு பெரும் ஏமாற்றமாய் போய்விட்டது'' என ஆதங்கத்தோடு தெரிவித்தார். காலச் சூழலுக்கும் மாணவர் எண்ணிக்கை மற்றும் கல்வி வாய்ப்புக் களுக்கும் ஏற்ற வகையில் கல்லூரிக்கான வளவசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதில் மாகாண கல்வி நிர்வாகம் கிராமிய மட்டத்தில் முன்னெடுப்புக்களை மேற்கொள்வது காலத்தின் கட்டாயமாகும். (முற்றும்)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது இளையோரிடத்தில் 'எய்ட்ஸ்' பற்றிய விழிப்புணர்வு

## இருக்கிறது

மனித பரிணாம வளர்ச்சி காலத்தோடு எவ்வாறு மாற்ற மடைந்திருக்கிறதோ அதே போல் அவனுக்குச் சவாலாகப் புதிய நோய்களும் பரிணாம மடைந்திருக்கிறது. ஆனாலும் இவற்றை எல்லாம் விஞ்ஞானம் என்னும் புதுமையால் முறியடித்தாலும் இயற்கையின் விந்தைக்கு அப்பால் மனிதனால் பயணிக்க முடிவதில்லை.

எய்ட்ஸ் பற்றிய விழிப்புணர்வு எம்மிடத்து மட்டுமன்றி உலக மக்கள் அனைவரிடமும் இருக்கின்றது. எமது மக்களையும், இளைஞர் மட்டத்தையும் இந்நோய் தாக்காதிருப்பது எமது கலாசாரமும் பண்பாடும் தான். 'ஒருவனுக்கு ஒருத்தி' என வாழும் நிலையே காரணம். இல்லையென்றால் யாழ்ப்பாணம் எப்போதோ ஒரு 'குட்டி சோமாலியா' அல்லது 'குட்டி ஆபிரிக்கா' ஆக மாறியிருக்கும்.

மற்றும் பாலியல் எமது சமூக மட்டத்தில் பேசக் கூச்சப்படும் ஒரு விடயமாக இருப்பதனால் அது பற்றிய மன எழுச்சி நிலை உருவாவது குறைவு. பாலியல் கல்வியை அவர்களது வாழ்க்கை நடத்தை 'கோலங்களினூடாகப் புகட்ட முனைவது வரவேற்கக் கூடியது.

யாழ். மாவட்டத்தில் மாத்திரம் 30 இற்கும் மேற்பட்ட எய்ட்ஸ் நோயாளிகள் உண்டு. காரணம் வெளிநாட்டுமோகமே. நம் இளையோர் மட்டத்தில் எய்ட்ஸ் பற்றிய விழிப்புணர்வு அதிகமாகவே காணப்படுகின்றது. அவர்களுக்கு நாம் சொல்லிக் கொடுக்க வேண்டியதில்லை. நம் கலாசாரமும் பண்பாடும் சமூகமும் அவர்களுக்குக் கற்றுக்கொடுக்கும்.

இவ்வாறான நம் தாயக பூமியில் கலாசாரப் பிறழ்வுகளுடன் நம் மக்கள் வாழ்வதை இளைஞர்களாகிய நீங்கள் அனுமதிக்கக் கூடாது. ஏ-9 திறப்பு, உல்லாசப் பயணிகள் வருகை கூடவே நோய்களின் வருகையும். முன் ஆயுத வன்முறையால் அழிந்த நாம் இனி நோயாலும் அழிக்கப்படுவோம்! இதனைத் தடுப்பது உங்கள் பொறுப்பு. எமது பண்பாடு கலாசாரத்தை உலகறியச் செய்யுங்கள். எங்களாலும் முடியும் என்பதை நிரூபியுங்கள்.

சி.திபர்ஷன் - Bio
யா/கொக்குவில் இந்துக் கல்லூரி.

## இல்லை

எமது இளைஞர் மத்தியில் சுகாதாரம், தொற்றுநோய் தொடர்பான விழிப்புணர்வு மிகக் குறைவு. தன் சுகாதாரம் பிறர் சுகாதாரம் என்பவற்றைப் பின்பற்றுவதைத் தவிர்க்கின்றனர்.

நவநாகரிகமான உடை அணிதல், வெளிநாட்டு இளைஞர்களைப் போல் உருமாற்றமடைந்து மோட்டார் சைக்கிள்களில் பயணிப்பது போன்றவற்றில் அதீத பற்றுவைப்பதிலாலும் உடலைப் பாதுகாப்பதற்கான சுகாதாரம் சம்பந்த அறிவைப் புறக்கணிப்பதாலும் 'எய்ட்ஸ்' நோய் பற்றிய விழிப்பு இல்லை என்பதே என் அபிப்பிராயம்.

'எய்ட்ஸ்' நோய் என்பது ஒரு பாலியல் சம்பந்தமான உயிர்கொல்லி நோய். இந்நோய் சம்பந்தமாகக் கடும் தாக்கத்தால் அண்மை நாடான பாரதத்திலே பல லட்சம் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளமை செய்திகள் வாயிலாக அறியக் கிடைக்கிறது. ஆனால் இலங்கையில் சில நூற்றுக்கணக்கானவர்கள் இனங்காணப்பட்டுள்ளனர். எமது இளைஞர்கள் எய்ட்ஸ் நோய் பற்றிக் கவலைப்படுவதில்லை. காரணம் எமது நாட்டில் பாதிப்பு குறைவென்றே கருதுகின்றார்கள் என்பதே என் வாதம்.

கந்த ஞானமுத்து
கைதடி மேற்கு - 02







## விவாதமேடை

இளைய சமூகத்தின் விவாதத்திறனுக்கு களம் அமைத்துக் கொடுப்பதற்காக ஆரம்பிக்கப்படுகின்றது. எனவே எமது இளையோரிடம் 'எய்ட்ஸ்' பற்றிய விழிப்புணர்வு இருக்கிறதா? இல்லையா? என்ற விவாதத்துக்கு உங்கள் கருத்துக்களை முன்வைத்து மோதுங்கள். வெற்றியைத் தீர்மானிப்பதும் நீங்களே. வெற்றிபெறும் என நீங்கள் கருதும் அணிக்கு வாக்களிக்க முடியும். வெற்றி பெறும் அணிக்கு வாக்களித்தவர்களில் மூவர் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்குப் பரிசில் வழங்கப்படும். அத்துடன் சிறந்த விவாதம் அனுப்புவோரில் ஒருவர் தெரிவு செய்யப்பட்டுப் பரிசில் வழங்கப்படும்.

## மீண்டும் அது தோற்றம் பெற்றால்..?

மழைக்கால இருட்டானாலும்....
மலைக்காலம் கோப்பறிந்து
பாய்ந்த மந்திகள் நாம்... இங்கு
பாய்ந்தே எதிரிக்குப் பாதை சொன்ன
பாவிகளால்.... துண்டிழந்து, துணியிழந்து
தனித்தனிக் குரங்குகளாய்
கோப்புகளில் வீற்றிருக்கிறோம், நாளை எமக்கு
கொம்பு முளைக்கும் வேளை எதிர்பார்த்து.....!

நேற்றில் சில மந்தி(ரி)களால்
திட்டமிட்டே வளர்க்கிற்கு
தெரிந்தே அனுப்பப்பட்ட மந்திகள் சில
தமக்குமிங்கு பழைய கோப்புகள்
தங்குவதற்கு அல்லது தாங்குவதற்கு உண்டோ என்று
புளியங் கோப்புகளாய்ப் பார்க்கின்றன.
புதைபொருளாராய்ச்சியும் நடக்கிறது.
புரைபோடிப் போன வம்புண்ணை மீண்டும்
புதுவிதமாய்ச் சுரண்டிப் பார்க்கும் முயற்சி இது!

(தொடரும்..)

- ஏ.எம்.காமில்.

## அண்ணனின் தவிப்பு...

என்னைத் தங்கை என்று அழைக்க
எனக்கு ஓர் அண்ணன் இல்லையே
நான் செய்த பாவமே - என் தாயின்
வயிற்றில் ஓர் ஆண் பிறப்பு இல்லையே
எப்படித்தான் எல்லாச் சொந்தங்களும்
இருந்தாலும்- அண்ணா! என்று சொல்லி
அழைக்க உறவு இல்லையே
இன்பம் துன்பம் என்று பகிரவோ
என் மீது அக்கறை காட்டவோ
ஒரு ஜீவன் பிறக்கவில்லையே
இந்த ஜென்மத்தில் தான் இல்லாத
இவ் உடன்பிறப்பு
மறு ஜென்மத்திலாவது எனக்குக்
கிடைக்குமா?

சிவஞானம் துஸ்ஷாலினி
யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி
12 'ஏ'

ஐந்தாவது விவாதமேடைப் பகுதியில் இன்றைய 'இளம் சமுதாயத்தினரின் கைத்தொலைபேசிப் பாவனை தவறானது' என்ற அணி வெற்றி பெற்றுள்ளது. இதில் தவறானது என்ற அணிக்காக 987 வாக்குகளும், சரியானது என்ற அணிக்காக 544 வாக்குகளும் கிடைத்துள்ளன.

**தவறானது என்ற அணிக்காக வாக்களித்தவர்களில் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள்.**

* இ.நீரஜா - கைதடி கிழக்கு, கைதடி.
* வ.பிரகீத் - புலோலி வடக்கு, பருத்தித்துறை.
* து.விஜிதா - சென்.பெனடிற் வீதி, அரியாலை மேற்கு.

**சிறந்த ஆக்கத்தை அனுப்பியவர்:** இ.ரிஷிதா - நயினை - 08

**ஆக்கங்களை அனுப்பியவர்கள்:**

* ச.கயல்விழி - கொழும்புத்துறை.
* து.சுஜிதா - சங்கானை.
* க.அபிராமி - வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை.
* ஆ.ஆன்சயூமியா - இளவாலை.
* அ.வசுந்திரா - திருநெல்வேலி.
* பி.சாந்தினி - சாவகச்சேரி.
* ச.சர்மிளா - கோண்டாவில்.

## கவிதைக் காதலி

காகிதம்
நீ
என் காதலன்
உன்னை
என்
பேனாவின் துணை கொண்டு
கவிதைகளால்
காதலிக்கின்றேன்!

சா.ஜிந்துஜா
கோண்டாவில்.

## இளவல்கள் வட்டம் வாக்குச்சீட்டு

உங்கள் தீர்ப்புகளை 30.12.2010 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்கவும். இவ் வாக்குச் சீட்டுடன் அனுப்பப்படும் வாக்குகள் மாத்திரமே ஏற்றுக்கொள்ளப்படும்.

எமது இளையோரிடம் 'எய்ட்ஸ்'
பற்றிய விழிப்புணர்வு....

இருக்கிறது ☐ இல்லை ☐

பெயர் : ..............................
முகவரி : ..............................
: ..............................
அடையாள அட்டை இல: ..............................

## இளைஞர், யுவதிகளே!

உங்களின் திறமைகளை வெளிக்கொணரவும், பிரச்சினைகள் பற்றிப் பேசவும், தேடல்களுக்குத் தீனி போடவும் **'இளவல்கள் வட்டம்'** என்ற இந்தப் பகுதி மலர்ந்துள்ளது. இப்பகுதிக்கான உங்கள் படைப்புகளையும், ஏதாவது சந்தேகங்களையும் விமர்சனங்களையும் கீழேயுள்ள படிவத்தோடு இணைத்து அனுப்பிவையுங்கள்.

பெயர் : ..............................
முகவரி : ..............................
: ..............................

.................. திகதி
.................. கையொப்பம்

'இளவல்கள் வட்டம்',
'உதயன்',
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரவு - செலவுத் திட்டத்தில் வரிகளை நீக்கியதால் மாகாண சபைகளுக்குப் பலத்த நிதிநெருக்கடி

## முதலமைச்சர்கள் தெரிவிப்பு

கொழும்பு, டிசெ.2

இம்முறை வரவு-செலவுத் திட்டத்தில் பெறுமதி சேர்வரி குறைக்கப்பட்டுள்ளதால் மாகாண சபைகள் பாரிய நிதி நெருக்கடிக்கு முகம் கொடுக்க வேண்டியுள்ளதாக முதலமைச்சர்கள் தெரிவித்துள்ளார்.

தேசத்தைக் கட்டியெழுப்பும் வரியின் ஒரு பகுதியை மாகாண சபைகளுக்கு வழங்குவதாக நிதியமைச்சின் செயலாளர் உறுதியளித்திருந்தபோதும் அது 2-3 சதவீதமாகக் குறைக்கப்பட்டுள்ளதால் நிதி நெருக்கடி மேலும் மோசமாகியுள்ளதாக அவர்கள் விசனம் தெரிவித்தனர்.

மாகாண சபைகளின் வருமானத்தில் 75 வீதம் பெறுமதி சேர்வரி மூலமாகவே பெறப்பட்டுவந்தது.

வரவு-செலவுத் திட்டத்தில் அது நீக்கப்பட்டதால் மாகாண சபைகளின் வருமானம் மிகவும் குறைந்துள்ளது.

பல மாகாண சபைகளில் வரவு-செலவுத் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன. அவ்வாறு செய்யாத சபைகள் தமது வரவு- செலவுத் திட்டத்தில் துண்டு விழும் தொகையை 'மத்திய அரசில் இருந்து கிடைக்குமென எதிர்பார்க்கும் தொகை' என குறிப்பிட வேண்டியுள்ளது.

மக்கள்மீது அதிக சுமையை சுமத்தாமல் இதுவரை அவர்களிடமிருந்து 1%,2% போன்ற குறைந்த வரியே அறவிடப்பட்டுவந்தது.

அதுவும் நீக்கப்பட்டதால் மாகாண சபைகளின் நிதிநெருக்கடி உச்சக் கட்டத்தில் உள்ளதென முதலமைச்சர்கள் தெரிவித்தனர்.

ஜனவரியில் இடம்பெறவுள்ள முதலமைச்சர்களின் மாநாட்டில் இவ்விடயம் தொடர்பாகப் பிரஸ்தாபிக்கப்படும். படிப்படியாக மாகாண சபைகளின் அதிகாரங்கள் குறைக்கப்பட்டு வருகின்றன எனவும் அவர்கள் சுட்டிக்காட்டினர்.

மாகாண சபைகளால் வெளியிடப்படும் சுற்றுநிருபங்கள் யாவும் மத்திய அரசின் அமைச்சுகளின் நியதிகளுக்கு அமைவாகவே இருக்கவேண்டுமென அரசு எடுத்துள்ள தீர்மானம் பற்றியும் முதலமைச்சர்கள் தமது அதிருப்தியைத் தெரிவித்துள்ளனர். (ம-5)

## ஊக்குவிப்பு....



உதவி: திருநெல்வேலி முத்துத்தம்பி மகாவித்தியாலய மாணவர்களால் எதிர்வரும் 7 ஆம் திகதி கொண்டாடவுள்ள ஒளி விழாவுக்குத் தேவையான நிதியை யாழ். மாநகர சபை உறுப்பினர் எஸ்.விஜயகாந் வித்தியாலய அதிபரிடம் வழங்குகிறார். மேற்படி வித்தியாலய அதிபர் ஒளிவிழாவை நடத்துவதற்கு நிதியுதவி வழங்குமாறு மாநகரசபை உறுப்பினரிடம் கோரிக்கை விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (201)

# ஜனாதிபதியின் இரண்டாவது பதவியேற்பன்று ஹோட்டலில் தங்கியிருந்த சுவிஸ் தமிழர் கைது

கொழும்பு, டிசெ.2

ஜனாதிபதியின் இரண்டாவது பதவியேற்பு வைபவத் தினத்தில் காலி முகத்திடலுக்கு அருகில் அமைந்துள்ள ஐந்து நட்சத்திர ஹோட்டலொன்றில் தங்கியிருந்த தமிழர் ஒருவர் சந்தேகத்தின்பேரில் பயங்கரவாத ஒழிப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டு விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

சுவிஸில் நீண்டகாலமாகத் தங்கியிருக்கும் இவர் புலிகள் இயக்கத்துக்கு நிதி சேகரித்தார் எனச் சந்தேகிக்கப்படுவதாகவும் இவர் கடந்த மாதம் 12 ஆம் திகதி இலங்கைக்கு வந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

நீண்டகாலமாக இலங்கைக்கு வராத இவர் ஜனாதிபதியின் பதவியேற்புத் தினத்தில் இங்கு வந்ததும் வைபவம் நடந்த இடத்துக்கு அண்மையிலுள்ள ஹோட்டலில் தங்கியிருந்ததும் அவர் மீதான சந்தேகத்தை வலுப்படுத்தியுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

யாழ்ப்பாண வாசியான இவர் தற்சமயம் தடுப்புக்காவல் சட்டத்தின்கீழ் தடுத்து வைக்கப்பட்டு விசாரிக்கப்படுவதாகப் பொலிஸ் உயரதிகாரியொருவர் தெரிவித்தார். (ம-5)

## கலை விழா

பாலர் கல்விக் கழகமும், 14 ஞானக்குழந்தை இல்லங்களும் இணைந்து நடத்தும் 45 ஆவது வருடாந்தக் கலைவிழா நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு நாவலர் கலாசார மண்டபத்தில் இடம்பெறுவுள்ளது.

சென்.ஜோன்ஸ் கல்லூரி ஆசிரியரும், கழகத் தலைவருமான சித்தாந்த பண்டிதர் எஸ்.பி. காசிநாதன் தலைமையில் நடைபெறும் இவ்விழாவுற்கு பிரதம விருந்தினராக யாழ். சமூகசெயற்பாட்டு மையத்தின் இணைப்பாளர் நடராசா சுகிர்தராஜ் கலந்து கொள்வார். (ற)

# திரிபோஷா போஷாக்கு உணவுத் திட்டம் ; அடுத்த ஆண்டுக்கு ரூ.150 கோடி ரூபா ஒதுக்கீடு

## சுகாதார அமைச்சர் தகவல்

கொழும்பு, டிசெ.2

திரிபோஷா போஷாக்குணவு வழங்கும் திட்டம் தொடர்பாக அடுத்த ஆண்டில் 150 கோடி ரூபா செலவிடப்படவுள்ளதாகச் சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

இந்த ஆண்டில் திரிபோஷா வழங்கும் திட்டம் தொடர்பாக 110 கோடி ரூபா வரையில் செலவிடப்பட்டுள்ளது.

அடுத்த ஆண்டில் அத்தொகை மேலும் 40 கோடி ரூபாவால் அதிகரிக்கப்படுமெனவும் அமைச்சர் மைத்திரிபால சிறிசேன கொழும்பின் சிங்கள ஊடகமொன்றுக்குத் தெரிவித்துள்ளார்.

கர்ப்பிணித் தாய்மார் மற்றும் குழந்தைகளுக்கு திரிபோஷா போஷாக்குணவு வழங்கும் திட்டத்தை விரிவாக முன்னெடுத்துச் செல்வது தொடர்பாக விசேட செயற்றிட்டமொன்று நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார். (ம-22)

# 53 லட்சம் பெறுமதியான தங்க பிஸ்கட்டுடன் இந்தியப் பிரஜை கட்டுநாயக்காவில் கைது

கொழும்பு, டிசெ.2

53 லட்ச வரையில் பெறுமதியான எட்டு தங்க பிஸ்கட்டுகள் மற்றும் 20 தங்கக் கம்பித் துண்டுகளைப் பயணப் பையிலும் தமது உடம்பிலும் இரகசியமாக மறைத்துக் கொண்டு திருச்சிக்குப் பயணமாகத் தயார் நிலையிலிருந்த இந்திய பிரஜை ஒருவர் கடந்த 27 ஆம் திகதி பாதுகாப்புப்பிரிவினராலும், சுங்கப்பிரிவினராலும் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்துக் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இதுபற்றித் தெரியவருவதாவது:-

கடந்த 27ஆம் திகதி கட்டுநாயக்க விமானநிலையத்திலிருந்து திருச்சிக்குப் பயணிக்க அங்கு வந்திருந்த இந்தியப் பிரஜை ஒருவர்மீது ஏற்பட்ட சந்தேகத்தின்பேரில் முதலில் பாதுகாப்புப் பிரிவினரால் அவரது பயணப்பை சோதனைக்கு உள்ளாக்கப்பட்டது.

இதன்போது பயணப்பையில் இருந்து 20 தங்கக் கம்பித் துண்டு கண்டுபிடிக்கப்பட்டன. இவர் விசாரணைகளுக்காகச் சுங்கப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டார்.

சுங்கப் பகுதியினரால் மேற்கொள்ளப்பட்ட சோதனையின் போது அவரது உடலின் இரகசியப் பகுதியொன்றில் மறைத்து வைக்கப்பட்டிருந்த தங்க பிஸ்கட்டுகள் சுங்க அதிகாரிகளால் மீட்கப்பட்டன.

இதுதொடர்பாக மேலதிக விசாரணைகளைப் பிரதிச் சுங்கப் பணிப்பாளர் எச்.அத்தபத்து மேற்கொண்டார். 53 லட்சங்கள் பெறுமதியான தங்கம் அரசுடைமையாக்கப்பட்டதோடு மேற்படி இந்தியப் பிரஜைக்கு ஐந்து லட்சம் ரூபா தண்டமும் விதிக்கப்பட்டது. (ம-22)

## முயற்சி.....



வெற்றி: யாழ்.இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை ஆங்கிலதின நிகழ்வில் விருந்தினராகக் கலந்துகொண்ட கோக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை அதிபர் திருமதி செல்வராணி சகாதேவன் ஆங்கிலதினப் போட்டியில் வெற்றி பெற்ற மாணவியொருவருக்குப் பரிசில் வழங்குகிறார். (7)

# நெதர்லாந்திலிருந்து குதிரைகள் பொலிஸ் சேவைக்கு வரவழைப்பு

பொலிஸ் சேவையில் ஈடுபடுத்துவதற்கென எட்டுக் கோடியே 50 லட்சம் ரூபாவுக்கு கொள்வளவு செய்யப்பட்ட 15 குதிரைகள் கடந்த 27 ஆம் திகதி நெதர்லாந்தில் இருந்து விமான மூலம் இலங்கைக்குக் கொண்டுவரப்பட்டுள்ளன.

தருவிக்கப்பட்டுள்ள குதிரைகள் தொடர்பான நோய்கள் பற்றிய பரிசீலனை ஆய்வுச் செயற்பாடுகள் முடிவுற்றதன் பின்னர் அடுத்த மாதமளவில் இவை பொலிஸ் பணிகளில் ஈடுபடுத்தப்படவுள்ளன என்று பொலிஸ் தலைமையகத்தின் உயரதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

கடந்த காலத்தில் பொலிஸ் குதிரை அணியைச் சேர்ந்த குதிரைகள் பல பல்வேறு காரணிகளால் உயிரிழந்துள்ளதால் பொலிஸ் துறையில் குதிரைகளுக்குப் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாகப் பொலிஸ்துறை தகவல்கள் தெரிவிக்கின்றன. (ம-22)

# சிறுநீரகத்தை தானம் செய்வதாகக் கூறி பணத்தைப் பெற்ற நபர் பின்னர் தலைமறைவு

கொழும்பு, டிசெ.2

சிறுநீரகக் கோளாறால் பாதிக்கப்பட்ட நோயாளியொருவருக்குத் தனது சிறுநீரகத்தைத் தானம் செய்வதாகக்கூறி அவரிடமிருந்து 33 ஆயிரம் ரூபா பணத்தைப் பெற்றுக்கொண்டு தலைமறைவான நபரொருவருக்குக் கந்தளாய்ப் பொலிஸார் வலை விரித்துள்ளனர்.

கந்தளாய்,அக்போபுர பிரதேசத்தில் வசிப்பவரான பஹல கெதர சிரில் (வயது-55) எனும் நோயாளி தான் ஏமாற்றப்பட்டுள்ளதாகப் பொலிஸாருக்கு முறைப்பாடு தெரிவித்துள்ளார்.

நீண்ட நாள்களாக சிறுநீரகக் கோளாறால் பாதிக்கப்பட்டிருந்த இவர் சிறுநீரகமொன்றை வழங்குமாறு பத்திரிகையில் விளம்பரம் ஒன்றைக் கொடுத்துள்ளார்.

அதன்பின் ருவான்வெல்ல பிரதேசத்திலுள்ள அங்கவீனரான சந்தேகநபர் அவரிடம் வந்து மரணமாகிவிட்ட தனது மனைவிக்குப் புண்ணியம் தேடும் நோக்கில் தனது சிறுநீரகமொன்றைத் தானமாக வழங்க எண்ணியுள்ளதாகக் கூறியுள்ளார்.

அதன்பின் சிறுநீரகம் தொடர்பான பரிசோதனைக்கென 20 ஆயிரம் ரூபாவை வாங்கியுள்ளார்.

அதன்பின் மற்றொரு பரிசோதனையை மேற்கொள்ளவுள்ளதாகக்கூறி ருவான்வெல்ல மக்கள் வங்கியிலுள்ள தனது கணக்கிற்கு 13ஆயிரம் ரூபாவை வைப்புச் செய்யுமாறு கேட்டுள்ளார்.

அதன்பின் கண்டி வைத்தியசாலையில் சிறுநீரக மாற்றீடுக்கான திகதியையும் ஒழுங்குபடுத்திக் கொண்டு அங்கு சென்றபோது சந்தேகநபர் வந்திருக்கவில்லை.

அன்றைய தினம் தொலைபேசி மூலம் மேலும் 5 ஆயிரம் ரூபா பணத்தை கேட்டுள்ளார்.

கண்டி வைத்தியசாலையில் வைத்துப் பணத்தைத் தருவதாகவும் அங்குவருமாறும் நோயாளி கேட்டுள்ளார்.

எனினும் அன்று தலைமறைவான சந்தேக நபரை அதற்குப் பின் தொலைபேசியிலும் தொடர்பு கொள்ள முடியவில்லையெனவும் தான் சிரமப்பட்டு தேடிய 33 ஆயிரம் ரூபாவை அநியாயமாக இழந்துவிட்டதாகவும் தனது முறைப்பாட்டில் குறிப்பிட்டுள்ளார்.

கந்தளாய்ப் பொலிஸ் பொறுப்பதிகாரி லக்ஷ்மன் பண்டார மேலதிக விசாரணைகளில் ஈடுபட்டுள்ளார். (ம-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடர்:**
உங்களின் புத்திசாலித்தனத்தை மற்றவர்கள் பாராட்டலாம். போட்டி, பந்தயங்களில் வெற்றி காண்பீர்கள். வீட்டை சீரமைப்பதில் அக்கறை காட்டுவீர்கள். தாய்வழி உறவுகளால் ஆதாயம் பெறுவீர்கள். அண்டை, அயலார் அனுசரணையாக இருப்பர். அடுக்கடுக்காகப் பல வேலைகளைத் திட்டமிட்டுச் செய்வீர்கள்.

**இடபர்:**
எதிலும் துணிச்சலுடன் செயற்படுவீர்கள். சில வேலைகளை கவனமாகச் செய்தாலும், சிலர் உங்களை குறை சொல்லலாம். பொலிஸ் தொடர்பான விடயங்களில் எச்சரிக்கை அவசியம். தந்தை வழியில் எதிர்பாராத செலவுகளைச் சந்திக்கலாம். சிறிய தவறு பெரிய பிரச்சினையாகி விடுமோ என பயம் கொள்ளலாம்.

**மிதுனர்:**
சிலருடன் வாக்குவாதங்கள் செய்ய நேரிடலாம். ஒருவர் உங்களுக்கு உதவி செய்ய முன்வந்தும் நீங்கள் அதை ஏற்க மறுப்பீர்கள். புதிய பொருள்கள் வாங்கப் போட்ட திட்டம் நிறைவேறும். அடுத்தவர் விவகாரங்களில் தலையிடாமல் இருப்பது நல்லது. சக ஊழியர் விடுமுறையால் வேலைப்பளு கூடும்.

**கடகர்:**
உறவினர்களிடம் பரிவு, பாசத்துடன் நடந்து கொள்வீர்கள். வெளியூர்களில் இருந்து நல்ல செய்திகளைக் கேட்கலாம். ஓய்வாக இருக்காமல் காலை முதல் மாலை வரை ஏதாவது வேலைகளைச் செய்து கொண்டிருப்பீர்கள். பணவரவுகளைப் பெறலாம். பெண்கள் பிறந்த வீட்டின் உதவிகளை பெற வாய்ப்பு உண்டு.

**சிங்கர்:**
எதிர்பாராத தடை, தாமதங்களைச் சந்திக்கலாம். நண்பர்கள் வழியில் அன்புத் தொல்லைகள் நேரும். குடும்ப உறுப்பனர்களுக்கான பொருள்களை வாங்க கணிசமான பணத்தைச் செலவிடலாம். நண்பர் ஒருவருடன் சேர்ந்து மற்றொரு நண்பரை விமர்சனம் செய்வீர்கள். எதிர்காலம் பற்றிய கவலைகள் ஆள்கொள்ளும்.

**கன்னி:**
கற்பனை வளம், செயல்திறன் அதிகரிக்கும். தந்தை வழி உறவுகளால் ஆதாயம் பெறலாம். காலையில் வந்த பணவரவு ஒன்றுக்கு மாலையில் செலவு ஏற்படலாம். பிரிந்திருந்த குடும்ப உறுப்பினர்கள் மீண்டும் ஒன்று சேருவர். உடன் பிறந்தவர்கள் நீங்கள் கேட்ட உதவிகளை செய்யலாம். கனிவான பேச்சுக்களால் காரியம் சாதிப்பீர்கள்

**துலாமர்:**
சிறு சிறு பிரச்சினைகளால் மனக்குழப்பம் உண்டாகலாம். உங்களுக்கு வாக்குக் கொடுத்த சிலர், அதை காப்பாற்றாமல் இழுத்தடிக்கலாம். சில வேலைகளுக்காக தீவிரமாக அலைந்தும் அது முடியாமல் போகலாம். கடன் பிரச்சினைகளைச் சாக்குப்போக்குச் சொல்லி சமாளிப்பீர்கள். கனவுத் தொல்லையுண்டு.

**விருச்சிகர்:**
வீண் பழிகள் அகன்று வெற்றிக் கொடி நாட்டும் நாள். அலைச்சல் குறைந்து ஓய்வு எடுப்பீர்கள். பழைய நண்பர் மூலம் புதிய நண்பரின் அறிமுகம் கிடைக்கலாம். பிள்ளைகள் விருப்பங்களை நிறைவேற்றி வைப்பீர்கள். உங்களைப் பற்றி மறைமுகமாக விமர்சனம் செய்யும் சிலரை அறிந்து கொள்வீர்கள்.

**தனுசு:**
மனைவி, குழந்தைகளுடன் சந்தோஷமாகப் பொழுதை கழிக்கலாம். விலகிச் சென்ற சொந்தங்கள் திரும்ப வந்து சேரலாம். பெண்கள் விரும்பி பொருள்களை வாங்குவர். வெறுப்பு விரக்தி விலகி எதிலும் உற்சாகமாகச் செயற்படுவீர்கள். கணவன், மனைவி இடையே அன்நியோன்யம் அதிகரிக்கும். தெய்வ வழிபாடு திருப்திதரும்.

**மகரர்:**
துவங்கிய சில வேலைகளைப் பாதியில் விட்டு விட்டு வேறு வேலைகளில் கவனம் செலுத்தலாம். குடும்பத்தினருடன் அல்லது நண்பர்களுடன் வெளியிடங்களுக்கு செல்லலாம். எதிர்பாராத செலவுகளால் வருத்தம் அடையலாம். சிறு உடல் உபாதைகளால் உற்சாகம் குறையலாம். புதியவர் சந்திப்பு நிகழும்.

**கும்பர்:**
திட்டமிட்ட காரியங்களில் மாற்றங்களைச் செய்யலாம். வெறுப்பு, விரக்தி அதிகரிக்கும். ஓய்வு எடுக்க நினைத்தாலும் அது முடியாத அளவுக்கு யாராவது வந்து தேவையற்ற விடயங்களைப் பேசி தொந்தரவு கொடுக்கலாம். சக ஊழியர்களின் ஏட்டிக்குப் போட்டியான செயற்பாடுகளால், எரிச்சல் அடையலாம். வேலைப்பளு கூடும்.

**மீனர்:**
மன உளைச்சல்கள் நீங்கி மகிழ்ச்சி அதிகரிக்கும் நாள். தேடி வந்தவர்களுக்கு இல்லை என்று சொல்லாமல் உதவி செய்வீர்கள். பிள்ளைகளின் விருப்பங்களை கேட்டறிவீர்கள். பொழுதுபோக்கு, உல்லாச விடயங்களில் நாட்டம் செல்லும். தூரத்து உறவினர் ஒருவரை எதிர்பாராமல் சந்திக்க நேரிடலாம்.

# இந்திய வெளிவிவகார அமைச்சருக்கு தமிழ்க்கட்சிகளின் அரங்கம் மகஜர்

கொழும்பு,டிசெ.2

இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணாவிடம் கையளிப்பதற்காக தமிழ்க்கட்சிகள் அரங்கத்தினால் தயாரிக்கப்பட்ட தமிழ் மக்களின் பிரச்சினைகள் அடங்கிய மகஜரொன்று இந்திய உயர்ஸ்தானிகராலயத்தில் நேற்றுகாலை கையளிக்கப்பட்டது.

தமிழ் கட்சிகளின் அரங்கப் பிரதிநிதிகளான புளொட் தலைவர் டி.சித்தார்த்தன், எஸ்.டி.சந்திரகாசன் மற்றும் ஈ.பி.ஆர்.எல்.எப். பத்மநாபா அணி ரி.சிறிதரன் ஆகியோரினாலேயே இந்த மகஜர் கையளிக்கப்பட்டுள்ளது என்று தமிழ்த் தேசிய விடுதலைக் கூட்டமைப்பின் செயலாளர் நாயகமும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான சிவாஜிலிங்கம் தெரிவித்தார்.

இந்தியா வெளிவிவகார அமைச்சருக்குத் தமிழக் கட்சிகளின் அரங்கம் மகஜர்

இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணா இலங்கைக்கான விஜயத்தை மேற்கொண்டிருந்த போது அவரை சந்திப்பதான முயற்சியில் தமிழ்க் கட்சிகள் அரங்கம் ஈடுபட்டது.

இருப்பினும் தமிழ்க் கட்சிகள் அரங்கத்துடனான சந்திப்பில் ஈடுபடுவதற்கு எஸ்.எம்.கிருஷ்ணாவுக்கு நேரமின்மை காணப்பட்டதால் அந்த முயற்சி பயனளிக்காது போனது. இந்நிலையிலேயே இந்தியத் தூதுவர் ஊடாக எஸ்.எம்.கிருஷ்ணாவுக்கு மகஜரொன்றை அனுப்பி வைக்க தமிழ்க் கட்சிகள் அரங்கம் நடவடிக்கை எடுத்தது. (த)

## படிப்பு



அறிவுத் தேவையை விட கவனக்குறைவுதான் அதிக கஷ்டத்தை உண்டு பண்ணுகிறது என்று ஓர் அறிஞர் கூறியிருக்கிறார்.

இதற்கு ஏட்டுப்படிப்பும் அனுபவப் படிப்பும் தேவை. இந்த இரண்டும் இருந்தால்தான் வாழ்க்கைச் சக்கரத்தைச் சுலபமாக நகர்த்த முடியும்.

இன்று படிப்பதற்குத் துணையாக இருப்பது புத்தகங்கள். அதனை ஒரு மாணவன் சரியாகப் படிக்கவில்லை என்றால் மூளையில் களிமண்ணா இருக்கிறது என்று கேட்பது வழக்கம்.

ஆனால் முற்காலத்தில் புத்தகமே களிமண்ணாகத்தான் இருந்தது என்பதை நினைத்து கொஞ்சம் ஆறுதல் அடையலாம்.

புத்தகங்கள் முதலில் களிமண் சுவடியாகத்தான் இருந்தன. அதன் பிறகுதான் கல்லு, கட்டை என எழுத்துக்களைப் பதிக்க ஆரம்பித்தார்கள். இப்போது அச்சுத் தாள்களில் பதிக்க ஆரம்பித்து விட்டார்கள்.

தாள்களில் அச்சுக்களைப் பதியும் பழக்கம் எகிப்தில்தான் ஆரம்பமாகியது. வலது பக்கம் ஆரம்பித்து இடது பக்கம் வாசித்து முடிக்கும் பழக்கத்தை 14 ஆவது நூற்றாண்டில் கிரேக்கர்கள்தான் கண்டு பிடித்தார்கள். 15ஆம் நூற்றாண்டில் ஜேர்மனியர் ஒருவர்தான் அச்சடிக்கும் முறையைக் கண்டு பிடித்தார்.

இன்றைக்குப் பல புத்தகங்கள் அச்சடித்து வெளியிடப்பட்டுள்ளன. நூறு வருடங்களுக்கு முன்பெல்லாம் யாராவது இறந்தால் புத்தகங்களையும் சேர்த்துப் புதைப்பார்கள். அவர் இருக்கும் போது புத்தகம் படிக்கவில்லை இனியாவது படிக்கட்டும் என்று சொல்லித்தான் புத்தகத்தை வைப்பார்கள்.

இந்தத் தகவல், படிப்பின் முக்கியத்துவம் என்ன என்பதைச் சொல்வதற்குத்தான் கூறப்பட்டது

''உங்களுக்கு பரீட்சை வருகிறது படி'' என்று மாணவர்களைக் கட்டாயப்படுத்தக் கூடாது. அவர்கள் தாங்களாகவே உணர்ந்து படிக்க வேண்டும்.

பரீட்சை வருகிறது என்று சிலபேர் அடுத்தவர்களையும் நம்பி இருப்பார்கள். அது தவறு. ஒருவர் இப்படித்தான் அடுத்த வீட்டுக்காரரிடம்,

''பரீட்சை வருகின்றது உங்களது மகனை நன்றாகப்படிக்கச் சொல்லுங்கள்'' என்று கூறினார். ''எனது மகன் மீது உங்களுக்கு நிறைய அக்கறை நன்றி'' என்றார் அவர். ''அதற்கில்லை உங்களது மகனுக்கு பக்கத்தில் உட்கார்ந்து என் மகன் பரீட்சை எழுதப்போகிறான். அதுதான் சொன்னேன்'' என்றார் அவர்.

கோ.சுவாமிநாதன்.

## எழுந்து நில் போராடு



நம்முடைய ஒவ்வொரு செயலுக்கும் விளைவு உண்டு எனப் பெரியவர்கள் சொல்லக் கேட்டிருக்கிறோம். விளைவுகள் முற்றிப் பயனாக - அதாவது நற்செயல்கள் புண்ணியமாகவும், தீய செயல்கள் பாவமாகவும்- நமக்கு வந்து சேரும். செயலின் தன்மையைப் பொறுத்து முற்றிப் பயன் அளிக்கும் காலம் மட்டும் வேறுபடும். கற்பனை கூட செய்ய முடியாத காலம் தொடங்கி விதவிதமான பிறவிகள் எடுத்து நாம் மமதையுடன் செயல் புரிந்து வந்திருக்கிறோம். அச்செயல்களின் விளைவாகக் கோடானகோடி தடங்கள் நம் உள்ளத்தில் பதிந்து உள்ளன. ஒன்று இவற்றை வாழ்ந்து தீர்க்க வேண்டும்; அல்லது துடைத்து அழித்து எறிய வேண்டும்.

ஞானம் தீயாகக் கொழுந்து விட்டு எரிவதால் அதில் கர்மங்கள் சாம்பலாகி விடுகின்றன. செயலின் எதிர் விளைவாகிய பாவ புண்ணியங்கள் என்ற பந்தத்தில் இருந்து விடுதலை கிடைக்கின்றது.

வினைக் குப்பைகளை ஞான அக்கினியில் எரிக்கும் வேலையே ஞானியின் வேலை. வினைக் குப்பைகள் சேரும் என்பதற்காகச் செயல் புரியாமல் இருந்துவிட முடியுமா? சமையல் செய்தால் பாத்திரங்கள் கறைபடியும் என்று எந்தத் தாயாவது சமையலைத் தவிர்க்க முடியுமா?

நல்ல உடை உடுத்திக் கொண்டு வெளியில் போய் வந்தால் உடை அழுக்காகிவிடும் என்றாலும் உடையையும் உடுத்திக் கொண்டு அழுக்கும் ஆகாமல் நாம் பார்த்துக் கொள்ள முயற்சி செய்வதில்லையா? அது போலத்தான் வாழ்ந்தும் தீர வேண்டும். ஆன்மாவில் அழுக்குப் படியாதபடி பார்த்துக் கொள்ளவும் வேண்டும்.

நம்மில் பலருக்கு ''தான்'' என்னும் அகங்காரம் நிறையவே உண்டு. ஆனால் தான் என்னும் அறிவு எத்தனை பேருக்கு உண்டு? உண்மையாகத் 'தான்' என்பது எது? பலர் தங்கள் பதவிகளையே 'தான்' என எண்ணி விடுகிறார்கள். இன்னும் உடம்பையே 'தான்' என்று எண்ணுவர். ஆனால் இவையெல்லாம் உண்மையான 'தான்' அல்ல. தேங்காயின் மீது கடினமான ஓடும் நார்க்குப்பையும் உண்டு. அவற்றைத் தோலுரித்த பிறகே உண்மையான தேங்காய் அகப்படும். அதுபோல எவை எவற்றைத் 'தான்' என்று எண்ணுகிறோமோ அவை அவற்றைத் தோலுரித்துப் பார்க்க வேண்டும்.

என்னுடைய 'நான்' எது என்பதை 'நான்தான்' தேடியாக வேண்டும். காரணம் இந்தச் சிக்கலை உண்டாக்கிக் கொண்டதும் 'நான்'. எனவே 'நான்' என்ற அகந்தையில் 'நான்' என்ற ஆன்மாவை, நானே தொலைத்த காரணத்தால் நான் மட்டுமே தேடிக் கண்டுபிடிக்க வேண்டும்.

பதவியோ, சரீரமோ, மனமோ - நான் அல்ல. அவை அழியக்கூடியவை. அழிவற்ற ஆன்மாவே நான். பல ஜென்மமாக விளைந்த பதிவுகளில், எண்ணக் குழப்பங்களில் அது புதையுண்டு கிடக்கிறது. ஆன்மாவைச் சூழ்ந்து புதைந்துள்ள வினைக் குப்பைகளை ஞானக் கனலில் எரித்து முடிப்பதே யோகியின் பணி.

சுகி சிவம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரலாறு சொல்லும் பாடம்

சிறிலங்கா கார்டியன் என்னும் இணையத் தளத்தில் டாக்டர் ஜானக குணத்திலக என்பவரால் எழுதப்பட்ட வரலாற்றுக் கட்டுரையை மொழியாக்கம் செய்தவர் தி.வண்ணமதி.

சீனாவில் மிங் அரச பரம்பரையின் ஆட்சிக்காலத்தின் போது குறிப்பிட்டதொரு நோக்கத்தில் அமைந்த பயணமாக அட்மிறல் சங் கீயினது இலங்கைக்கான பயணம் அமைந்தது. குறிப்பட்ட அந்தக் காலப்பகுதியில் அனைத்துலக அளவிலான வர்த்தகத்தில் பேராதிக்கம் செலுத்திய உலகின் பலம் பொருந்திய - வளம் மிக்க- பேரரசாக சீன சாம்ராஜ்ஜியம் திகழ்ந்தது. அந்தக் காலத்தின் கடல்வழி வர்த்தகத்தின் முக்கிய விநியோகப் பாதையாகத் திகழ்ந்த பட்டுக் கடல் வழிப் பாதையில் (Silk Sea Route ) சீனப் பேரரசின் மேலாண்மையினை உறுதிப்படுத்துவதற்கும் இலங்கையில் தனது சிற்றரசினை நிறுவும் முனைப்புக்களில் ஈடுபடுவதற்குமாகவே இந்தச் சீன அட்மிரல் இலங்கைக்கு அனுப்பப்பட்டார். அந்தச் சமயத்தில் தரைவழிப் பட்டுப் பாதை மூடப்பட்டிருந்தது.

கடல் வழியான பட்டுப் பாதையினை உருவாக்குவதற்காக தொடர்புடைய நாடுகளுடன் உறவினை ஏற்படுத்தும் வகையில் ஒரு கப்பல் நிறைய அன்பளிப்புப் பொருள்களுடன் அட்மிரல் செங் கீ சீனாவிலிருந்து புறப்பட்டார். குறிப்பிட்ட இந்தச் சுற்றுப்பயணத்தின் விளைவுகள் அதிக பலன் எதனையும் தராதமையினால் ஈற்றில் இந்த முயற்சி கைவிடப்பட்டது. இந்தச் சுற்றுப் பயணத்தின் போது அட்மிரல் செங் கீ 50,000 கிலோ மீற்றர் பயணம் செய்து 30 நாடுகளுக்கு சென்றிருந்தார். இவற்றில் இலங்கையும் ஒன்று.

தேரவாத பௌத்தத்தின் மையமாக, இந்து சமுத்திரப் பிராந்தியத்தின் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்ததொரு பகுதியில் இலங்கை அமைந்திருப்பதும், நட்புறவுடன் பழகவல்ல மக்கள் வாழும் இந்தத் தீவில் முக்கியமான பொருள்கள் சில உற்பத்தி செய்யப்படுவதும்தான் இது போன்ற வெளிநாட்டு தூதுவர்களின் வரவின் முக்கிய நோக்கமாக அமைந்தது. அட்மிரல் செங் கீ ஐந்து முறை இலங்கைக்கு வருகை தந்திருக்கிறார். இப்படி ஒருமுறை வந்தபோது அவர் காலியில் உலகப் பிரசித்திபெற்ற மும்மொழிக் கல்வெட்டினைத் திறந்து வைத்திருக்கிறார். 1911ஆம் ஆண்டு பிரிட்டன் பொறியியலாளரான ரொம்லின்சன் என்பவர் காலியிலுள்ள கிறிப்ஸ் வீதியில் இந்தக் கல்வெட்டினைக் கண்டுபிடித்தார். குறிப்பிட்ட இந்தக் கல்வெட்டில் பொறிக்கப்பட்டிருந்த வாசகத்தின் மொழி பெயர்ப்பினை வாசிக்கும் வாசகர்கள் அனைவரும் அதன் முக்கியத்துவத்தினை விளங்கிக் கொள்வர்.

''உலகமே போற்றும் உத்தமபுத்தரின் பின்னால் தனது கருத்துக்களைக் கூறிய மாட்சிமை பொருந்திய சீன சாம்ராஜ்ஜியத்தின் மிங் சக்கரவர்த்தி, யுனஸ் சிங் கொ மற்றும் வாங் சிங் லெயின் ஆகியோரை அனுப்பி வைத்தார்''

''நாங்கள் உங்களை ஆழமாகப் போற்றுகிறோம். இரக்கமுள்ள மதிப்பு மிக்க ஒருவர் நீங்கள். எதனையும் முழுமையாக நிறைவேற்றும் உங்களின் அந்தப் பண்பு அனைவர் மனங்களையும் தொடுகிறது. நல்லொழுக்கம் அனைத்து புரிந்துணர்வுகளையும் தாண்டி நிற்கிறது. மனித உறவுகளுடன் தொடர்புடைய உங்களின் [illegible] மற்றும் தங்களின் ம[illegible] ஆற்றிலுள்ள மணலை எண்ணுவதற்கு ஒப்பானது. உங்களின் இரக்கம் சுறுசுறுப்பானது, உங்களின் பலம் தனித்துவமானது, தங்களின் மாயம் நிறைந்த வினைத்திறன் ஒப்பீட்டுக்கு அப்பாற்பட்டது''




வீதிப் புனரமைப்புப் பணிகளில் சீனர்கள்

"தமது பொம்மை இராஜ்ஜியங்களை நிறுவிய ஏனைய காலனித்துவ வல்லரசுகளைப் போலன்று, சீனா ஒருபோதும் தனது அதிகாரத்தை இலங்கை மீது திணித்ததில்லை. இன்றுகூட, இலங்கை மன்னனின் வழித்தோன்றல்கள் என்று கூறும் குடும்பம் ஒன்று சீனாவின் குவான்செள மாகாணத்தில் இருக்கிறது. சிலர் ஏற்றுக்கொள்ளாத போதிலும், அவர்கள் வீர அழகேஸ்வராவின் வழித் தோன்றல்கள் என்பதே உண்மையான பெரிய விடயமாகும்."

''இந்து சமுத்திரத்தின் தென்முனையில் 'சிலோன்' என்ற மலைகளைக் கொண்ட தீவு அமைந்திருக்கிறது. இங்கிருக்கும் பௌத்த ஆலயங்கள் அதிசயமான சக்திகள் உறைந்து போயிருக்கும் புனிதத் தலங்கள். வெளிநாடுகள் தொடர்பான எங்களின் ஆணைகள் தொடர்பாக அறிவிப்பதற்கு நாங்கள் கடல்வழியாகப் பயணித்தோம். எங்களுக்கான பாதுகாப்பினை கடற்றாய் அருளினாள்''

இலங்கையின் மத்திய மலைநாட்டுப் பகுதியிலுள்ள பௌத்த ஆலயங்களுக்கும் அட்மிரல் செங் கீ பயணம் செய்வதற்காகவும் அவர் இலங்கைக்கு அனுப்பப்பட்டிருப்பதை கிடைக்கப் பெற்றிருக்கும் ஆதாரங்கள் உறுதிப்படுத்துகின்றன. இந்தச் சீனத் தூதுவர் மலைநாட்டிலுள்ள கோயில்களுக்கான பயணத்தின் போது கீழ்க்காணும் பொருள்களை அன்பளிப்பாக வழங்கியுள்ளார்.

''1000 தங்கக் கட்டிகள், 5000 சில்வர் கட்டிகள், பலவகைகளிலும் பல வர்ணங்களிலும் அமைந்த 50 உருளைகளில் பட்டுத் துணிகள், நான்கு சோடி தங்க ஆபரணப் பதாகைகள், தங்கம் பொறிக்கப்பட்ட பட்டுக்கள், ஐந்து பண்டைக்கால விளக்குகள், தங்க முலாம் பூசப்பட்ட புராதன பூச்சாடிகள், 2500 குப்பிகளில் வாசனைத் திரவியங்கள், பத்துச்சோடி அரக்கு மெழுகுதிரிகள் என்பன அடங்கும்''.



புதிய துறைமுகத்தில் முதல் கப்பல் பொருள்களை இறக்குகிறது.

குறித்த அந்தக் காலப்பகுதியில் சீனாவினது இராஜதந்திரமானது தங்களது இலக்குகள் எவையோ, அவற்றினை அடையும் வகையில் மென்போக்கினைக் கொண்டதாகவும், முரட்டுத்தன்மை அற்றதாகவுமே பெரிதும் காணப்பட்டது. ஆனால் குறிப்பிட்ட சில சம்பவங்களின் போது தங்களது குறியிலக்கு எதுவோ அதனை அடைவதற்கு வன்முறையினையும் சீனர்கள் பிரயோகித்த வரலாறு உண்டு. சீனர்களின் இந்தப் போக்கு மேலைத்தேய காலனித்துவ ஆட்சியாளர்களிடமிருந்து முற்றிலும் வேறுபடுவதாகவே அமைந்தது. அடக்குமுறை, ஒடுக்குமுறை, முறைகேடு மற்றும் மதமாற்றம் என்பன மேலைத்தேய காலனித்துவ ஆட்சிக்குள் உட்பட்டிருந்த நாடுகளில் பெரிதும் காணப்பட்டன. ஆனால் இன்றைய நவீன உலகில் கூட மேற்கு நாடுகளின் இராஜதந்திரத்தில் முன்னர் இருந்தது போன்ற அடிப்படை அம்சங்கள் காணப்படுவது விநோதமானது.

அந்தக் காலப்பகுதியில் கோட்டை இராஜதானியை ஆண்டு வந்த வீர அழகேஸ்வரா என்ற மன்னர் சீன அட்மிரல் செங் கீயினது வருகையினைப் பெரிதும் எதிர்த்தார்.

யாழ்ப்பாண இராஜதானியின் மன்னன் ஆரியச்சக்கரவர்த்தியின் தாக்குதலால் கோட்டை இராஜதானியின் ஐந் தாம் புவனேகபாகு மன்னர் தப்பிச் சென்றதைத் தொடர்ந்து வீர அழகேஸ்வரா, கோட்டை இராஜதானியினை ஆண்டான்.

பேராசிரியர் செனரத் பரணவிதாரண வின் 'சிங்களாயோ' என்ற நூலின்படி, 1411 இல் மீண்டும் திரும்பி வந்த அட்மிரல் செங், வீர அழகேஸ்வராவைக் கைதுசெய்து அவனைச் சீனாவுக்கு நாடு கடத்தியதுடன் சிங்கள இராஜ்ஜியத்தைப் பின்னர் ஆறாம் பராக்கிரமபாகு எனப் பெயர் மாற்றிக் கொண்ட செபனானவிடம் கையளித்தார்.

தனது இராஜ்ஜியத்தைப் பலப்படுத்திய ஆறாம் பராக்கிரமபாகு, கோட்டையைத் தனது தலை நகராக்கிக் கொண்டதுடன் மலையக இராஜ்ஜியத்தையும் தனது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்து சிங்கள இராஜ்ஜியங்களை ஒன்றிணைத்தான். பின்னர் யாழ்ப்பாணத்துக்கு செய்தி ஒன்றை அனுப்பிய ஆறாம் பராக்கிரமபாகு அதனையும் தனது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்ததுடன் பிரித்தானியர் இலங்கையை ஒன்றிணைப்பதற்கு முன்னர் இறுதியாக இலங்கையை ஒன்றிணைத்துத் தனது கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருந்தான்.

ஆறாம் பராக்கிரமபாகு யாழ்ப்பாணத்துக்கு அனுப்பிய செய்தியால் சிங்களவர்கள் ஏற்படுத்திய கலவரமே அவனுக்கு உதவியதாகக் கூறப்படுகிறது. அவனது முயற்சிகளுக்கு புகழ் பெற்ற விதாகம மகா தேர உதவினார். அவனது புகழ் கவிஞர் துட்டகமுவ சிறி ராகுலவினால் கவிகளில் வடிக்கப்பட்டுள்ளது. தென்னிந்தியா, மலாய் மற்றும் சுமத்திரா ஆகிய நாடுகளிலும் செல்வாக்கு விளங்கும் வகையில் அவன் இலங்கையை 55 வருடங்கள் ஆட்சி புரிந்தான். ஆறாம் பராக்கிரமபாகு 1416 மற்றும் 1420ஆம் ஆண்டுகளில் சீனாவுக்கு பயணம் செய்த பெருமை யைக் கொண்டிருப்பதாக வி.எல்.பி. மென்டிஸ் என்பவர் 'இலங்கையின் வெளியுறவு' என்ற நூலில் குறிப்பிட்டுள்ளார்.


தமது பொம்மை இராஜ்ஜியங்களை நிறுவிய ஏனைய காலனித்துவ வல்லரசுகளைப் போலன்றி, சீனா ஒருபோதும் தனது அதிகாரத்தை இலங்கை மீது திணித்ததில்லை. இன்றுகூட, இலங்கை மன்னனின் வழித்தோன்றல்கள் என்று கூறும் குடும்பம் ஒன்று சீனாவின் குவான்செள மாகாணத்தில் இருக்கிறது. சிலர் ஏற்றுக்கொள்ளாத போதிலும், அவர்கள் வீர அழகேஸ்வராவின் வழித்தோன்றல்கள் என்பதே உண்மையான பெரிய விடயமாகும். ஆறாம் பராக்கிரமபாகுவின் இறப்பைத் தொடர்ந்து இந்தியப் படையெடுப்புக்கள், சிங்களவர்களின் ஒற்றுமையின்மை மற்றும் பௌத்த ஆலயங்களின் முரண்பாடு ஆகியவற்றினால் பிளவுகள் ஏற்பட்டன. இறுதியாக, சிங்களவர்களுக்கு உதவுவது என்ற பெயரில், இலங்கையை ஆக்கிரமித்த ஐரோப்பியர்கள் ஏறத்தாழ 450 ஆண்டுகள் ஆட்சி செய்தனர்.

நாம் மீண்டும் வரலாற்றின் அதே காலகட்டத்தில் இருக்கிறோம். வரலாறு மீண்டும் திரும்பி வருமா என்பதே தற்போதுள்ள வினாவாகும். வரலாற்றின் மிகப்பெரிய பாடம், நாம் அதிலிருந்து ஒருபொழுதும் கற்றுக் கொள்வதில்லை என்பதுதான்.

*நன்றி-புதினப்பலகை.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஈராண்டு நினைவலைகள்



### அமரர் நமசிவாயம் ஏரம்பமூர்த்தி

(இளைப்பாறிய அதிபர்)

அன்னையின் மடியில்
*10.05.1939*

இறைவன் திருவடியில்
*22.11.2008*

திதி: ஏகாதசி (02.12.2010 வியாழக்கிழமை)

ஈர விழிகளோடு
ஈராண்டுகள் சென்றதப்பா!
எத்தனை ஆண்டுகள்
ஓடி மறைந்தாலும்
உங்கள் உருவம் எம்முன்னே
தோன்றும் அப்பா!
ஈடு இணையில்லா
எங்கள் தெய்வமே!
ஈடு இணையில்லாத
ஈசனடி சென்றீர்களே!
உருவம் மறைந்தாலும்
உள்மனம்
மறக்காது அப்பா உங்களை.

என்றும் உங்கள் நினைவோடு வாழும்:
**மனைவி- செல்வராணி,**
**மகள்- விந்துகி.**
மாவடிப்பிள்ளையார் கோயிலடி,
மீசாலை கிழக்கு, மீசாலை.

(சி/572668)

## மாகாண மட்டப் போட்டிகளில் வெற்றி பெற்றோருக்கு பரிசில்

தென்மராட்சி, டிசெ.2

வடக்கு மாகாணக் கல்வித் திணைக் களத்தின் ஏற்பாட்டில் மாகாண மட்டப் போட்டிகளில் வெற்றிபெற்ற ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்குப் பரிசில்கள் வழங்கும் நிகழ்வு சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலையில் நடைபெற்றது.

மாகாணக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக மாகாண முன்னாள் கல்விப் பணிப்பாளர் வீ.இராசையா கலந்துகொண்டார்.

ஆரம்பப் பிரிவு மாணவர்களிடையே நடத்தப்பட்ட மாகாண மட்டப் போட்டிகளில் வெற்றி பெற்ற 74 மாணவர்களுக்கும் புலமைப் பரிசில் பரீட்சையில் கடந்த 3 வருடங்களில் சித்தி பெற்ற விழிப் புலன் இழந்த மாணவன் உட்பட 13 மாணவர்களுக்கு சாதனை விருதுகளும் நிகழ்வில் வழங்கப்பட்டன.

நிகழ்வில் மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர், வலயக் கல்விப் பணிப்பாளர்கள், பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள், ஆரம்பப் பிரிவு உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், பாடசாலைகளின் அதிபர்கள், ஆசிரியகள், பெற்றோர்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

வவுனியாவைச் சேர்ந்த சிங்கள மாணவர்களின் நாடகம் உட்பட கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன.

(201-207)

## வியாழ மாற்றத்தை முன்னிட்டு விசேட ஹோமம்

கோப்பாய், டிசெ.2

கோப்பாய் வெள்ளெருவைப் பிள்ளையார் கோயிலில் வியாழ மாற்றத்தை முன்னிட்டு இன்று வியாழக்கிழமை காலை 8 மணிக்கு விசேட ஹோமம் மற்றும் வழிபாடுகள் ஆரம்பமாகி நடைபெறவுள்ளன.

(201-72)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



### திருமதி குழந்தை நாகரப்பா

தோற்றம்: *12.03.1914*
மறைவு: *02.11.2010*

இன்று (02.12.2010) வியாழக்கிழமை நண்பகல் 12 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும் அஞ்சலி நிகழ்விலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறும் அன்னாரின் மரணச்சடங்கில் கலந்துகொண்டவர்கள், அனுதாபத்தைத் தெரிவித்தவர்களுக்கும் எமது நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

விக்னேஸ்வரா வீதி,
நிற்சாமம், சங்கானை.

(106731)

பிரிவால் துயருறும்:
**பிள்ளைகள்.**

## ஓராண்டு நினைவஞ்சலி

கண் மகிழ
15 . 04 . 1973



கண்ணீர் சொரிய
13 . 12 . 2009

### அமரர் பாலசிங்கம் பிரபாத்

திதி: துவாதசி (02.12.2010)

பத்துமாதம் உன்னைச் சுமந்து
முப்பது ஆறு ஆண்டுகள் பாசத்துடன் உன்னை வளர்த்து
ஓராண்டு ஆனதோ உன்னை இழந்து
எத்தனை ஆண்டுகளானாலும் ஆறுமோ எம் துயரமைய்யா?

*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

என்றும் பாசமுடன்:

சிறிமஹால்,
நுணாவில் கிழக்கு,
சாவகச்சேரி

தாய்: சகுந்தலாதேவி பாலசிங்கம்,
சகோதரிகள்: பிரேமிளா நிரஞ்ஜயன், மஞ்சுளா சீராவன்,
மனைவி: காலகுமாரி.

(106707)


# சுவர்ணமஹால்

## பினான்ஸியல் சேர்விஸஸ் லிமிடட்

### யாழ் மக்களுக்கு ஒரு பொன்னான சந்தர்ப்பம்

## 03 மாத நிலையான வைப்புக்கு

ஆண்டு ஒன்றிற்கான வட்டி வீதம்

# 14.00%

**(A.E.R.14.75%)**

(சிரேஸ்ட பிரஜைகளுக்கு)

இந்த அரிய வாய்ப்பு எமது கிளை யாழில் தடம் பதிக்கும் நாளான 06.12.2010 அன்று மட்டுமே

இல. 338, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

**தொடர்புகளுக்கு : டிலானி 077 22 68 555**
**: ராகுலன் 077 22 68 723**

எமது பிரதான சேவைகள்

- நிலையான வைப்புகள்
- சேமிப்பு வைப்புகள்
- தங்க நகை அடகு சேவை
- வாடகை கொள்வனவு
- நிதிக்குத்தகை (லீசிங்)

SFS

சுவர்ணமஹால்
பினான்ஸியல் சேர்விஸஸ் லிமிடட்
A trust etched in gold

இல: 654, காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி: 0112 556160-4
தொலைநகல்: 0112 595062/2589823 மின் அஞ்சல்: infor@sfs.lk இணையத்தளம்: www.sfs.lk

*பணிப்பாளர் சபை உறுப்பினர்கள்:*

கலாநிதி சோமா எதிரிசிங்க (அவைத்தலைவி) ஜே.எச். எதிரிசிங்க (பிரதி அவைத்தலைவர்) ஏ.டி.. எதிரிசிங்க (பணிப்பாளர்) என்.பி. எதிரிசிங்க (பணிப்பாளர்) ஏ.எஸ்.எதிரிசிங்க (பணிப்பாளர்) சுனில் அபேரட்ன (பணிப்பாளர்) FCA (SL), FSCMA (UK), FCMA (SL), CMA (AUS) மஹேந்திர டி சில்வா (பணிப்பாளர்) MBA, FCA, FSCMA (AUS) சமீர கனேகொட (பணிப்பாளர்/நிறைவேற்று அதிகாரி) ACA, B.B.Mgt. (Acc), ASCMA.

இலங்கை மத்திய வங்கியின் நாணய சபையினால் 1988ம் ஆண்டின் 78ம் இலக்க நிதி ... பதிவு இல : PB 594


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நீங்கா நினைவில் 25 ஆண்டுகள்

பிறப்பு
18.12.1924



இறப்பு
08.12.1985

**திதி: 02.12.2010**

### அமரர் கு.சங்கரப்பிள்ளை

(கலிஷ்ஷ அதிபர், சாவகச்சேரி இந்துக் கல்லூரி)

*ஆண்டுகள் இருபத்தைந்து அதற்குள் ஓடியதோ?*
*ஈண்டு உம் நினைவு எம் நெஞ்சில் மோதுகிறதே!*
*பூண்டதோர் ஆசிரியப் பணியோடு, அதிபருமாய்*
*நீண்டநாள் உழைத்திட்ட நேர்மையை மறப்போமோ?*
*சாவகச்சேரி மண் பெற்ற சாந்த சொரூபியே!*
*சாந்தமும் சமூகத் தொண்டால் சாதித்த மானுடனே!*
*ஆவதற்கு ஏதுமில்லை என்று அறுபத்தோர் அகவையில்*
*பூவுலகை நீத்த உன் புகழ் என்றும் மறையாதே!*
*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

என்றும் நீங்கா நினைவில்:
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள்,பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

"சிவகிரி"
பெரிய அரசடி,
சாவகச்சேரி.

# திருமலை நகரசபை நிர்வாகத்தை செயற்படுத்துவதில் குறுக்கீடுகள்

## சபைத் தலைவர் தெரிவிப்பு

திருகோணமலை, டிசெ.2

திருகோணமலை மத்திய பொதுச்சந்தையில் வாகனத் தரிப்பிடத்திற்குக் கட்டணம் அறவிடப்படமாட்டாது. ஆனால், சிலர் அநாகரிகமானவர்களுக்கு வக்காளத்து வேண்டி வாகனத் தரிப்பிடத்தில் கட்டணம் அறவிடுவதற்குத் துணைபுரிகின்றனர். இதனால் வரியிறுப்பாளர்கள் அசௌகரியங்களுக்கு உள்ளாகின்றனர்.

இவ்வாறு திருகோணமலை நகரசபைத் தலைவர் க.செல்வராசா, திருகோணமலை ஊடக இல்லத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை காலை நடைபெற்ற ஊடகவியலாளர்களுடனான சந்திப்பில் பேசுகையில் குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில்,

நகரசபை, நிர்வாகத்தை சரியாக செயற்படுத்த முடியாதுள்ளது. சக்திக்கு மீறிய செயற்பாடுகளால் எம்மால் சரிவர சேவைகளை ஆற்றமுடியாதுள்ளது.

திருக்கோணேஸ்வரம் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள சட்டவிரோதக் கடைகளை அகற்ற முற்பட்டபோதிலும், எமது சக்திக்கு மீறியோர் தலையிட்டதால் அவற்றை அகற்ற முடியாதுபோயிற்று.

கன்னியா பகுதியிலுள்ள நகரசபைக்குச் சொந்தமான திண்மக் கழிவகற்றும் இடத்தில் தனியார் நிறுவனங்களும் பாதுகாப்புப் படையும் அனுமதியின்றி திண்மக்கழிவுகளை அகற்றி வருகின்றனர். இதனால் அவ்விடத்தில் பல சிக்கல்கள் தோன்றியுள்ளன.

பொதுச்சந்தையில் முச்சக்கரவண்டி நிலையமொன்று அனுமதியின்றி இயங்குகிறது. இதனையும் எம்மால் அகற்ற முடியாதுள்ளது. இதனை அகற்ற நாம் முனைந்தபோது வணக்கத்திற்குரியவர்களும்




கௌரவத்திற்குரியவர்களும் தலையிடுகின்றனர்.

மேலும் பொதுச்சந்தையில் குறைந்த விலைக்குச் கடைகளைப் பெற்றுக்கொண்ட வியாபாரிகள் வேறு நபர்களுக்கு அதிக விலையில் இக்கடைகளைக் கொடுத்துள்ளமை தெரிய வந்துள்ளது. அங்கு அமைக்கப்பட்ட கடைகளின் எண்ணிக்கையைக் காட்டிலும், அதிகளவான வியாபாரிகள் வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றனர்.

மேல்மாடியில் அமைக்கப்பட்ட கடைகள் குறைவாகவுள்ளமையால் தரைத் தளத்திலுள்ள கடைகளுக்கு முன்பாக பொருள்களைப் பரப்பி விற்பனை செய்கிறார்கள்.

எமது நிர்வாகப் பிரிவில் 944 பேர் டெங்கு நோயால் பீடிக்கப்பட்டுள்ளனர். இவர்களில் 11 பேர் மரணமடைந்துள்ளனர். இந்நிலையில், இன்று முதலாம் திகதி தொடக்கம் 7ஆம் திகதி வரை டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்- என்றார்.

இச்சந்திப்பில் நகரசபை உறுப்பினர்களான நூர்முஹம்மது, க.அருட்செல்வம், சி.கரிகாலன் ஆகியோர் கலந்து கொண்டனர். (ளி)

## கடலில் நீராடச் சென்ற இருவரைக் காணவில்லை

மட்டக்களப்பு, டிசெ.02

திருக்கோயில் கடற்கரையில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை காலை நீராடச் சென்ற எழுவரில் இருவர் காணாமல் போயுள்ள னர்.

இவ்விருவரில் ஒருவர் புதுக்குளம் தம்பிலுவில் பகுதியைச் சேர்ந்த 15 வயதான சிவசோதி ரோஜன் என்றும் மற்றவர் பதுளைப் பிரதேசத்தைச் சேர்ந்தவர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. நண்பரின் பிறந்தநாளைக் கொண்டாடுவதற்காக இவர்கள் கடற்கரைக்குச் சென்றனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுவரையில் காணாமல் போன இருவர் குறித்தும் எதுவித தகவல்களும் கிடைக்கப்பெறவில்லை. பொலிஸார், மீனவர்கள், பொது மக்கள் ஆகியோர் கடற்பரப்பில் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர். (ளி)

## பயிற்சி...



பங்களிப்பு: இலங்கைப் பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவின் ஏற்பாட்டில் பத்திரிகையாளர்களுக்கான ஒழுக்கக் கோவை தொடர்பான இரண்டு நாட்கள் வதிவிடப் பயிற்சி நெறி கடந்த சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் மட்டக்களப்பு சுபராஜ் ஹோட்டலில் நடைபெற்றது. இதில் கலந்து கொண்ட பத்திரிகையாளர்களைக் காணலாம்.

(படம்: மண்டூர் நிருபர்)

# கைவிடப்பட்டுள்ள தோட்டக் காணிகள் துண்டாடப்படுவதைத் தடுக்க வேண்டும்

## இராதாகிருஷ்ணன் சபையில் தெரிவிப்பு

நுவரெலியா, டிசெ.2

கைவிடப்பட்ட தேயிலைக் காணிகள் துண்டாடப்படுவதைத் தடுப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும். அத்தகைய காணிகளை மீள் நடுகையில் தோட்டத் தொழிலாளர்களுக்கு மீள் பயிர்ச்செய்கைக்காகப் பகிர்ந்தளிக்க முன்வர வேண்டும் - இவ்வாறு நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வே.இராதாகிருஷ்ணன் கடந்த திங்கட்கிழமை தெரிவித்தார்.

வரவு - செலவுத்திட்ட இரண்டாவது வாசிப்பின் மீதான விவாதத்தில் நேற்றுமுன் தினம் அவர் தொடர்ந்து கூறியவை வருமாறு:-

நாட்டினுடைய பொருளாதாரத்தில் கணிசமான பங்குவகிக்கும் பெருந்தோட்ட சமூகம் நீண்ட காலமாகவே மதுவுக்கு அடிமையாகி வந்துள்ளது. இதனால் அது தனது வளர்ச்சியையும் தடுத்துக் கொண்டுள்ளது. எனினும், ''மத்தட்ட தித்த'' என்ற ஜனாதிபதியினுடைய சீர்திருத்த வேலைத் திட்டத்தின் ஊடாக எதிர்காலத்தில் இந்த நிலைமை மாற்றமடையும் என ம. ம. மு. நம்பிக்கை கொண்டுள்ளது.

ம. ம. மு. எப்பொழுதும் அரசினுடைய அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு தனது பங்களிப்பினை செய்து வந்திருக்கின்றது. முன்னணியின் ஸ்தாபகத் தலைவர் அமரர் பெ.சந்திரசேகரன் 1994ஆம் ஆண்டு இந்த அரசுக்குக் கொடுத்த ஆதரவினூடாகவே 17 வருடகால ஐ.தே. க. ஆட்சிக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது.

15 லட்சம் இந்திய வம்சாவளி மக்களின் வாழ்வாதாரத்தோடு பின்னிப் பிணைந்திருக்கின்ற பெருந்தோட்டத் தொழிற்றுறை மீது அரசு கவனம் செலுத்தியிருப்பது பெருந்தோட்ட மக்களின் வாழ்க்கையிலும், தேயிலை உற்பத்தியிலும் ஒரு பாரிய மாற்றத்தை ஏற்படுத்தும்.

கடந்த காலங்களில் முறையான திட்டமிடல் இன்மையாலும் குறுகிய அரசியல் காரணங்களினாலும் பெருந்தோட்டத் துறையில் மேற்கொள்ளப்பட்ட குடியேற்றத் திட்டங்கள், காணிப் பகிர்வுகள் மற்றும் பயிர்ச்செய்கை நடவடிக்கைகள் தோல்வியடைந்திருக்கின்றன.

கைவிடப்பட்ட மற்றும் பராமரிக்கப்படாத நிலையில் தோட்டங்களுக்கு இடையிலே காணப்படுகின்ற நிலங்களை மீள்நடுகைக்கு உட்படுத்த வேண்டும் என்ற அரசின் கொள்கை நாட்டின் தேயிலை உற்பத்தியையும், தொழிலாளர்களின் வாழ்வாதாரத்தையும் கணிசமான அளவு உயர்த்தும்.

இயலுமானவரை காணிகள் துண்டாடப்படுவதை விடுத்து, மீள்நடுகைக்கு உட்படுத்துவதே சிறந்ததென முன்னணி கருதுகின்றது.

சில பெருந்தோட்டக் கம்பனிகள் தோட்டங்களை முறையாக பராமரிக்கத் தவறுமாயின், அவ்வாறான தோட்டங்களை அரசு பொறுப்பேற்று நிர்வகிக்க முயல வேண்டும்.

அரச மற்றும் தனியார் ஊழியர்களுக்கு வழங்கப்படும் சம்பள உயர்வானது தோட்டத் தொழிலாளரை பொறுத்த வரையில் எட்டாக்கனியாகவே இருக்கின்றது. எதிர்வரும் காலங்களில் தோட்டக்கம்பனிகளுக்கும் தொழிற்சங்கங்களுக்குமிடையில் மேற்கொள்ளப்படவிருக்கின்ற கூட்டு ஒப்பந்தத்தில் தொழிலாளர்களுக்கு நியாயமான சம்பளமும், சலுகைகளும் கிடைப்பதற்கான உறுதிப்பாட்டை ஜனாதிபதியும் இன்றைய அரசும் மேற்கொள்ள வேண்டும்.- இவ்வாறு இராதாகிருஷ்ணன் எம்.பி. தெரிவித்தார்.

## மலையக இளைஞர்களுக்குக் காணி பஸில் நாடாளுமன்றில் தெரிவிப்பு

கண்டி, டிசெ.2

மலையகப் பெருந்தோட்டங்களில் தரிசாகக் கைவிடப்பட்டுள்ள காணிகள் விவசாயத்தில் ஈடுபடும் தோட்ட இளைஞர்களுக்குப் பெற்றுக் கொடுக்கப்படும் - எனப் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ கடந்த திங்கட்கிழமை நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

பெருந்தோட்டத் தரிசு நிலங்களில் மீள் பயிர்ச்செய்கை மேற்கொள்வதில் இளைஞர்களையும் இணைத்துக்கொண்டு அரசு செயற்படுமென்றும் அவர் குறிப்பிட்டார்.

ஐக்கிய தேசியக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஆர். யோகராஜன் வரவு - செலவுத் திட்ட விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போது விடுத்த கோரிக்கைக்கு உடனடியாக அமைச்சர் பஸில் பதில் அளித்தார். (ளி)

## கண்டியில் மண்சரிவு அபாயமுள்ள 100 இடங்கள் குறித்து எச்சரிக்கை

கண்டி,டிசெ.2

தொடர்ந்து பெய்துவரும் அடைமழையால் கண்டி மாவட்டத்தில் ஏராளமான குடும்பங்கள் பாதிப்புக்குள்ளாகியுள்ளன. மாவட்டத்தில் மண்சரிவு ஏற்படும் அபாயம் உள்ள நூறு இடங்கள் இனங் காணப்பட் டுள்ளன என அனர்த்த நிவாரண முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.




கண்டி பூர்ண வத்த, பைரவ கந்த, வெவதென்ன, கம்பளை ஆகிய பிரதேசங்களில் ஏற்பட்ட மண்சரிவால் ஏராளமான வீடுகள் பகுதியாகவோ முற்றாகவோ சேதமாகியுள்ளன.

அத்துடன், இம்மாவட்டத்தில் மண்சரிவு ஏற்படுவதற்கு வாய்ப்புள்ள 100 இடங்கள் இனம் காணப்பட்டுள்ளன. அத்தகைய பிரதேசங்களிலிருந்து 35 குடும்பங்கள் பாதுகாப்பான பகுதிகளுக்கு மாற்றப்பட்டுள்ளன.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு சம்பந்தப்பட்ட பிரதேச செயலாளர்கள்மூலம் நிவாரண உதவிகளை வழங்க அனர்த்த நிவாரண முகாமைத்துவ அமைச்சு ஏற்பாடுகளைச் செய்துள்ளது. கண்டியில் பல பாதைகளில் மண்சரிவும், பாறைகள் சரிவும் ஏற்பட்டுள்ளதால் போக்குவரத்து பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.

மழை தொடர்ந்து பெய்து வருமானால் ஆபத்தான பகுதிகளில் வாழும் மக்கள் மிகவும் எச்சரிக்கையாக இருக்கவேண்டுமென அமைச்சு வேண்டுகோள் விடுத்துள்ளது. அத்துடன், வாகனச் சாரதிகளை மிகவும் விழிப்புடன் வாகனங்களைச் செலுத்துமாறும் அமைச்சு வேண்டுகோள் விடுத்துள்ளது. (ளி)

## ஆயுர்வேத வைத்தியர்களுக்கு மாத்தளையில் பாரம்பரிய பயிற்சி

மாத்தளை மாவட்டத்திலுள்ள பாரம்பரிய வைத்தியர்களுக்கு பஞ்ச கர்ம வைத்தியத்தில் பயிற்சியளிப்பதற்கான திட்டமொன்றை மத்திய மாகாண ஆயுர்வேதத் திணைக்களம் மேற்கொண்டுள்ளது. இத்திட்டம் பிரதேச செயலாளர்கள் மட்டத்தில் மேற்கொள்ளப்படும்.

பாரம்பரிய வைத்தியத்தில் நிபுணத்துவம் பெற்றுள்ள வைத்தியர்களை ஊக்குவித்து நோயாளிகளுக்கு சிறந்த பரிகாரத்தைப் பெற்றுக் கொடுப்பதே இத்திட்டத்தின் நோக்கம் என மத்திய மாகாண ஆயுர்வேத திணைக்களத்தின் ஆணையாளர் எம்.டி.ஜே. அபேகுணவர்தன தெரிவித்தார். இத்திட்டத்தின் முதற்கட்டமாக கடந்த 26 ஆம்திகதி பள்ளேகல மற்றும் யட்டவத்த பிரதேச செயலாளர் பிரிவுகளிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட 70 பாரம்பரிய வைத்தியர்களுக்கான பயிற்சி நெறி [illegible] மாத்தளை டி.பி. தென்னக்கோன் ஞாபகார்த்த ஆயுர்வேத வைத்தியசாலையில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என ஆணையாளர் தெரிவித்தார். (ளி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு அபிவிருத்திக்கு ஐந்து ஆண்டுத் திட்டம் ஆளுநர் தலைமையில் வவுனியாவில் மாநாடு

கொழும்பு,டிசெ. 2

வடமாகாண அபிவிருத்திக்கான ஐந்தாண்டு திட்டம் ஒன்றை வகுக்க மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ.சந்திரசிறி தலைமையில் மாநாடு நடைபெறவுள்ளது.

வடமாகாணத்தின் முதலீடு வளங்கள் தொடர்பாக விரிவாக ஆராயும் பொருட்டு உள்ளூராட்சி மாநாடும் கண்காட்சி ஒன்றுக்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஜனவரி மாதம் 28 ஆம் திகதி முதல் 30 ஆம் திகதி வரை மூன்று நாள்கள் வவுனியாவில் நடைபெறவுள்ள இந்த மாநாட்டின் போது வடமாகாண அபிவிருத்திக்கான ஐந்தாண்டு திட்டங்களைத் தயாரிப்பது தொடர்பாகவும் ஆராயப்படவுள்ளது.

இதற்காக ஏசியன் பவுண்டேசன், ஜி.ரி.இஸட் ஆகியன 200 இலட்சம் ரூபா நிதியுதவி வழங்கவுள்ளதாக ஆளுநர் குறிப்பிட்டார்.

மஹிந்த சிந்தனையில் கூறப்பட்டுள்ள உள்ளூர் மட்ட அபிவிருத்தி ஊடான தேசிய அபிவிருத்தி என்ற தொனிப் பொருளுக்கு அமைய இந்த மாநாடு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக வவுனியாவுக்கான உள்ளூராட்சிப் பிராந்திய உதவி ஆணையாளர் எஸ். அச்சுதன் தெரிவித்தார்.

வட மாகாண ஆளுநர் தலைமையில் நடைபெறவுள்ள இந்த மாநாட்டில் அமைச்சர்கள் முக்கியஸ்தர்கள் பலர் கலந்து கொள்ளவுள்ளனர்.

ஆரம்ப மற்றும் இறுதி நாள் வைபவங்கள் வவுனியா நகர சபை கலாசார மண்டபத்திலும் கண்காட்சி நகர சபை மைதானத்திலும் 'பொருளாதார ஆளுகை' என்ற மாநாடு கச்சேரி மாநாட்டு மண்டபத்திலும் இடம்பெறவுள்ளன. தொழில்நுட்ப அறிமுகம், தகவல் பங்கீடு கல்வி மற்றும் திறன் அபவிருத்தி போன்ற துறையை மேம்படுத்துவது தொடர்பாக இதன் போது கூடுதல் கவனம் செலுத்தப்படவுள்ளது.

அபிவிருத்திக்கு தனியார்துறை, பொது மக்கள் மற்றும் ஏனைய உள்ளூராட்சி மன்றங்களின் ஒத்துழைப்பு பெற்றுக்கொள்ளுதல் போன்றவையே இதன் பிரதான நோக்கமாகும். (த)

## எரிபொருள் நிரப்பு நிலைய ஊழியருக்குச் சீருடைகள்

வலி.வடக்கு,டிசெ. 2

யாழ்.மாவட்டத்தில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்களில் கடமையாற்றும் ஊழியர்களுக்கு சீருடைகள் வழங்கப்பட்டுள்ளன.

தற்போது எரிபொருள் நிரப்பு நிலையங்களில் கடமையாற்றும் ஊழியர்கள் சிவப்பு நிற மேலங்கியுடன் நின்று கடமையாற்றுவதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் முகவர் எரிபொருள் நிரப்பு நிலையங்களில் கடமையாற்றும் ஊழியர்களே சீருடை அணிந்து கடமையாற்றுகின்றார்கள்.

(ம-86)

# 200 பாடசாலைகளுக்கு 5 வருடங்களில் மூடுவிழா

கொழும்பு,டிசெ. 2

போதிய மாணவரின்மை மற்றும் அசாதாரண மாணவர், ஆசிரியர் விகிதம் காரணமாக கடந்த ஐந்து வருட காலப்பகுதிக்குள் 200 இற்கு மேற்பட்ட பாடசாலைக்ள் மூடப்பட்டுள்ளதாக நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டுள்ள அறிக்கையில் குறிப்படப்பட்டுள்ளது.

ஐந்து மாணவர்களும் நான்கு ஆசிரியர்களும் மாத்திரம் காணப்பட்ட மாதபொல ஹபத்கமுவ வித்தியாலயம் மற்றும் கிரியுல்ல தெலிகனுவங்கர ஆரம்ப பாடசாலை உட்பட 35 பாடசாலைகள் 2005 ஆம் ஆண்டு மூடப்பட்டுள்ளன.

போதிய ஆசிரியர் - மாணவர் விகிதமின்மையினாலேயே அதிக பாடசாலைகள் மூடப்பட்டதாக நாடாளுமன்ற உறுப்பினர் அநுரகுமார திசாநாயக்க கேட்ட கேள்விக்கு பதிலளிக்கும் போது கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தன நாடாளுமன்றத்தில் குறிப்பிட்டார்.

2007ஆம் ஆண்டில் 37 பாடசாலைகளும் 2008 ஆம் ஆண்டில் 17 பாடசாலைகளும் 2009 ஆம் ஆண்டில் 103 பாடசாலைகளும் மூடபட்டதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

இது தொடர்பில் டெய்லி மிரர், அமைச்சரிடம் கருத்து கேட்டபோது, இதுபோன்ற பாடசாலைகள் தற்போதும் இயங்கிக்கொண்டிருப்பதாக தெரிவித்தார்.

கம்பஹா மாவட்டத்தில் இரண்டு மாணவர்கள் ஓர் ஆசிரியருடன் இயங்கிக் கொண்டிருக்கும் ஒரு பாடசாலை அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். (த)

## அரச அதிபரின் விளக்கம்

வலி - வடக்கில் உயர் பாதுகாப்பு வலயம் இல்லை என யாழ் அரச அதிபர் தெரிவித்தமையை நாடாளுமன்ற உறுப்பினர் அ. விநாயகமூர்த்தி கண்டித்தமை தொடர்பாக யாழ். அரச அதிபர் இமெல்டா சுகுமார் விளக்கம் அளித்துள்ளார்.

அரச அதிபரின் விளக்கத்தில் -

யாழ் மாவட்ட இராணுவக் கட்டளைத் தளபதியின் கருத்தின்படி உயர் பாதுகாப்பு வலயம் என்ற கருத்து பாதுகாப்புத் தரப்பினரின் தேவைகளுக்காக போர்க் காலத்தில் ஒழுங்காகப் பேணப்பட்டு வந்தது. எனினும் தற்போது அவ்வாறான இடங்கள் மட்டுப்படுத்தப்பட்ட பிரதேசம் என்ற கண்ணோட்டத்துடனேயே பேணப்பட்டு வருவதாக அவரால் தெளிவாகக் குறிப்பிடப்பட்டது. எனவே தமது இராணுவ முகாமுக்கு வெளியேயுள்ள பகுதிகள் விரைவாகக் கண்ணிவெடி அகற்றி பாதுகாப்பு உத்தரவாதப்படுத்தப்பட்டால் மீள்குடியமர்வுக்கு சாத்தியமாகும் என அவரால் தெளிவாகத் தெரிவிக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து எனது கருத்தும் இராணுவ அதிகாரியினால் குறிப்பிட்ட மேற்படி விடயங்களே அவரால் குறிப்பிடப்பட்டதாக அனைத்துப் பிரமுகர்களுக்கும், பொது மக்களுக்கும், ஊடகங்களுக்கும் தெரிவிக்கப்பட்டது - என்றுள்ளது.

# யாழ். மாநகர சபை நிர்வாக ஒழுங்கீனத்தால் அபிவிருத்திக்குப் பதில் பின்னடைவு

## எதிரணியினர் ஆளுநருக்குக் கடிதம்

யாழ்ப்பாணம்.டிசெ.1

யாழ்.மாநகர சபையின் நிர்வாக ஒழுங்கீனங்களால் அபிவிருத்திக்குப் பதிலாக, பிரதேசம் பின்னடைந்து சென்று கொண்டிருக்கிறது. ஒழுங்கீனங்களைக் களைந்து நல்லதொரு கட்டமைப்பை உருவாக்க வேண்டும்.

யாழ்.மாநகர சபையின் எதிரணியைச் சேர்ந்த எட்டுஉறுப்பினர்கள் மேற்கண்ட கோரிக்கையை வடக்கு மாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறியிடம் விடுத்துள்ளனர்.

உரிய நடவடிக்கை எடுக்காவிட்டால் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு அளித்து வரும் ஆதரவை விலக்கிவிடுவோம் என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

மாநகர சபையின் எதிரணி உறுப்பினர்களான மு.றெமிடியஸ், திருமதி அ.மேரியம்மா, ந.கனகரத்தினம், ந. இராஜதேவன், பெ.ஜேக்கப், அ.பரஞ்சோதி, திருமதி அ. மரியகொரற்றி, அ.கொர்ணேலியஸ் ஆகியோர் இணைந்து கையொப்பம் இட்டு ஆளுநருக்கு அனுப்பியுள்ள மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

யாழ். மாநகர சபை தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களைக் கொண்டு இயங்கி இதுவரை ஒரு வருடத்திற்கு மேல் கடந்த நிலையில், அதன் செயற்பாடுகள் நிர்வாக ஒழுங்கீனங்களால் அபிவிருத்திக்கு பதிலாக பின்னடைந்து சென்று கொண்டிருக்கின்றது.

அதற்கு எதிரணியாகிய நாம் தொடர்ந்தும் ஒத்துழைப்பு கொடுக்க முடியாதவர்களாய் இருக்கின்றோம். ஆகவே அவ் ஒழுங்கீனங்களை களைந்து நல்லதொரு நிர்வாக கட்டமைப்புக்குள் கொண்டுவரும் நோக்க மாக தாங்கள் நடவடிக்கை எடுக்கும் பொருட்டு பின்வரும் விடயங்களைத் தங்களின் கவனத்திற்கு கொண்டு வருகின்றோம்.

### வேலைவாய்ப்பு

சபை இயங்கத் தொடங்கி யதில் இருந்து பெருந்தொகையான வேலை வாய்ப்புக்கள் வழங்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. இதில் பலமுறை கேடுகள் இடம்பெற்றுள்ளன. அவை சம்பந்தமாக எம்மால் 16.08.2010 திகதிய கடிதம் மூலம் கேள்விகள் கேட்கப்பட்டிருந்தன. அதன் பின்னர் மூன்று பொதுக்கூட்டங்கள் நடத்தப்பட்டும் அவர்கள் அளித்த பதில் திருப்தி அளிப்பதாக இல்லை. வேலைக்கு ஆள்களை சேர்க்கும் போது உறுப்பினர்கள் தகுதியற்ற தமது குடும்ப உறுப்பினர் மற்றும் மாநகர சபைக்கு வெளியிலிருந்தும் தகுதியற்றோர் பலரையும் பெருமளவில் சேர்த்துள்ளனர். இதைவிடபட்டியலிடப்படாத வேலைகளுக்காக முதல்வரினால் விண்ணப்பங்கள் கோரப்பட்டு பல்லாயிரம் பேர் விண்ணப்பித்திருந்தனர்.

இவர்களில் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டோரில் தகுதியுள்ள பலரை விடுத்து தகுதியற்ற பலர் நியமிக்கப்பட்டிருந்தனர். ஆனால் சபைக் கூட்டத்தில் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு முற்றிலும் திறமை அடிப்படையிலே ஆள்கள் சேர்க்கப்படுவரென உறுதியளிக்கப்பட்டும் எந்தவித தகுதியும் பாராமலேயே வேலைகளை தங்களுக்குப் பிடித்தவர்களுக்கும் தங்கள் குடும்ப உறுப்பினர்களுக்கும் மட்டும் வழங்கியுள்ளனர்.

அங்கீகரிக்கப்பட்ட ஆளணிக்கு மேலதிகமாக ஆள்சேர்ப்பு நடைபெற்றுள்ளதாகவும் அறிகின்றோம். இதனால் மாநகர சபையின் செயற்திறன் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளது. அத்தோடு சபையின் நிதி, அபிவிருத்திக்கு பயன்படாது விரயமாகிறது. தகுதியற்றோரினால் சபையின் வேலைகளையும் திறம்பட முடிக்க முடியாமல் உள்ளது. உதாரணமாக சாரதியாக வேலை வழங்கப்பட்டஒருவர்அன்றையதினமே வாகனத்தை சேதத்திற்குட்படுத்தினார்.

### கடை வாடகை அல்லது காணி குத்தகை

சபைக்கு சொந்தமாக கடைகள் பலவும் காணித்துண்டுகளும் மாநகர சபையின் கட்டளைச் சட்டங்களின் விதிகளை மதியாது தமக்கு வேண்டிய வர்களுக்கு கேள்விப் பத்திரம் கோராமலேயே கொடுக்கப்பட்டுள்ளன. இதனால் சபைக்கு சேரவேண்டிய பல மில்லியன் பணம் மோசடி பண்ணப்பட்டுள்ளதாக எண்ணுகின்றோம். இது சம்பந்தமாகவும் முதல்வரிடம் கேட்கப்பட்ட கேள்விகளுக்கும் சரியாக பதில் அளிக்காமல் தட்டிக்கழிக்கப்பட்டுள்ளது. இது சம்பந்தமாகவும் தங்களது நடவடிக்கை கோரப்படுகின்றது.

### அங்கீகாரம் பெற்ற கட்டடங்களை உடைத்தல்

சபையினது முன் அனுமதி பெற்று விதிகளின்படி கட்டப்பட்ட பலரது மதில் சுவர்கள் முன் அறிவித்தல் எதுவுமின்றி இடித்தகற்றப்பட்டுள்ளது. இதனால் எல்லைப் பரப்பில் வதியும் பல கௌரவமுள்ள பிரசைகள் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்கள் இது சம்பந்தமாக வழக்குத் தொடர்ந்துள்ளனர். தேவையற்ற இப் பிரச்சினைக்கான வழக்குச் செலவுகள் சபை நிதியிலிருந்தே மேற்கொள்ளப்படுகின்றன.

### வீதிகளில் பெயர் பொறித்தல்

சபை நிதியிலிருந்து மேற்கொள்ளப்படும் வீதித் திருத்த வேலைகள் முடிந்த பின்னர் அவ் வீதிகளை அமைத்தது சம்பந்தமாக அமைச்சர் ஒருவரது பெயருடன், முதல்வர், உதவிமுதல்வர் என்போரது பெயர்களும், விளம்பர பலகைகள் மூலம் விளம்பரப் படுத்தப்படுகின்றன. வரியிறுப்பாளரின் வருமானத்தில் இருந்து செய்யப்படும் இந்தத் திருத்த வேலைக்கு இப்படி பெயரிடுவது விதிகளை மீறிய சின்னத்தனமான செயலாக கருதுகின்றோம்.

### உறுப்பினர் வீடுகளில் சபைப் பணியாளர்கள்

மாநகர சபைத்தொழிலாளர், வேலை நேரங்களில் சபையின் உறுப்பினர்களின் வீடுகளில் வேலை செய்கிறார்கள். இதற்கான சம்பளமும் மாநகர சபை நிதியிலிருந்தே வழங்கப் படுகின்றன.

இதனால் மாநகரசபையின் செயற்திறன் பாதிக்கப்படுகிறது. இச் செயற்பாடு தடுத்து நிறுத்தப்படவேண்டும்.

### கோரிக்கைகள் நிராகரிக்கப்படல்

எதிரணிகளாகிய நாம் சபையின் அபிவிருத்தி கருதி சில அபிவிருத்தி வேலைகளைச் செய்யுமாறு எமது கோரிக்கைகளை சபையில் சமர்ப்பித்துள் ளோம். ஆனால் அவை முக்கிய மாக செய்யப்படவேண்டியி ருந்தும் பலரது கோரிக்கைகள் கவனத்தில் எடுக்கப்படாது புறக்கணிக்கப்படுகிறது. இதற்கான நிதி ஒதுக்கீட்டு ஏற்பாடு சபையின் மூன்றாவது கூட்டத்திலேயே ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது. இதன்படி சபையின் நிதியிலிருந்து ஐந்து லட்சம் ரூபா நிதி, உறுப்பினர்களின் சிபாரிசுக்கு செலவிட முடியும். ஆனால் இந்த தீர்மானம் இதுவரை முழுமையாக செயற்படுத்தப்படவில்லை.

### முற்பணமாக வழங்கப்பட்ட நிதி திரும்பப் பெறப்படாமை

சரித்திரப் பிரசித்தி பெற்ற நல்லூர் ஆலயத்திற்கு கம்பி வேலி போடுவதற்காக சபையின் நிதியில் இருந்து பெருந்தொகைப் பணம் முற்பணமாக வழங்கப்பட்டது. இதை முதல்வர் வெளிநாடுகளிலிருந்து பெற்று சபைக்கு மீளச் செலுத்துவதாக கூறியே சபையின் அனுமதியைப் பெற்றார். ஆனால் இதுவரை அந்நிதி மீளச்செலுத் தப்படவில்லை. ஆகவே இந் நிதிக்கு என்ன நடந்ததென்றே தெரியவில்லை.

### வரி அறவிட நடவடிக்கை எடுக்கப்படாமை

நீண்டகாலமாக சுமார் 50 வீதமான வியாபார மற்றும் சோலைவரிகள் அறவிடப்படாமல் நிலுவையாயுள்ளன. அது சம்பந்தமாக சட்ட நடவடிக்கை எதுவும் இதுவரை எடுக்கப்படவில்லை. இதனாலும் நிதிநிலை மிகவும் மோசமாகவுள்ளது.

ஆகவே தாங்கள் இது விடயமாக மிக விரைவில் நடவடிக்கை எடுப்பீர்களென பணிவுடன் எதிர்பார்க்கின்றோம். இக்குறைபாடுகள் நிவர்த்தி செய்யப்படாதவிடத்து மேற் கொண்டு விதிகளுக்குட்பட்டு பொருத்தமான தொடர் நடவடிக்கைகளில் ஈடுபட முடிவு செய்துள்ளோம் எனத் தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்கின்றோம் - என்றுள்ளது. (ஜ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "பென்ஷனியர்' இல்லம் ஒன்றை அமைத்து சிரேஷ்ட அமைச்சர்களை இருத்தி விடலாம்

## ரணிலின் ஆலோசனை இது

சிரேஷ்ட அமைச்சர்கள் விவகாரம் சபையில் பெரும் சர்ச்சையை ஏற்படுத்திவிட்டது: இந்தப் பத்து அமைச்சர்களுக்கும் "பென்ஷனியர் இல்லம்" (விஸ்ராமபாய) ஒன்றை அமைத்து அவர்களை அங்கு அமர்த்தி விடலாம் என எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க அரசுக்கு ஆலாசனை தெரிவித்தார்.

நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடுகள் தொடர்பான குழுநிலை விவாதத்தின்போது சிரேஷ்ட அமைச்சர்களின் விவகாரம் பெரும் சர்ச்சையைக் கிளப்பிவிட்டது.

நாடாளுமன்றம் வழமை போல் நேற்று முன்தினம் காலை 9.30 மணிக்கு சபாநாயகர் சமல் ராஜபக்ஷ தலைமையில் கூடியது. வாய்மூல விடைக்கான கேள்விகளுக்குப் பதில் அளிக்கப்பட்டபின் 10.05 மணிக்கு நிதி ஒதுக்கீடுகள் தொடர்பான விவாதம் ஆரம்பிக்கப்படும் என சபாநாயகர் சபையில் அறிவித்தார்.

நிதி ஒதுக்கீடுகள் தொடர்பான குழுநிலை விவாதம் எதிர்க்கட்சிகளுக்குரியது. ஆளும் தரப்பினரைவிட எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கே கூடுதலான நேரமும் வாய்ப்பும் வழங்கப்படுவது வழமை.

நேற்று முன்தினம் எதிர்க்கட்சிகளின் சார்பில் பிரதம கொறடா ஜோன் அமரதுங்க பேசுவதற்கு எழுந்தார். அப்போது அருகில் இருந்த எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தான் சிலவிடயங்கள் தொடர்பாகத் தெளிவுபடுத்திக்கொள்ள வேண்டும் என்று கூறிப் பேச ஆரம்பித்தார்.

நிதி ஒதுக்கீடுகள் தொடர்பாக இன்று (செவ்வாய்) விவாதிக்கப் போகின்றோம். நிகழ்ச்சி நிரலில் சிரேஷ்ட அமைச்சர் களுக்கான நிதி ஒதுக்கப்படவில்லை. அவர்களுக்கு 'என்ன பொறுப்புகள் என்றும் தெரியவில்லை.

அரசமைப்பின் நிதிப் பிரமாணம் 7ஆம் 8ஆம் பிரிவுகளின் படி ஒவ்வொரு அமைச்சர்களுக்கும், அவரது செயலாளர் மற்றும் அவர்களின் கீழ் வரும் திணைக்களங்கள் என்பவற்றுக்கு ஒதுக்கப்பட்ட நிதி என்பன தெளிவாகக் குறிப்பிடப்பட வேண்டும் என்றார். நாட்டிற்கு சேவையாற்றிய பத்து சிரேஷ்ட உறுப்பினர்கள் இன்று எவ்விதமான பொறுப்புகளும் இல்லாமல் வெற்று அமைச்சர்களாக நியமிக்கப்பட்டு அவமானப் படுத்தப்பட்டுள்ளனர் என்றும் சுட்டிக்காட்டினார் ரணில்.

### "பென்ஷனியர் இல்லம்"

ஐயா இந்த அமைச்சர்கள் எல்லோரும் வயதாளிகள். வயதில் சிரேஷ்ட நபர்கள். அதனை சிரேஷ்ட அமைச்சர்கள் என்று நாமம் சூட்டிவிட்டனர்.

இவர்களுக்கு ஒரு அமைச்சு அலுவலகம் இல்லை. நாற்காலிகள் இல்லை. செயலாளரும் இல்லை. பணியாட்களும் இல்லை. நிதியும் இல்லை. எனவே விசும்பாய, செத்சிரியாய, செஞ்சிரியாய என்பது போல் "விஸ்ராம்பாய" அதாவது பென்ஷனியர் இல்லம் ஒன்றை அமைத்து இவர்களை அங்கே விட்டுவிடலாம் என்றார் ரணில் விக்கிரமசிங்க.

### பொபயின்ற் ஓ'ஓ ர் அஸ்வர்

ரணில் பேசிக்கொண்டிருக்கும்போது ஆளும் கட்சி உறுப்பினரான ஏ.எச்.எம். அஸ்வர் அடிக்கடி ஒழுங்குப் பிரச்சினைகளை எழுப்பிக்கொண்டே இருந்தார். அவருடன் அமைச்சர் மேர்வின் சில்வா சபைக்குள் அங்கும் இங்கும் சென்று ஒவ்வொரு ஆசனங்களிலும் இருந்து இடையூறு செய்ததுடன், அடிக்கடி விமர்சனங்களையும் செய்தார்.

இதனைக் கண்டித்த சபாநாயகர் தயவுசெய்து அமைச்சர் உங்களுக்கு ஒதுக்கப்பட்ட ஆசனத்தில் அமர்ந்து பேசுங்கள். ஆளும் கட்சி உறுப்பினர்கள், எதிர்க்கட்சித் தலைவரைப் பேசவிடுங்கள் எனக் கண்டிப்பாக உத்தரவிட்டார்.

### சபை முதல்வர் விளக்கம்

ஐயா கௌரவ ரணில் விக்கிரமசிங்கவுக்கும் அவரது கட்சிக்கும் பேசுவதற்கு ஒன்றும் இல்லை. அதனால் அவசியம் இல்லாத விடயங்களைக் கிண்டிவிட்டு அமைதியாக வெளியேறி விடுவார். சிரேஷ்ட அமைச்சர்கள் உட்பட அனைத்து அமைச்சுகள் திணைக்களங்கள் தொடர்பான பொறுப்புகள் அரச வர்த்தமானியில் ஒதுக்கப்பட்டுள்ளது என்றும் விளக்கமளித்தார் சபை முதல்வரும் அமைச்சருமான நிமல் சிறிபாலடிசில்வர.

இவை எல்லாவற்றையுமே அமைதியாகக் கேட்டுக்கொண்டிருந்த பிரதமர் டி.எம்.ஜயரத்ன சிரேஷ்ட அமைச்சர்கள் தொடர்பாக விளக்கம் அளித்தார்.

நல்லாட்சி, உட்கட்டமைப்பு அபிவிருத்தியுடன் நீர்ப்பாசனம், மின்சாரம், விவசாயம் தொடர்பான அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பாக ஆலோசனை வழங்கவும், பரிந்துரைகளைச் செய்யவும். கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளும் பொறுப்பு இந்த சிரேஷ்ட அமைச்சர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இவர்களுக்குத் தனியான அமைச்சு செயலாளர்கள் இல்லாவிட்டாலும் சம்பந்தப்பட்ட அமைச்சுக்களின் செயலாளர்கள் இவர்களுக்காகவும் கடமையாற்றுவார்கள் என்று விளக்கம் அளித்தார் பிரதமர் ஜயரத்ன.

### பிரதமரின் ஆமோதிப்பு

சபையில் உரையாற்றிய பிரதமர் தி.மு.ஜயரத்ன ஒரு உண்மையையும் ஒப்புக்கொண்டார். அதாவது உணவுப் பொருள்கள் மற்றும் அத்தியாவசியப் பொருள்கள் விலைகளில் பெரும் உயர்வு ஏற்பட்டுள்ளது எனக்கு வேதனையாகவும் கவலையாகவும் இருக்கின்றது.

ஆனால் இவை தற்காலிகமானவை. பின்னால் ஏற்படும் இன்பங்களுக்காகச் சிறிது துன்பங்களைச் சகித்துக்கொள்ள வேண்டும் அல்லவா. பொறுத்துக்கொள்வோம் என தனக்கே உரிய நகைச்சுவைப் பாணியில் குறிப்பிட்டார் பிரதமர்.

நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் ஜனாதிபதி, பிரதமர், உயர்நீதிமன்றம் உட்பட அனைத்து நீதிபதிகள், நாடாளுமன்றம், எதிர்க்கட்சித் தலைவர், அலுவலகம், நீதிச்சேவை, பொதுச்சேவை, தேசிய பொலிஸ், நிர்வாக ஒழுங்குகள் தொடர்பான ஆணைக்குழுக்கள் மற்றும் ஜனாதிபதியின் கீழ்வரும் திணைக்களங்கள், துறைமுகம், நெடுஞ்சாலைகள், விமான சேவைகள், பௌத்த சாசனம், தேசிய மரபுரிமைகள், கலை கலாச்சார அலுவல்கள் அமைச்சு, என்பனவற்றிற்கு வழங்கப்பட்டுள்ள ஒதுக்கீடுகள் இந்நிலையில் அங்கீகரிக்கப்பட்டன.

### திங்கள் அமர்வு

அமைச்சரவை மாற்றத்தால் வாய்ப்புகளை இழந்த முன்னாள் அமைச்சர்களுக்கும் தொழில் அமைச்சர் வாய்ப்புகளைப் பெற்றுக்கொடுப்பாரா - என்று ஜே.வி.பி. உறுப்பினரான அனுர குமார திஸாநாயக்க கேள்வி எழுப்பினார்.

நாடாளுமன்றத்தில் வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தில் ஐ.தே.க. உறுப்பினரான சஜித் பிரேமதாஸ, தொழில் உறவுகள் அமைச்சரிடம் நாட்டில் காணப்படும் தொழில் இல்லாதோர் விகிதாசாரம் மற்றும் அவற்றை நிவர்த்தி செய்வதற்கு அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன? அதற்குச் செலவிடப்பட்ட தொகை எவ்வளவு என்று கேள்வி எழுப்பியிருந்தார்.

## சபையில் கேட்டவை

இக்கேள்விக்கு அமைச்சர் காமினி லொக்குகே பதில் அளிக்கும்போது வட மாகாணம் நீங்கலாக ஏனைய பிரதேசங்களில் தொழில் இல்லாதோர் விகிதாசாரம் 5 சதவீதமாக வீழ்ச்சியடைந்துள்ளது. இதற்கு அரசு 682 மில்லியன் ரூபாவை முதலீடு செய்துள்ளது என்று பதில் அளித்தார்.

### சஜித் கேள்வி

ஐயா, நீங்கள் வேலை இல்லாப்பிரச்சினை தீர்க்கப்பட்டுள்ளது, வீழ்ச்சி அடைந்துள்ளது என்று கூறுகின்றீர்கள். ஆனால் முப்பதாயிரத்திற்கும் அதிகமாக பட்டதாரிகள் தொழிலின்றி வீதியில் ஆர்ப்பாட்டம் செய்கின்றனர். அவர்களை நீங்கள் சிறையில் அடைக்கின்றீர்கள். இந்த நிலையில் எப்படி தொழில்வாய்ப்பின்மை வீழ்ச்சியடைந்துள்ளது என்று கூறமுடியும் என சஜித் பிரேமதாஸ இடைக் கேள்வி ஒன்றை எழுப்பினார்.

ஒரே இரவில் எல்லாப் பிரச்சினைகளுக்கும் தீர்வு கண்டுவிட முடியாது. 15 ஆயிரம் பேருக்கு மேல் பட்டதாரி ஆசிரியர் நியமனம் வழங்கப்பட்டுள்ளது. அடுத்த ஆண்டில் மேலும் பலருக்கு நியமனங்கள் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

படிப்படியாக தொழில் வாய்ப்புகள் இன்றி இருக்கும் எல்லோருக்கும் தொழில் வாய்ப்புகள் ஏற்படுத்திக் கொடுக்கப்படும் என்றார் தொழில் அமைச்சர் காமினி லொக்குகே.

### சபையில் சிரிப்பொலி

இந்தச் சந்தர்ப்பத்தில் ஜே.வி.பி. உறுப்பினரான அனுர குமார திஸாநாயக்க -

அமைச்சர் அவர்களே, இப்பொழுது உங்கள் அமைச்சரவையில் மாற்றம் ஏற்பட்டதால் பல மூத்த அமைச்சர்கள் தமது வாய்ப்புகளை இழந்துள்ளனர். உங்களுடைய தொழில் அமைச்சின் மூலமாவது இவர்களுக்கு வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுப்பீர்களா என்று கேட்டார்.

அப்பொழுது சபையின் இரு பக்கத்திலும் இருந்து சிரிப்பொலிகள் எழுந்ததை அவதானிக்க முடிந்தது.

வரவு - செலவுத்திட்ட உரை மீதான ஆறாவது நாள் விவாதம் கடந்த திங்கட் கிழமை சபாநாயகர் சமல் ராஜபக்ஷ தலைமையில் ஆரம்பமானது.

### எம்.பிக்கள் கப்சிப்

அன்று பாகிஸ்தான் ஜனாதிபதி சர்தாரி நாடாளுமன்றத்திற்கு வந்து சபாநாயகரைச் சந்தித்தார் அல்லவா? இதனால் நமது உறுப்பினர்களும் நல்ல பிள்ளைகளாகிவிட்டனர் போலும்.

ஆறாவது நாள் விவாதம் ஆரம்பிக்கும் முன் ஜே.வி.பி. உறுப்பினரான அனுரகுமார திஸநாயக்க ஒரு சர்ச்சையைக் கிளப்பிவிட்டார்.

சபாநாயகர் அவர்களே, நாளை முதல் (செவ்வாய்) அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடுகள் தொடர்பான குழு நிலை விவாதம் ஆரம்பமாகவுள்ளது. இப்பொழுது அமைச்சுகளில் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. எந்த அமைச்சுக்கு என்ன பொறுப்பு. அவற்றின் கீழ் எத்தனை திணைக்களங்கள் இருக்கின்றன என்பது இதுவரை நாடாளுமன்ற உறுப்பினர்களான எங்களுக்கே தெரியவில்லை. இந்த நிலையில், நாங்கள் எப்படி விவாதத்தில் கலந்துகொள்வது என்று கேட்டார்.

அனுரகுமார திஸநாயக்கவின் இந்தக் கேள்வியால் அமைச்சர்கள் உட்பட எல்லோரும் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டனர். சபையில் அமைதி நிலவியது. எனினும் ஆளும் கட்சிக் கொடாவான அமைச்சர் தினேஷ் குணவர்த்தன நிலைமையைச் சமாளித்தார்.

அதாவது, அமைச்சரவை மாற்றம் அடைந்துள்ள போதிலும் அமைச்சுகளுக்கு ஒதுக்கப்பட்ட நிதியில் மாற்றம் இல்லை. இதனைச் சகல உறுப்பினர்களுக்கும் அறிவித்துள்ளோம். வரவு-செலவுத் திட்டத்தில் மாற்றம் ஏற்படாது என்றாலும் சில திருத்தங்கள் செய்யப்படும் எனக் கூறினார் அமைச்சர் தினேஷ் குணவர்த்தன.

### சபாநாயகர் தீர்ப்பு

சபாநாயகர் கடந்த திங்கட்கிழமை நாடாளுமன்றத்தில் அளித்த தீர்ப்பு வரலாற்றுச் சிறப்பு மிக்கதாக அமைந்துள்ளது.

அதாவது இந்தச் சபையில் உரையாற்றும் உறுப்பினர்கள் தமது கூற்றுக்கு ஆதரவாக எந்த ஒரு ஆவணத்தையும் சுட்டிக் காட்டவோ ஆவணப்படுத்தவோ முடியும். அவர்கள் முன்வைக்கும் தரவுகளுக்கும், ஆவணங்களுக்கும் சம்பந்தப்பட்ட உறுப்பினர்களே பொறுப்பேற்கின்றனர். இதனைப் பதிவேட்டில் இருந்து நீக்கவேண்டிய அவசியம் இல்லை. அதேபோன்று இக்கூற்றுக்கு மறுப்புத் தெரிவிக்கும் உரிமையும் உண்டு. அதையும் பிரசுரிக்க முடியும்.

எனவே, ஐ.தே.கவின் எம்.பி. சுஜீவ சேனசிங்கவின் உரையை நாடாளுமன்றப் பதிவேட்டில் இருந்து நீக்க வேண்டிய அவசியம் இல்லை என்று சபாநாயர் ஆணித்தரமாகக் கூறினார்.

இது நாடாளுமன்ற உறுப்பினர்களின் சிறப்புரிமைகளைப் பாதுகாக்கும் நல்ல ஒரு தீர்ப்பாகும்.

சபாநாயகர் இவ்விடயத்தில் ஆளும்கட்சி உறுப்பினர்களுக்கு மற்றும் ஒரு பாடத்தையும் புகட்டிவிட்டார்.

அதாவது எதிர்க்கட்சி உறுப்பினரான சுஜீவ சேனசிங்க சபையில் தன்னிலை விளக்கம் அளிக்க முடியாது. அதற்கு சபாநாயகர் அனுமதி வழங்கக்கூடாது 'என ஆளும் கட்சி உறுப்பினர்கள் வலியுறுத்தினர்.

ஆளும்கட்சி உறுப்பினர்களின் இக்கோரிக்கையை சபாநாயகர் நிராகரித்ததோடு எதிர்க்கட்சி உறுப்பினர்களின் சிறப்புரிமையையும் பாதுகாத்தார் என்பது சுட்டிக் காட்டப்படவேண்டிய ஒன்று.

கேள்வி நேரத்தின்போது அதிஉயர் பாதுகாப்பு வயலம் தொடர்பாகவும் கருத்து மோதல்கள் இடம்பெற்றன.

### உயர் பாதுகாப்பு வலயம்

மீள்குடியேற்றப் பிரதியமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன், அதி உயர் பாதுகாப்பு வலயத்திலும் மக்கள் படிப்படியாக குடியேற்றப்பட்டு வருகின்றனர். இதற்கான அனுமதியை பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் தமக்கு வழங்கியுள்ளார் என்று சபையில் குறிப்பிட்டார்.

காலையில் இருந்து சபையில் அமைதி காணப்பட்ட போதும் அஸ்வர் எம்.பி. குட்டையைக் குழப்பிவிட்டார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் செயலாளர் மாவை சேனாதிராஜா உரையாற்றும் போது, தமிழ் மக்களின் பாரம்பரிய காணிகள் அபகரிக்கப்படுவதையும், இன அடையாளங்கள் அழிக்கப்பட்டு அவர்கள் அனைத்தையும் இழந்த நிலை

இரா.புத்திரசிகாமணி

யில் இருப்பதையும் சுட்டிக்காட்டினார்.

அப்போது அஸ்வர் எம்.பி. வடக்கில் அன்று முஸ்லிம் மக்கள் விரட்டியடிக்கப்பட்டபோது நீங்கள் அவர்களைப் பற்றி எதுவும் பேசவில்லையே என்றார்.

### அஸ்வருக்கு சூடு

உறுப்பினர் அஸ்வருக்கு சரித்திரம் தெரியாவிட்டால் வாயை மூடிக்கொண்டு இருங்கள் என்றார் மாவை.

அதேவேளை முஸ்லிம் மக்கள் வெளியேற்றப்பட்டதற்கு நாம் கவலை தெரிவித்தோம், கண்டனம் தெரிவித்தோம். அவர்கள் மீண்டும் வந்து எம்முடன் இன்று வாழ வேண்டும் என வ்ரவேற்கின்றோம். நேசக்கரம் நீட்டி நிற்கின்றோம்.

ஆனால், 1957, 58, 79, 81, 83களில் தென்பகுதியில் தமிழ் மக்கள் கொல்லப்பட்டபோதும் கப்பல் கப்பலாக ஏற்றி வடக்கே அனுப்பப்பட்டபோதும் கொழும்பில் இருந்த நீங்கள் ஒரு வார்த்தையாவது பேசினீர்களா என்று போதும் போதும் என்ற அளவுக்கு அஸ்வருக்கு அடி கொடுத்தார் சேனாதிராஜா. அஸ்வர் அதோடு வாயடைத்துப்போனார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சண்டிலிப்பாய் ஆவலை வீதியின் அவலநிலையால் மக்கள் சிரமம்


யாழ்ப்பாணம், டிசெ. 2

சண்டிலிப்பாய் வடக்கு அவலை வீதி சேறும், சகதியுமாக இருப்பதால் அதனால் பயணம் செய்யும் பொதுமக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இந்த வீதியைச் செப்பனிட்டுத் தருமாறு பலதடவை, பல்வேறு தரப்பினரிடமும் முறைப்பாடு செய்தபோதும் இதுவரை எவ்வித பலனும் கிடைக்கவில்லை என்று அப்பகுதி மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

சண்டிலிப்பாய் வடக்கு இரட்டையர்புல வைரவர் ஆலய வீதியின் வடக்குப் பகுதியில் உள்ள ஆவலை வீதியானது கீரிமலை - பெரியவிளான் ஆகிய பகுதிகளுக்குச் சென்றடைகின்றது.

இந்த வீதியைப் பொது மக்கள் பாடசாலை மாணவர்கள், அரச உத்தியோகத்தர்கள் மற்றும் விவசாயிகள் பயன்படுத்தி வருகின்றனர்.



இந்த நிலையில் வீதியின் நிலையோ அதோ கதிதான். மழை காலம் தொடங்கி விட்டால் சேறும், சகதியுமாக - குன்றும் - குழியுமாக போக்குவரத்துச் செய்ய முடியாது காணப்படுகின்றது.

உலகவங்கியின்நிதியுதவியுடன் மேற்கொள்ளவுள்ள கிராம எழுச்சித் திட்டத்தின் கீழ் இந்த வீதியைச் செப்பனிடுவதற்கு, சண்டிலிப்பாய் வடக்கு தமிழ்க் கலவன் பாடசாலைகளில் நான்கு கொத்தணிகளுக்கென நடைபெற்ற கூட்டத்தில் பொது மக்களால் ஏக மனதாகத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இவ்வாறு முன்மொழிவுகளை ஏற்றுக் கொண்ட அரச அதிகாரிகள் இந்த வீதியை முன்னுரிமை அடிப்படையில் செப்பனிட்டுத் தருவதாக பேச்சளவில் உறுதிமொழி வழங்கியிருந்தும் இதுவரை எந்தவிதமான நடவடிக்கையினையும் மேற்கொள்ளவில்லை என்றும் அப்பகுதி மக்கள் விசனமும், கவலையும் தெரிவித்துள்ளனர்.

(ம-9)

## கருத்தரங்குகள்

யாழ்ப்பாணம், டிசெ. 2

வடமாகாண அரச சேவை பட்டதாரி அலுவலர் சங்கத்தின் ஏற்பாட்டில் வடமாகாண பட்டதாரி சேவையாளர்களுக்கான வினைத்திறன்காண் பரீட்சைக்கான முன்னோடிக் கருத்தரங்கு 4 ஆம் 5 ஆம் திகதிகளில் யாழ்.வேம்படி மகளிர் கல்லூரியில் இடம்பெறவுள்ளது.

யாழ்.இந்துக் கல்லூரியில் நடைபெறவிருந்த மேற்படி கருத்தரங்கு தற்போது யாழ்.வேம்படி மகளிர் கல்லூரிக்கு மாற்றப்பட்டுள்ளது என பட்டதாரி அலுவலர் சங்கத்தின் செயலாளர் கே.எஸ்.மயூரன் அறிவித்துள்ளார். (ற)

* * *


யாழ்.கல்வி வலயத்தில் ஜீ.சீ.ஈ. சாதாரண பரீட்சைக்குத் தோற்றவுள்ள இடம்பெயர்ந்த மாணவர்களுக்கான கணிதம், தமிழ் பாடங்களுக்கான பயிற்சிக் கருத்தரங்கு நாளை வெள்ளிக்கிழமை காலை 9 மணி தொடக்கம் கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

உரிய மாணவர்களைத் தவறாது கலந்து கொள்ளுமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் அறிவித்துள்ளார். (201)

# ஊர்காவற்றுறை மக்களையும் கவனிப்பார்களா...?

தீவுப் பகுதிகளின் போக்குவரத்துக் கேந்திர நிலையமாக விளங்கிய ஊர்காவற்றுறை இன்று புனரமைப்பு இன்றி காணப்படுவதாகவும் இதனால் அங்கு வசிக்கும் மக்கள் பல்வேறு மட்டங்களிலும் பிரச்சினைகளை எதிர்கொள்வதாகவும் சுட்டிக்காட்டப்படுகிறது.

தமது பிரதேச அபிவிருத்தியிலும் கவனமெடுக்க வேண்டும் என்று கோரும் மக்களின் மனவெளிப்பாடுகள் இங்கு பிரசுரமாகின்றன.



பொலிஸ் நிலையம், நீதிமன்றம் இருந்த பகுதி பற்றைக் காடாகக் காட்சியளிக்கிறது...



*கி.வீனஸ்*
*ஓய்வுபெற்ற ஆசிரியர்*
*பருத்தியடைப்பு*

ஊர்காவற்றுறை நகரப்பகுதிக்குப்பெருமை தரும் வகையில் தீவுப் பகுதி யின் போக்குவரத்துக்கு பிரதானதளமாக 1985 இற்கு முன்னர் துறைமுகப் பகுதி விளங்கியது. போர் அனர்த்தங்கள் காரணமாக ஏற்பட்ட பாதிப்புக்களால் பொலிவை இழந்து காணப்படும் இந்தத் துறைமுகப் பகுதி முன்னர் போல் இயல்பு நிலைக்கு வரும் பட்சத்தில் ஊர்காவற்றுறைக்கு முன்புபோல் மீண்டும் தீவுப் பகுதியின் முக்கிய நகரமாக விளங்கும் என ஓய்வுபெற்ற ஆசிரியர் கிறிஸ்த்தோஸ்திரம் வீனஸ் தெரிவித்தார்.

மேலும் இடம்பெறுவதற்கு முன்னர் தீவுப் பகுதியின் போக்குவரத்துக்கான கேந்திர நிலையமாக ஊர்காவற்றுறையில் இருந்து வந்தது. இங்கிருந்துதான் நெடுந்தீவு, நயினாதீவு, அனலைதீவு, எழுவைதீவுக்கான போக்குவரத்துக்கள் இடம்பெற்று வந்தன.

காரைநகரில் இருந்து கல்விக்காக மாணவர்கள் சென்.அன்ரனிஸ் பாடசாலைக்கு வருவது முதல் காய்கறி வாங்க குடும்பப் பெண்கள் ஊர்காவற்றுறைச் சந்தைக்கு வருவது வரை இந்தத் துறைமுகம் வழியாகவே பேக்குவரத்து இடம் பெற்றது.

தற்போது இந்தத் துறைமுகம் மக்களது பயன்பாட்டுக்குஉரியதாக முழு நேரமும் மாற்றப்படவேண்டும் என்பதே பெரும்பாலான மக்களின் எதிர்பார்ப்பாக உள்ளது.

ஊர்காவற்றுறை, நாரந்தனை, சரவணை, கரம்பொன், சுருவில் எனப் பல்வேறு கிராமங்களை உள்ளடக்கிய ஒரு பிரதேசம். இங்கு மக்கள் தற்போது மீள்குடியமர்ந்துள்ளனர். கிராம அலுவலர் பிரிவுகள் கொண்ட உதவி அரச அதிபர் பிரிவு இது. மீள்குடியமர்ந்த மக்கள் பல்வேறு தேவைகளை எதிர்நோக்கியுள்ளனர்.

இப்போது மீண்டும் இயல்பு நிலைக்குத் திரும்பிக் கொண்டிருக்கும் இந்தப் பிரதேசத்தின் பிரதான தொழில் விவசாயம், அடுத்து மீன்பிடி, பனை தென்னை வளங்களாகும். எதிர்காலத்தில் இந்தப் பகுதியைச் சேர்ந்த ஏனைய மக்களும் திரும்ப இங்கு குடியேற வேண்டும் என்பதும் தற்போது இங்குள்ளவர்களின் விருப்பாக உள்ளது. இடம்பெயர்ந்து வட்டுக்கோட்டை, யாழ்ப்பாணப் பகுதிகளில் குடியேறியுள்ளவர்கள் மீளவும் திரும்பி வராமைக்கு முதன்மைக் காரணமாக இருப்பது தண்ணீர் பிரச்சினைதான்.



*ஆ.கொங்ஸலின்*
*முன்பள்ளி ஆசிரியை*
*சுருவில், கரம்பொன்*

பொதுவாக இது விவசாயக் கிராமங்களை உள்ளடக்கிய பிரதேசம் இங்கு நெல் உற்பத்தியுடன் பணப்பயிராக புகையிலைச் செய்கையும் தோட்டப் பயிர்ச் செய்கையும் கூடுதலாக உண்டு.

கரம்பொன்னில் முன்புபோல் பெரிய அளவில் மக்கள் இல்லை. அதனால் தற்சமயம் பயிர்ச்செய்கையில் கணிசமான வீழ்ச்சியே தென்படுகிறது.

கடந்த 30 வருடங்களுக்கு முன்னர் தும்புத் தொழிற்சாலை ஒன்று இயங்கியது. இடம்பெயர்ந்து மீள்குடியமர்ந்த பின்னர் 2000 ஆண்டில் மீளவும் இயங்கிய இந்த தொழிற்சாலை போதியளவு லாபம் கிடைக்காததால் கைவிடப்பட்டுள்ளது.

இங்குள்ள மக்களுக்கு தொழில் வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். பனைவளம் உண்டு அது தொடர்பான பயிற்சிகளை வழங்கினால் உதவியாக இருக்கும்.



*கி.வின்சன்ட்*
*கடற்றொழிலாளர்,*
*ஊர்காவற்றுறை.*

நாங்கள் சிறு தொழில் மீனவர்கள். இந்தப் பகுதியில் உள்ள அனைவருமே அப்படித்தான் துறைமுகப் பாலத்தின் கிழக்குப் பகுதியில் மட்டுமே தொழில்செய்ய முடியும். களங்கட்டி உட்பட சிறுதொழில் இப்போது தொழில்கள் குறைவு ஆனால் இரவு, பகல் எந்த நேரமும் தொழில் செய்யக் கூடியதாக இருக்கிறது. தொழில் குறைவு என்பதால் வருமானமும் குறைவுதான்.

சராசரி 300 ரூபா தான் தினமும் கிடைக்கும். ஒரு சிறிய குடும்பத்துக்கே போதாத தொகை இது. கடும் காற்று மழை என்றால் தொழிலுக்குப் போக முடி யாது முன்பெல்லாம் தனியொருவரின் உழைப்பே குடும்பத்துக்கே போதுமானதாக இருந்தது. இப்போது விலைவாசிகள் தினமும் எகிறிக் கொண்டிருக்கிறது. இன்றைக்கு அரச ஊழியர்கள் கூட வேறு ஏதாவது தொழில் செய்தால்தான் உண்டு.

மீன்பிடித் தொழில் வீழ்ச்சியடைந்துள்ளதால் அநேகர் கூலித் தொழிலுக்குத்தான் செல்கிறார்கள். எமது கடற்றொழிலாளர் சங்கமும் அதிகாரிகளும் மீனவர்களின் வாழ்வாதாரத்திற்கு உகந்த திட்டங்களை நடைமுறைப்படுத்தக் கூடியதாக இருப்பின் உதவியாக இருக்கும்.



*த.ரேணுகா*
*முன்பள்ளி ஆசிரியை,*
*ஊர்காவற்றுறை.*

இப்பொழுது எமது பிரதேசத்தின் அபிவிருத்திப் பணிகள் நல்ல முறையில் இடம்பெறுகின்றன. பெண்களைப் பொறுத்தவரை அவர்கள் தமது வீட்டு வேலைகளின் பின் ஓய்வாகவே இருக் கின்றார்கள். முன்னர்தும் புத்தொழிற் சாலையில் பணியாற்றிய பலர் தொழில் இழந்த நிலையில் வருமானமற்றவர் களாக உள்ளனர். மீளவும் இத்தொழிற் சாலை இயங்கும் பட்சத்தில் பலர் அங்கு வேலை செய்யத் தயாராகவே உள்ளனர். அநேகர் படித்துவிட்டு வேலையின் றியுள்ளனர். பனைவளம் இருக்கிறது. அது சார்ந்த பயிற்சிகளை வழங்கினால் பலர் அதனால் பயன் பெறக்கூடிய சாத்தியம் இருக்கிறது. பாடசாலைகளில் போதிய வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளதால் கல்வி வளம் நன்றாகவே இருக் கிறது. ஊர்காவற்றுறை மீண்டும் நல்ல நிலைக்கு வர வேண்டும் எனவும் அபி விருத்திக் கான செயற்பாடுகளில் மக் களும் தங்களது பங்களிப்பை தாராளமாக வழங்க வேண்டும் என்பது முக்கியமாகும்.



*ஜெ.ஜெயசீலன்*
*தலைவர்,*
*பனை தென்னைவள*
*கூ.சங்கம், நாரந்தனை.*

பனை வளம் நிறைய இருக்கின்றது. எனினும் அதைப் பயன்படுத்துவது கிடையாது என பொதுமக்களிடையே கருத்து நிலவுகிறது என பனை தென்னை அபிவிருத்திச் சங்கத் தலைவர் ஜெயசீலனிடம் கேட்டபோது,

பனை தென்னை வளங்கள் இருக்கின்றது எனினும் போர்க்காலச் சூழலில் எங்களால் எதுவும் செய்யமுடியாமல் இருந்தது. அடுத்த ஆண்டில் பனந்தொழில் அபிவிருத்திக்கு முழுமையாக முக்கியத்துவம் கொடுத்து பனங்கட்டி உற்பத்தி செய்யவுள்ளோம். பனை வளங்களைப் பயன்படுத்தி மகளிருக்கான கைத்தொழில் பயிற்சிகளையும் வழங்கவுள்ளோம். அதற்கு அடிப்படையாக இப்போது மகளிர்குழு உருவாக்கப்பட்டுள்ளது. நாரந்தனையைப் பொறுத்தவரை பணப்பயிர்கள் தோட்டச் செய்கைகள் நிறைய உண்டு. போக்குவரத்து, மின்சார வசதிகள் சீர்செய்யப்பட்டுள்ளன. சில இடங்களுக்கு இந்த வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும்.

ஊர்காவற்றுறையில் இப்போது அபிவிருத்தி காணப்பட்டாலும் போக்குவரத்து வசதிகள் பி.ப. 2 மணிக்குப் பின்னர் மிகவும் குறைவாகவே உள்ளது.

இலங்கை போக்குவரத்துச் சபை இந்தப் பகுதிக்கான பஸ் போக்குவரத்தில் சிறிது கவனம் செலுத்துவது நல்லது என இப் பகுதி மக்கள் கூறுகிறார்கள்.

மிளகாய், புகையிலை போன்ற பணப்பயிர்கள் உற்பத்தி இடம்பெறுகின்றது. விவசாயக் கிராமங்களில் உள்ள சில வீதிகள் மோசமாக உள்ளன. இவை புனரமைக்கப்பட வேண்டும். என்பதும் அனைத்து மக்களதும் கருத்தாக உள்ளது. *

லக்ஷ்மன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேவைப்பட்டால் யுரேனியத்தை அணுகுண்டுகளாக மாற்றுவோம்

## வடகொரியா எச்சரிக்கை

சியோல், டிச. 02

நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி யுரேனியத்தை செறிவூட்டும் ஆலையை தான் நிறுவி வருகிறது என்று வட கொரியா தெரிவித்துள்ளது.

யுரேனியத்தை செறிவூட்டும் ஆலையை நிறுவி வருகிறது, என வட கொரியா முதல் தடவையாக சர்வதேச அரங்கில் ஒப்புக்கொண்டுள்ளது.

தேவைப்பட்டால் தனது வசமுள்ள செறிவூட்டப்பட்ட யுரேனியத்தை அணுகுண்டுகளாகத் தயாரிக்கவும் தயக்கங் காட்டப்படமாட்டாது என்றும் அந்நாடு மிரட்டல் விடுத்துள்ளது.

சமீபத்தில் வடகொரியா - தென்கொரியாவுக்கு இடையே நடந்த பீரங்கிச் சண்டையால் அங்கு போர் பதற்றம் உருவாகியது. இதைத்தொடர்ந்து தென் கொரியாவும், அமெரிக்காவும் மஞ்சள் கடலில் கூட்டு கடற்படை போர்ப் பயிற்சியை மேற்கொண்டுள்ளமை பதற்றத்தை அதிகரிக்க வைத்துள்ளது.

இந்நிலையில் தன்னிடம் செறிவூட்டப்பட்ட யுரேனியம் உள்ளது என வடகொரியா பகிரங்கமாகவே அறிவித்துள்ளமை பதற்றத்தை மேலும் அதிகரிக்க வைத்துள்ளது.

வடகொரிய கம்யூனிஸ்ட் அரசின்பத்திரிகையான ரோடோங் சின்முனின் தலையங்கத்தில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த தலையங்கத்தில் மேலும் கூறியிருப்பதாவது:-

வட கொரியா கடுமையான நெருக்கடிக்கு ஆளாகியுள்ளது. மின்சார பற்றாக்குறையால் மக்கள் திண்டாடுகின்றனர். இதற்குத் தீர்வு காணும் நோக்கில் தான் நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி யுரேனியம் செறிவூட்டும் ஆலையை நிறுவி வருகிறோம்.

சுருக்கமாகச் சொல்லப் போனால் ஆக்கபூர்வமான செயலுக்காக யுரேனியத்தை செறிவூட்டுகிறோம். ஒருவேளை காலத்தின் கட்டாயத்தால் இந்த யுரேனியம் அனைத்தையும் அணுகுண்டுகளாக மாற்ற வேண்டிய அவசியம் ஏற்படின் அதற்கும் வட கொரியா தயங்காது.

உலகிலுள்ள அனைத்து நாடுகளுக்குமே யுரேனியத்தை செறிவூட்டும் உரிமை உள்ளது. வளரும் நாடுகள் யுரேனியத்தை செறிவூட்டக்கூடாது, அவர்களுக்கு இந்த உரிமை கிடையாது என்று சில வளர்ந்த நாடுகள் கருதுகின்றன.

இதை வடகொரியா ஏற்காது. இப்படி அந்த தலையங்கத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பாகிஸ்தானில் தற்கொலைத் தாக்குதல் 5 பேர் உயிரிழப்பு; 15 பேர் காயம்

பெஷாவர், டிச. 02

பாகிஸ்தானின் வடமேற்குப் பகுதி நகரான பன்னுவில் பொலிஸ் வாகனத்தை குறிவைத்து தற்கொலைப்படையாளி ஒருவளனர்.

பன்னு காவல்நிலையம் அருகே இந்தத் தாக்குதல் நடை பெற்றுள்ளது. சம்பவ இடத்திலேயே 4 பேர் உயிரிழந்துள்ளனர். ஒருவர் பலத்த காயமடைந்து வைத்தியசாலைக்குக் கொண்டுச் செல்லும் வழியில் உயிரிழந்துள்ளார்.

பொலிஸ்காரர், குழந்தை, 3 பொதுமக்கள் உயிரிழந்துள்ளனர் என அந்த மாகாண டிஐஜி இப்திகார் கான் தெரிவித்துள்ளார்.

இந்தத் தாக்குதலை அடுத்து கைபர்- பக்துங்கா மாகாணம் முழுவதும் அவசரநிலை பிறப்பிக்கப்பட்டுள்ளது. சம்பவம் நடந்த இடத்தை பொலிஸார் கட்டுக்குள் கொண்டுவந்துள்ளனர்.

அப்பகுதியில் தேடுதல் வேட்டையில் ஈடுபட்டுள்ளனர்.இந்தத் தாக்குதலுக்கு எந்த ஒரு தீவிரவாத அமைப்பும் உடனடியாகப் பொறுப்பேற்கவில்லை.

இப்பகுதியில் தலிபான்கள் அடிக்கடி தாக்குதல் நடத்தி வருகின்றனர். இதனால் இத்தாக்குதலுக்கும் தலிபான்கள்தான் காரணம் என்று பொலிஸார் குற்றஞ்சுமத்தியுள்ளனர்.

இந்தச் செயலில் யார் ஈடுபட்டிருந்தாலும் அவர் கடுமையாகக் தண்டிக்கப்படவேண்டியவர் என்று பாகிஸ்தான் பிரதமர் யூசுப் ரஸா கிலானி தெரிவித்துள்ளார்.

புத்தெழுச்சி...



வரவேற்பு: மியான்மாரின் முக்கிய எதிர்க்கட்சித் தலைவி ஆங் சான் சூகி, தலைநகர் யாங்கோன் நகரிலுள்ள போக்போஹ்னி எனும் நகரில் தனது தந்தை பெயரிலுள்ள கிராமத்திற்கு தனது புதல்வர் கிம்ஏரிஸஒடன் வந்தார். அவரை ஆதரவாளர்கள் உற்சாகத்துடன் வரவேற்கின்றனர்.

# ஏமன் குண்டு வெடிப்புக்கு அல் குவைதா பொறுப்பேற்பு

துபாய், டிச. 02

ஏமனில் கடந்த 24ஆம் திகதியன்று நடந்த கார் வெடிகுண்டுத் தாக்குதலில் ஷியா பிரிவைச் சேர்ந்த 23 முஸ்லிம்கள் கொல்லப் பட்டனர். இந்தத் தாக்குதலுக்கு, அல்-குவைதா தீவிரவாத இயக்கத்தின் மதவாத பிரிவு பொறுப்பேற்றுள்ளது.

இது குறித்து இணையதளம் மூலம் வெளியிடப்பட்டுள்ள தகவலில், இதுபோன்ற தாக்குதல் தொடரும் என இப் பிரிவு எச்சரிக்கை விடுத்துள்ளது.

அரேபிய தீபகற்ப பகுதியில் இயங்கும் அல்-குவைதா இயக்கத்தின் மதவாத பிரிவு வெளியிட்ட இணையதள அறிக்கையில், "எங்களுடைய சுனி முஸ்லிம் சகோதரர்களைப் பாதுகாக்கவே இந் தத் தாக்குதலை நடத்தினோம்.

சுனி முஸ்லிம்களின் வீடுகளை சேதப்படுத்துவோருக்கும் அவர்களை கொன்று குவிப்பவர்களுக்கும் பதிலடி கொடுப்பதற்காக சிறப்புப் பிரிவை உருவாக்கி இருக்கிறோம்" எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

# 'விக்கிலீக்ஸ்' தலைவரை கைது செய்ய நடவடிக்கை

லியான், டிச. 02

'விக்கிலீக்ஸ்' தலைவர் ஜூலியான் அசாஞ்சை இன்டர்போல் பொலிஸார் தேடி வருகின்றனர். அவருக்கு ரெட் கோர்னர் அறிவிப்பு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

ஸ்வீடன் நாடு ஜூலியான் அசாஞ் மீது கற்பழிப்பு முறைப்பாடு தொடர்பாக கைது ஆணை பிறப்பித்துள்ளது. தலைமறைவாக இருக்கும் அசாஞ்சை பிடிக்க ஸ்வீடனின் வேண்டுகோளுக்கு இணங்கி இன்டர்போல் உதவ முன்வந்துள்ளது.

நவம்பர் 18ஆம் திகதியன்று ஸ்வீடன் 39 வயது ஆஸ்திரேலியரான ஜூலியான் அசாஞ்சை பிடிக்க கைது பிணையாணை பிறப்பித்தது. இன்டர்போல் அதன் உறுப்பு நாடுகளுக்கு அசாஞ் மீதான சிவப்பு அறிவித்தல் பற்றி தகவல் அனுப்பியுள்ளது.

ஜூலியான் அசாஞ் கைதாகும் பட்சத்தில் அவர் ஸ்வீடனுக்கு நாடு கடத்தப்படவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

# கிறிஸ்தவப் பெண்ணுக்கு மன்னிப்பு வழங்குவதற்கு எதிர்ப்பு

லாகூர், டிச. 02

பாகிஸ்தானைச் சேர்ந்த கிறிஸ்தவ பெண் ஆசியா பீவி. 45 வயதான இவர் இஸ்லாம் மதத்தை அவமதித்தார் எனக் கூறி வழக்கு தொடரப்பட்டது. இந்த வழக்கில் அவருக்கு தூக்குத்தண்டனை விதிக்கப்பட்டது. இந்தத தீர்ப்புக்கு பாப்பரசர் எதிர்ப்புத் தெரிவித்துள்ளார்.

மேற்கத்தைய நாடுகள் பலவும் எதிர்ப்பு தெரிவித்துள்ளன. இந்த நிலையில் தீர்ப்பை எதிர்த் தும் தனக்கு மன்னிப்பு வழங்குமாறு கோரியும் ஆசியா பீபீ ஜனாதிபதி சர்தாரிக்கு மனு செய்தார். இதை ஏற்று சர்தாரி அவருக்கு பொதுமன்னிப்பு வழங்கியுள்ளார்.

இதை எதிர்த்து, ஷாகீத் இக்பால் என்பவர் லாகூர் உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தார். இந்த வழக்கு விசாரணைக்கு வந்தபோது இக்பாலின் சட்டத்தரணி அல்லா பக்ஸ் லாகிரி வாதாடுகையில், இந்த தீர்ப்பை எதிர்த்து மேன்முறையீடு வழக்கு விசாரணையில் இருக்கும் போது ஜனாதிபதி மன்னிப்பு வழங்கியிருப்பது சட்டவிரோதமானது என்று வாதாடினார்.

இந்த வழக்கில் தீர்ப்பு அளித்த உயர் நீதிமன்றம் சர்தாரிக்கு மன்னிப்பு அளிப்பதில் இருந்து தடை விதித்துள்ளது.

தீர்ப்பில் நீதிமன்றம் கூறியிருப்பதாவது:-

அந்தப் பெண்ணுக்கு எதிரான சாட்சியங்களை மதிப்பீடு செய்வது நீதிமன்றத்தின் கடமையாகும். இது தனிநபரின் வேலை அல்ல. குற்றஞ்சாட்டப்பட்ட பெண் அப்பாவி என்று தெரியவந்தால் அவர் விடுவிக்கப்படுவார்.

இவ்வாறு நீதிமன்றம் தீர்ப்பில் குறிப்பிட்டுள்ளது.

# அமெரிக்க விஞ்ஞானிகள் நவீன துப்பாக்கி தயாரிப்பு

நியூயோர்க்,டிசெ.2

ஆப்கானிஸ்தானில் கடந்த 9 ஆண்டுகளாக அமெரிக்க இராணுவம் முகாமிட்டுள்ளது. அங்கு தீவிரவாதிகளை அழிக்கும் பணியில் அது ஈடுபட்டுள்ளது. ஆனால், அவர்களை முற்றாக ஒழிக்க முடியவில்லை.

அவர்கள் அங்குள்ள மலைப் பகுதியில் பதுங்கி மறைந்திருந்து தாக்குதல் நடத்தி வருகின்றனர். எனவே, அவர்களை ஒழித்து கட்ட அதி நவீன துப்பாக்கியை அமெரிக்க விஞ்ஞானிகள் தயாரித்துள்ளனர். இந்தத் துப்பாக்கி கட்டடங்கள், மலைப் பகுதிகள் ஆகியவற் றில் மறைந்திருக்கும் தீவிரவாதிகளைத் தாக்கி அழிக்கும் திறன் படைத்தது. இதற்கு எக்ஸ். எம்.25 ரக துப்பாக்கி எனப் பெயரிடப்பட்டுள்ளது.

இது மின் என சோடாவில் ஏலியண்ட் தொழில்நுட்பத்துடன் உருவாக்கப்பட்டுள்ளது. இது 7 ஆண்டுகளாக கஷ்டப்பட்டுத் தயாரிக்கப்பட்டுள்ளது. இது விரைவில் ஆப்கானிஸ்தானிலுள்ள அமெரிக்க இராணுவத்தில் சேர்க்கப்படவுள்ளது.

இந்த நவீன ரக துப்பாக்கியால் 2,300 அடி தூரத்திலுள்ள மலைப் பகுதியில் அல்லது கட்டடங்களுக்குள் பதுங்கியிருக்கும் தீவிரவாதிகளை சுட்டு அழிக்க முடியும். இந்தத் துப்பாக்கியை இந்த மாதம் முதல் பயன்படுத்த அமெரிக்க இராணுவம் முடிவு செய்துள்ளது.

# மெக்ஸிக்கோ கேன்கன் நகரில் பருவநிலை தொடர்பாக மாநாடு

பருவநிலை மாற்றம் தொடர்பான வருடாந்த மாநாடு மெக்ஸிக்கோவின் கேன்கன் நகரில் ஆரம்பமாகியது. 12 நாட்கள் நடைபெறவுள்ள இந்த மாநாட்டில் பருவநிலை மாற்றத்தினால் ஏற்பட்டுள்ள பல்வேறு விளைவுகள் குறித்து விவாதம் நடத்தப்படவுள்ளது.

வளரும், வளர்ந்த நாடுகளின் தொழிற்சாலைகளி லிருந்து வெளியேறும் கரிய மிலவாயுவை கட்டுப்படுத்த மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் முக்கிய முடிவுகள் மேற்கொள் எப்படவுள்ளன.

30 பில்லியன் டொலர் கடனுதவி அளிப்பதற்கும் இவை நீண்ட, குறுகிய கால கடன்கள் வழங்குவது குறித்தும் இந்த மாநாட்டில் விவாதிக்கப்படவுள்ளது.

# மொராக்கோவில் பஸ் விபத்து; 23 பேர் பலி

மொராக்கோவில் பயணிகள் பஸ் ஆற்றில் கவிழ்ந்து ஏற்பட்ட விபத்தில் 24 பேர் பலியாயினர். மொராக்கோவில் தற்போது கனமழை பெய்து வருகிறது. இந்த விபத்தில் 24 பேர் சம்பவ இடத்திலேயே பலியாயினர். சம்பவ இடத்தில் மீட்புப் படையினர், காயமடைந்தவர்களை மீட்டு வைத்தியசாலையில் சேர்த்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்கள்

### திருமதி பிலோமினா பாக்கியநாதர்



பற்றிமா கோயிலடி, பண்டத்தரிப்பை வசிப்பிடமாகக் கொண்ட பிலோமினா பாக்கியநாதர் (28.11.2010) ஞாயிற்றுக் கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சூசைப்பிள்ளை பாக்கியநாதரின் அன்பு மனைவியும், திரேசா (இத்தாலி), நீற்றா (ஜேர்மனி), ராணி (இத்தாலி), மாக்கிறேற், றஞ்சி, காலஞ்சென்ற மேரி அலெக்ஸ் சந்திரா மற்றும் ஜெஸ்லின் (இத்தாலி), காலஞ்சென்ற அன்ரனி செபஸ்ரியாம்பிள்ளை மற்றும் யசிந்தா (ஆசிரியை, யாழ். பண்டத்தரிப்பு யசிந்தா றோ.க.த.க. பாடசாலை), றாஜினி (இத்தாலி), யேசுதாசன் (ஜேர்மனி), ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற செல்வம் (இத்தாலி) மற்றும் யேசுராசா (ஜேர்மனி), மரியதாஸ் (இத்தாலி), தோமஸ், குருநாதன், ஜெயக்குமார் (இத்தாலி), ரவிந்திரன் (இத்தாலி), இந்துமதி (ஜேர்மனி) ஆகியோரின் மாமியும், நோயல் (ஜேர்மனி), டிலோஜினி (யாழ்.பல்கலைக் கழகம்), டினேஷ் (யாழ்ப்பாணம்), டிறாஜ் (யாழ்ப்பாணம்), யோய் அந்தோனியே (இத்தாலி), யூலியானா (இத்தாலி), அஞ்சலீனா (ஜேர்மனி), அலக்ஸ்சந்திரா (ஜேர்மனி), அஜேய் (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.12.2010) வியாழக்கிழமை முற்பகல் 10 மணியளவில் புனித பற்றிமா ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பூதவுடல் பண்டத்தரிப்பு சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பற்றிமா வீதி,
பண்டத்தரிப்பு.
0213006819 (106750) தகவல்: குடும்பத்தினர்.

### கந்தையா இராஜேந்திரம்

(ஓய்வுபெற்ற ஊழியர் இ.மி.சபை)



சுன்னாகம் கிழக்கு சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா இராஜேந்திரம் (ஓய்வுபெற்ற ஊழியர், இ.மி.சபை) நேற்று 11.12.2010 புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா-தங்கம்மா தம்பதியரின் மகனும், காலஞ்சென்றவர்களான மார்க்கண்டு - செல்லம் தம்பதியரின் அன்பு மருமகனும், சரஸ்வதி, பரமேஸ்வரி, இராசபூபதி, லோகநாதன், சறோஜினிதேவி, காலஞ்சென்ற ஆனந்தராசா ஆகியோரின் பாசமிகு சகோதரனும், சறோஜாதேவியின் அன்புக் கணவரும், திவாகரன் (ஜனசக்தி இன்சுரன்ஸ் பி.எல்.சி) பாசமிகு தந்தையும், அமிர்தசக்தியின் அன்பு மாமனாரும், அருமைநாயகம் - பூரணம், சீதாலட்சுமி - பாலசுந்தரம், மார்க்கண்டு மகாதேவன், மார்க்கண்டு மகாலிங்கம், நடராசா - புஸ்பகலாதேவி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.12.2010) வியாழக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரின் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக சுன்னாகம் கொத்தியாலடி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சுன்னாகம் கிழக்கு,
சுன்னாகம். (106762) தகவல் குடும்பத்தினர்.

### சின்னத்துரை மயூரன்



மாசிவன் சந்தி, நீர்வேலியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்துரை மயூரன் 30. 11.2010 செவ்வாய்க்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்துரை மற்றும் நாகேஸ்வரிஅம்மா தம்பதியரின் அன்பு மகனும், சந்தியா குமாரியின் அன்புக் கணவரும், ரதிபன், கஜிபன், கவிசா, தனிகா ஆகியோரின் அன்புத் தந்தையும், விஜயலட்சுமி, விஜயநந்தினி, செந்தில் நாதன், வரதராசன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், தயாகரன், வசந்தகுமார், ஜெயா, மதி ஆகியோரின் அன்பு மைத்துனரும், சிவாஜினி, ஷாமினி, தர்ஷிகா, மதுஷாஜி ஆகியோரின் அன்பு மாமாவும், கஜிறா, கவிசா, கார்த்திகா, கார்த்திகன், ஆதித்தன் ஆகியோரின் அன்பு சித்தப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.12.2010) வியாழக்கிழமை பி.ப. 2 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நீர்வேலி சீயாக்காடு இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மாசிவன் சந்தி,
நீர்வேலி. தகவல் குடும்பத்தினர்.

## ஒளிவிழா

தென்மராட்சி, டிசெ. 2

அமெரிக்கன் சிலோன் மிஷன் திருச்சபையின் சாவகச்சேரி தூய தோமஸ் முன்பள்ளி ஒளிவிழா நாளை மறுதினம் சனிக்கிழமை பி.ப 2 மணிக்கு நுணாவில் கிழக்கு அமிர்தாம்பிகை வித்தியாலயத்தில் நடைபெறும். (201 -207)

## உதவித் திட்டத்தின் கீழ் வீடமைத்துக் கொடுக்க ஏற்பாடு

நவாலி.டிசெ.2

ஜனாதிபதியின் இரண்டாவது பதவியேற்பையொட்டி வீடமைப்புத் திட்டத்தின் கீழ் வீடமைத்துக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ஆனைக்கோட்டை ஜே/133 கிராம சேவையாளர் பிரிவில் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் முள்ளியைச் சேர்ந்த பொன்னன் கந்தசாமி குடும்பத்திற்கு வீடு அமைத்துக் கொடுக்கப்பட வுள்ளது.

ஆனைக்கோட்டை கிராம சேவையாளர் என்.நிசாந்தன் தலைமையில் அண்மையில் நடைபெற்ற அடிக்கல் நடும் நிகழ்வில் பிரதம விருந்தினராக சண்டிலிப்பாய் பிரதேச செயலக நிர்வாக உத்தியோகஸ்தர் க.முரளி கலந்து கொண்டு வீட்டுக்கான அடிக்கல்லை நட்டுவைத்தார் (204-100)

## புதிய தொழில் வாய்ப்பு ஆய்வரங்குச் சான்றிதழ்

யாழ்ப்பாணம் டிசெ. 02

அபிவிருத்திக்கான சமூக அமைப்புக்களின் வலையமைப்பின் (சொண்ட்) ஏற்பாட்டில் குடாநாட்டில் புதிய தொழில் வாய்ப்புக்கள் எனும் தொனிப்பொருளில் ஆய்வரங்கு நாளைமறுநாள் சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு அமைப்பின் யாழ். அரசடி வீதி செயலகத்தில் நடைபெறும்.

பேராசிரியர் பசுபதி சிவநாதன் ஆய்வுரை வழங்குவார். (ஓ-ற)

## குடாநாட்டுச் சந்தைகளில் வெங்காயத்தின் விலை அதிகரிப்பு

கோப்பாய், டிசெ. 2

குடாநாட்டு சந்தைகளில் வெங்காயத்தின் விலை என்று மில்லாதவாறு அதிகரித்துள்ளது. சின்ன வெங்காயம் 150-170 ரூபா வரையும் பெரிய வெங்காயம் 180-200 ரூபா வரையும் விற்பனைசெய்யப் பட்டுவருகின்றது. இதே வேளையில் சில நாள்களாக பெய்த அடை மழையால் பெருமளவு தாழ்ந்த நிலப் பகுதிகளில் உள்ள வெங்காயப் பயிர்ச்செய்கை நிலங்களில் வெள்ளம் தேங்கி நிற்பதால் அவை அழிவ டையும் ஆபத்து ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## கிராம அலுவலர்களுக்கான முகாமைத்துவ போட்டி முடிவுகள்

தென்மராட்சி, டிசெ. 2

தென்மராட்சி பிரதேச கிராம அலுவலர் பிரிவுகளுக்கிடையிலான முகாமைத்துவ போட்டியின் முடிவுகள் பிரதேச செயலகத்தினால் வெளியிடப்பட்டுள்ளன.

பிரதேச செயலக உயர் அதிகாரி களால் மேற்கொள்ளப்பட்ட மதிப்பீட்டின் அடிப்படையின் பிரகாரம் முடிவுகள் வெளியிடப்பட்டது.

இதன் பிரகாரம் வரணி இயற்றாலை பிரிவு கிராம அலுவலர் ந. இராமகுமாரன் முதலிடத்தினையும், பலாலி பிரிவு கிராம அலுவலர் கே. ஜனகன் இரண்டாமிடத்தையும், சரசாலை வடக்கு கிராம அலுவலர் கே.முல்லைமாறன் மூன்றாம் இடத்தையும் பெற்றுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (201-207)


## கோழிக் குஞ்சு விநியோகம்

தரமான புறொயிலர் No - 1 கோழிக்குஞ்சுகள் யாழ்ப்பாணத்தில் விநியோகிக்க இருக்கின்றன. (Nelna Farm) மிகக் குறைந்த விலையில் நம்பிக்கையாகப் பெற்றிட நாட வேண்டிய இடம் இலங்கையின் தலைசிறந்த விநியோகஸ்தர்கள்

**(Mafa Farm House)**

தொடர்புகளுக்கு

0773657008, 0773760445.

மொத்த வியாபாரிகளுக்கு விசேட [illegible]

[illegible]

110/- உடன் தொடர்புகொள்ளவும்.

(106512)



## கடைகள் வாடகைக்கு

யாழ்.வை.எம்.சி.ஏ. கட்டடத்தில் அமைந்துள்ள சிற்றுண்டிச்சாலை கடை, (கச்சேரி நல்லூர் வீதி) கடைத் தொகுதியின் கீழ்க்கடை, கடைத் தொகுதியின் 2 ஆம் மாடிக் கடை என்பவை குத்தகைக்கு கொடுக்க கேள்விக் கோரிக்கைகள் ஏற்றுக் கொள்ளப்படுகின்றது. முடிவு திகதி: 10.12.2010 வரை நீடிக்கப்பட்டுள்ளது. கடித உறையின் இடது மேல் மூலையில் கோரிக்கைக்கான கடைத்தொகுதியை குறிப்பிட்டு அனுப்ப வேண்டிய முகவரி:

Y.M.C.A. 109, கண்டி வீதி, யாழ்ப்பாணம். பொதுச் செயலாளர்


## அறிவித்தல்

மானிப்பாய் கிராம உப அலுவலகம் - ஆதனப் பெயர் மாற்றம்

வட்டாரம் 15 ,
யாழ்-காரைநகர் வீதி,
ஆதன இல 49/49

வட்டாரம் 15 ,யாழ்-காரைநகர் வீதி, ஆதன இல 49/49 இல் அமைந்துள்ள ஆதனமானது இராசையா நடராசா என்பவரால் அறுதியாக விற்கப்பட்டு காந்திகேசையர் வைத்தியநாதஐயர் பெண் பிரேமதாம்பிகையும் என்பவர்களால் 13275-15.03.1983 திகதி எழுதப்பட்ட உறுதி மூலம் குறித்த ஆதனமானது தமக்குச் சொந்தம் என்பதைத் தெரியப் படுத்தி, எமது ஆதனப் பதிவேட்டில் தமது பெயரை மாற்றம் செய்வதற்காக பெயர் மாற்றத்துக்கு விண்ணப்பித்துள்ளனர். இவ்வாதனத்துக்கு உரிமைகோருபவர்கள் யாராவது இருந்தால் அவ்வுரிமையை உறுதிப்படுத்தும் உறுதிகள் ஆவணங்களுடன் எழுத்துமூலமாக 14 நாள்களுக்குள் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன். அவ்வாறு எவராலும் எவ்வித உரிமையும் கோரப்படாதவிடத்து காந்திகேசையர் வைத்தியநாத ஐயர் பெண் பிரேமதாம்பிகையும் எனும் பெயருக்கு மேற்குறித்த ஆதனம் பெயர்மாற்றம் செய்ய உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதை அறியத் தருகின்றேன்.

திருமதி.பு.சிவலிங்கம், செயலாளர்,
வலிகாமம்தென்மேற்கு பிரதேச சபை,
மானிப்பாய்.

## இவரைக் காணவில்லை



செல்வி உத்தரகுமாரி துரைராசசிங்கம் (ஆசிரியை, வயது 44) என்பவர் 16.11.2010 அன்று பாடசாலை சென்றவர் வீடு திரும்பவில்லை. இவரைப் பற்றிய தகவல் தெரிந்தவர்கள் கீழ்வரும் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.

திருமதி.ரி. கோபாலசிங்கம்
(சகோதரி)
கோகுல வீதி, கோண்டாவில்
வடக்கு, கோண்டாவில்.
தொ.பே: 0774414358, 0779069749


## VACANCY

Applicants are invited for the post of Development Trainees on Web Development, Designing and Hybrid web Technologies.

Those who have interest are requested to send your CVs to CeyLabs Solutions (Pvt) Ltd, Jaffna Branch or email to **career@ceylabs.com**

**CeyLabs Solutions (Pvt) Ltd,**
204, Brown Road,
Jaffna.

(106756)


## 41ஆம் நாள் நினைவலைகள்

தோற்றம்
09
★
04
★
1954



மறைவு
24
★
10
★
2010

அமரர் செல்லையா தெட்சணாமூர்த்தி (சாமி)

கடந்த 24.10.2010 அன்று சிவபதம் அடைந்த எமது தந்தையின் நினைவு நாளான இன்று (02.12.2010) வியாழக் கிழமை அவரின் ஆத்மா சாந்தி அடைய இறை வனைப் பிரார்த்திக்கின்றோம்.

நினைவுடன்: மகள்
சுதா, மருமகன் சுரேஸ்,
பேரன் அபிநயன்.

பிரதான வீதி,
பண்டத்தரிப்பு. (சி/572695)

## கண்ணீர் அஞ்சலி

எமது ஸ்தாபனத்தில் ஊழியராகக் கடமையாற்றும்

செல்வராஜ் அவர்களின் புதல்வன்

### செல்வராஜ் மதுபாலீஸ்வரன்

அவர்களின் திடீர் மறைவால் துயருற்றிருக்கும் அவரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

நியூ பிரியங்கா நகைமாளிகை
உரிமையாளரும், ஊழியர்களும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈராண்டு நினைவலைகள்

மண்ணில் 05.02.1954

விண்ணில் 24.11.2008



## அமரர் சிவகுமாரன் ஈஸ்வரி

திதி துவாதசி 02.12.2010

ஆண்டு இரண்டு சென்றாலும் அன்பான
வார்த்தைகளும் அமைதியான உங்கள்
பண்பும் அரவணைக்கும் நற்குணமும்
என்றும் நிலைத்து நிற்கும் எம்மனதில்

என்றும் உங்கள் நினைவுடன்:

கணவர் - குகமூர்த்தி சிவகுமாரன்
மகன்-சிவகுமாரன் அஜந்தன்
மருமகள் -திருமதி அஜந்தன் கிரிஜா
சகோதரர்கள், சகோதரிகள்.

நாவலடி கோயில் லேன்,
வட்டு மேற்கு, வட்டுக்கோட்டை.

# மரண அறிவித்தல்

## திருமதி நாகமணி பூமணி



கலையரசு வீதி, நவாலி தெற்கை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நாகமணி பூமணி 30.11.2010 செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற இளையவி- ராசம் தம்பதியரின் மகளும், சின்னப்பு-பொன்னாத்தா தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற நாகமணியின் அன்பு மனைவியும் தவபாலன் (லண்டன்), துரைரத்தினம், சந்திராதேவி (ஜேர்மனி), இராஜரட்ணம் (யாழ்.பல்கலைக்கழக பாதுகாப்பு உத்தியோகத்தர்), ஜெயந்திமாலா (ஹொலன்ட்), தங்கராசா (லண்டன்), நிர்மலாதேவி, விஜயராணி ஆகியோரின் பாசமிகு தாயும் நிர்மலாதேவி (லண்டன்), நாகேஸ்வரி, செல்வராசா (ஜேர்மனி), விக்னேஸ்வரி, சயனொளிபகவான் (ஹொலன்ட்), சரோஜினி (லண்டன்), சோதிலிங்கம் (தேசிய வீடமைப்புத் திட்டம்), இராஜேந்திரம் ஆகியோரின் மாமியாரும்

ஒமைரா (லண்டன்), சுயாந்தினி- பரமேஸ்வரன் (பிரான்ஸ்), மதன், லாவண்யா (லண்டன்), கபில், சுதா (சாளினி எலக்ரோனிக்ஸ்),தயா, சாளினி, காலஞ்சென்ற பிரசாத் மற்றும் தனுசன்-பாமினி (ஜேர்மனி), கவிதா-குமார் (லண்டன்), சுபீதா-ஸ்ரீபிரபாகரன் (லண்டன்), சுபீதர், சோபிதர் (யாழ்.பல்கலைக்கழக நுண்கலைபீடம்), சுதர்சினி-கண்ணன் (ஹொலன்ட்), சுஜீவன்-யசோ (டென்மார்க்), சுனித்தா-கரன் (லண்டன்), சுரேஜா (ஹொலண்ட்), பிரதீஸ் (லண்டன்), தரணிகா (லண்டன்), சஜீவன் (பெல்ஜியம்), ததீசன் (மலேசியா), பிரவீன், புவீன்சன், சரண்ஜன், மயூரன் (பிரான்ஸ்), கரேஸ் (ஜேர்மனி), நிரேஸ், யுவிதா, சோபிதா ஆகியோரின் பேர்த்தியும் நிவேஸ் (பிரான்ஸ்) வர்ஷியன் (பிரான்ஸ்) வர்ஷயா (பிரான்ஸ்), ஏஞ்சல் (லண்டன்), ஷர்ணி (லண்டன்), தாரிகா (லண்டன்), மகிஷா (லண்டன்), அக்ஷயன் (ஹொலன்ட்), பிருத்திகா (டென்மார்க்), நிதிஷிகா (டென்மார்க்) ஆகியோரின் பூட்டியும் நாகம்மாவின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.12.2010) வியாழக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பிற்பகல் ஒரு மணியளவில் தகனக்கிரியைக்காக கொத்துக்கட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கலையரசு வீதி,
நவாலி தெற்கு, நவாலி.

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## ரஞ்சி கிரிக்கெட்டில் கங்குலி

சர்வதேசக் கிரிக்கெட்டில் மட்டுமின்றி, முதல்தர கிரிக்கெட்டில் இருந்தும் இந்திய முன்னாள் அணித்தலைவர் சௌரவ் கங்குலி ஓய்வு பெற்றவர். இந்த நிலையில் அவர் மீண்டும் முதல் தர கிரிக்கெட்டில் ஆட முடிவு செய்துள்ளார். ஐ.பி.எல். கிரிக்கெட்டை மனதில் கொண்டு தன்னுடைய ஆட்டத்தை புதுப்பிக்கும் முயற்சியில் அவர் மீண்டும் விளையாட வந்துள்ளார். ரஞ்சி கிரிக்கெட் சூப்பர் லீக்கில் 'ஏ' பிரிவில் தமிழ்நாடு- பெங்கால் அணிகள் இடையிலான 4நாள் ஆட்டம் சென்னையில் இன்று தொடங்குகிறது. இதில் கங்குலி பெங்கால் அணிக்காக களம் இறங்குகிறார். 'ஏ' பிரிவில் மொத்தம் 8 அணிகள் இடம்பெற்றுள்ளன. இதுவரை 4 ஆட்டத்தில் விளையாடியுள்ள மும்பை அணி 14 புள்ளிகளுடன் முதலிடம் வகிக்கிறது. தமிழக அணி 10 புள்ளிகளுடன் 2ஆவது இடத்திலும், பெங்கால் அணி 8 புள்ளிகளுடன் 5ஆவது இடத்திலும் இருப்பது குறிப்பிடத்தக்கது.

## ராஜஸ்தான் றோயல் நீக்கத்துக்கு இடைக்காலத் தடை



ஐ.பி.எல். 20 ஓவர் கிரிக்கெட் போட்டி ரசிகர்கள் மத்தியில் பெரும் வரவேற்பைப் பெற்றது. 2007ஆம் ஆண்டு இந்தப்போட்டி அறிமுகம் ஆனது. 2011ஆம் ஆண்டு நடைபெற உள்ள ஐ.பி.எல். போட்டியில் இருந்து முன்னாள் சாம்பியனான ராஜஸ்தான் றோயல், கிங்ஸ் லெவன் பஞ்சாப் ஆகிய அணிகளை இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை (பி.சி.சி.ஐ.) அதிரடியாக நீக்கியது. இந்த இரண்டு அணிகளும் ஐ.பி.எல். விதிமுறைகளை மீறி செயல்பட்டதாக கூறி நீக்கப்பட்டன. அதாவது அணியின் பங்கு தாரர்களை மாற்றிவிட்டதாக அந்த அணிகள் மீது கூறப்பட்டுள்ள குற்றச்சாட்டு ஆகும்.

கிரிக்கெட் சபையின் இந்த முடிவால் இரு அணிகளும் அதிர்ச்சி அடைந்தன. இதை எதிர்த்து ராஜஸ்தான் றோயல் மும்பை உயர் நீதிமன்றில் வழக்கு தொடர்ந்தது.

இந்த வழக்கில் நீதிமன்றத்துக்கு வெளியே மத்தியஸ்தர் மூலம் பிரச்சினையை தீர்த்துக்கொள்ள இரு தரப்பினரும் ஒப்புக் கொண்டனர். இதை தொடர்ந்து மத்தியஸ்தராக நீதிபதி பி.என். கிருஷ்ணன் நியமிக்கப்பட்டார்.

இந்த நிலையில் ராஜஸ்தான் அணியின் நீக்கத்துக்கு அவர் இடைக்கால தடை விதித்துள்ளார். 6 வார காலத்துக்கு இந்த இடைக்கால தடை நீடிக்கும். ராஜஸ்தான் அணி நீக்கப்பட்டது சட்ட

**விளையாட்டு அரங்குகளில்**

விரோதமானது என்று அவர் கூறியுள்ளார்.

இதற்கு அந்த அணியின் உரிமையாளரான ஷில்பா ஷெட்டி மகிழ்ச்சி தெரிவித்துள்ளார். அந்த அணியின் தலைமை சந்தைப்படுத்தல் அதிகாரி ரகு அய்யர் கூறும் போது, நீக்கத்துக்கு இடைக்கால தடை விதிக்கப்பட்டு இருப்பதற்கு எங்கள் அணி நிர்வாகம் மிகுந்த மகிழ்ச்சி அடைந்துள்ளது. இந்த உத்தரவு நாங்கள் சரியான பாதையில் செல்கிறோம் என்பதை காட்டுகிறது என்றார்.

## மஞ்சி கிரிக்கெட் போட்டிகள் ஆரம்பம்

2010 - 2011 பருவ காலத்துக்கான மஞ்சி 19 வயதுக் குட்பட்ட கிரிக்கெட் போட்டிகள் ஆரம்பமாகியுள்ளன.

எதிர்வரும் ஏப்ரல் மாதம் வரை நடைபெறவுள்ள இந்த சுற்றுப் போட்டிக்கு மஞ்சி நிறுவனம் அனுசரணை வழங்குகிறது. நாடளாவிய ரீதியில் 2300 போட்டிகள் இந்த தொடரில் இடம்பெறவுள்ளது.


3 பிரிவுகளில் போட்டிகள் நடைபெற ஏற்பாடாகியுள்ள இந்த போட்டிகளில் முதலாம் மற்றும் இரண்டாம் பிரிவுகளில் 580 மற்றும் 512 போட்டிகளும் மூன்றாம் பிரிவில் 1200 போட்டிகளும் நடைபெறவுள்ளன.

இந்த போட்டித்தொடர் குறித்து ஊடகங்களுக்கு அறிவுறுத்தும் நிகழ்வு அண்மையில் கொழும்பில் நடைபெற்றது. இந்நிகழ்வில் சிபிஎல் நிறுவனத்தின் சந்தைப்படுத்தல் பிரிவின் பணிப்பாளர் நந்தன விக்ரமகே, விநியோகம் மற்றும் விற்பனை பிரிவின் பணிப்பாளர் தேஜா பீரிஸ், மாஸ்கொம் நிறுவனத்தின் முகாமைத்துவ பணிப்பாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான திலங்க சுமதிபால மற்றும் இலங்கை பாடசாலை கிரிக்கெட் சங்கத்தின் பிரதித் தலைவர் ரஞ்சித் ஜயசுந்தர ஆகியோர் கலந்துகொண்டிருந்தனர். இத்தொடரின் முதலாம் சுற்றுப் போட்டிகள் லீக் முறையில் அமையவுள்ளதுடன், முதலாம் சுற்றிலிருந்து 32 அணிகளும், இரண்டாம் சுற்றிலிருந்து 16 அணிகளும் காலிறுதிப் போட்டிகளுக்கும் தெரிவு செய்யப்படவுள்ளன. பின்னர் இறுதிச் சுற்றுப் போட்டிகள் நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

இந்த போட்டித் தொடரின் முடிவில், தொடரின் சிறந்த வீரர், சிறந்த பந்து வீச்சாளர், சிறந்த துடுப்பாட்ட வீரர் மற்றும் இறுதிப் போட்டியின் ஆட்ட நாயகன் விருதுகளும் வழங்கப் படவுள்ளன என அனைத்து பாடசாலைகள் கிரிக்கட் சங்கத்தின் தலைவரும் மொரட்டுவ பிரின்ஸ் ஒஃவ் வேல்ஸ் கல்லூரியின் அதிபருமான ரோஹண கருணாரத்ன தெரிவித்தார்.

பின்னர் காலிறுதிப் போட்டிகளுக்கு தகுதி பெறும் 16 அணிகள் பங்குபெறும் 20 - 20 கிரிக்கெட் சுற்றுப் போட்டியும் நடத்த மஞ்சி திட்டமிட்டுள்ளது. நாடு பூராகவுமுள்ள பாடசாலைகள் மஞ்சி 19 வயதுக்குட்பட்ட கிரிக்கெட் போட்டிகளில் பங்கேற்கவுள்ளன. முதலாம் சுற்றுப் போட்டிகள் நாடு பூராகவுமுள்ள மைதானங்களில் நடைபெறவுள்ளதுடன், இறுதிச் சுற்றுப் போட்டிகள் கொழும்பில் நடைபெறவுள்ளன.

## கங்குலி, டிராவிட்டை நீக்க ஐ.பி.எல். அணிகள் முடிவு



அடுத்த வருடம் நடைபெறவுள்ள 4ஆவது ஐ.பி.எல். தொடரின்போது, கங்குலி, டிராவிட் ஆகியோரை விடுவிக்க அவர்கள் விளையாடும் அணிகள் முடிவு செய்துள்ளன.

ஐ.பி.எல். போட்டி அறிமுகமானபோது இருவரும் நட்சத்திர வீரர்களாக கல்கத்தா, பெங்களூர் அணிகளுக்குத் தெரிவுசெய்யப்பட்டனர்.

3 ஆண்டுகளுக்கான ஒப்பந்தம் முடிந்த நிலையில் இவர்கள் இருவரையும் விடுவிக்க அந்த அணிகள் முடிவு செய்துள்ளன.

கல்கத்தா நைட் ரைடர்ஸ் தங்களது அணியை முற்றிலும் மாற்றியமைக்க முடிவு செய்துள்ளது. அதன்படியே கங்குலியை நீக்கவும் முடிவு செய்துள்ளது.

இதேபோல பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ் அணியும் டிராவிட்டைக் கழற்றி விட முடிவு செய்துள்ளது. சென்னை சூப்பர்கிங்ஸ் அணி, டோனி, ரெய்னா, முரளி விஜய், அல்பிமோர்கல் ஆகியோரைத் தக்க வைத்துக்கொள்ளும் என்று தெரிகிறது.

இதேபோல டெண்டுல்கர் மும்பை அணியிலும், ஷேவாக் டில்லி அணியிலும் நீடிக்கப்படுவார்கள் என அறியமுடிகிறது.




## ரியல் மட்ரிட் படுதோல்வி

ஸ்பெயின் உதைபந்தாட்ட லீக் போட்டி ஒன்றில் பலமான ரியல் மட்ரிட் அணியை மற்றொரு பலமான அணியான பார்சிலோனா 5-0 என்ற கோல் கணக்கில் வீழ்த்தி அதிர்ச்சியளித்தது.

ஆட்டம் தொடங்கி 17-வது நிமிடத்திலேயே பார்சிலோனா வீரர்களான சாவி, பெட்ரோ ரோட்ரிக்ஸ் ஆகியோர் இரண்டு கோல்களை அடித்தனர்.

அதன் பிறகு டேவிட் வில்லா 54 மற்றும் 56ஆம் நிமிடங்களில் மேலும் இரண்டு அபாரமான கோல்களை அடித்தார்.

பிறகு ஜெஃப்ரென் 5-வது கோலை அடித்தார். இந்த வெற்றி மூலம் 2 புள்ளிகள் கூடுதலாகப் பெற்று அட்டவணையில் ரியல் மட்ரிட்டைப் பின்னுக்குத் தள்ளியது பார்சிலோனா.

இந்தப் போட்டிக்கு முன்பு ரியல் மட்ரிட் தோல்வியடையாமல் இருந்தது.

## மாவட்ட விளையாட்டு அணிகளில் வெளி வீரர்களை அனுமதிக்கக் கூடாது

வெளிமாவட்டத்தைச் சேர்ந்த வீரர்கள் ஏனைய மாவட்டங்களில் உள்ள அணிகளில் உள்நுழைந்து விளையாடுவதற்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என கிழக்கு மாகாணசபை உறுப்பினர் எட்வின் கிருஷ்ணானந்தராஜா தெரிவித்துள்ளார்.

சுகாதார, விளையாட்டு, தகவல் தொழில்நுட்பக் கல்வியமைச்சர் எம்.எஸ்.சுபைரிடம் இந்த முறைப்பாட்டைத் தான் தெரிவித்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இவ்விடயம் தொடர்பில் கருத்துத் தெரிவித்த அவர், கிழக்கு மாகாண மட்ட விளையாட்டுப் போட்டிகளில் வெளிமாவட்டங்களைச் சேர்ந்தவர்கள் விளையாடுவதையிட்டு நான் மிகவும் ஏமாற்றமடைந்தேன். இவ்வாண்டிற்கான மாகாண மட்ட விளையாட்டுப்போட்டி மட்டக்களப்பு வெபர் மைதானத்தில் நடைபெற்றபோது அதை நான் நேரடியாகவே அறிந்து கொண்டேன்.

திருகோணமலை மாவட்டத்திலிருந்து வருகை தந்திருந்த அணியில் வெளிமாவட்டங்களைச் சேர்ந்தவர்கள் அதிகம் உள்வாங்கப்பட்டிருந்தனர். இவ்விடயம் சம்பந்தமாக மட்டக்களப்பு மாவட்ட விளையாட்டு வீரர்கள் என்னிடம் கடும் அதிருப்தியையும் தெரிவித்திருந்தனர்.

தென்மாகாணத்தில் தேசிய மட்ட விளையாட்டுப் போட்டிகளில் பங்குபற்றி வெற்றிகளைப் பெற்ற இளைஞர்கள் பலரும் திருமலை மாவட்ட அணியில் உள்வாங்கப்பட்டிருந்தனர். இவ்வாறான நடவடிக்கைகள் இனிவரும் காலங்களில் தவிர்க்கப்படவேண்டும் என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நியூஸிலாந்தைப் பந்தாடியது இந்தியா!



ஜெய்ப்பூர், டிச. 02

ஜெய்ப்பூரில் நேற்று நடைபெற்ற நியூஸிலாந்துக்கு எதிராக நடைபெற்ற இரண்டாவது ஒரு நாள் போட்டியில் 8 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் இந்திய அணி அபார வெற்றியீட்டியது.

நாணய சுழற்சியில் வென்ற இந்தியா, நியூஸிலாந்து அணியைத் துடுப்பெடுத்தாடுமாறு பணித்தது. இந்திய அணியின் வேகப்பந்து வீச்சை சமாளிக்க முடியாத நியூஸிலாந்து அணிவீரர்கள் சொற்ப ஓட்டங்களுக்குள் தமது விக்கெட்டைப் பறிகொடுக்கத் தொடங்கினர். எனினும், நியூஸிலாந்தின் ஆரம்பத் துடுப்பாட்டவீரர் குப்டில் (70), சகல துறை வீரர் ஸ்ரைரீஸ் (59) ஆகியோர் அரைச்சதம் அடித்தனர். இதனால், நியூஸிலாந்து அணி 8 விக்கெட்டுகளைப் பறிகொடுத்து 258 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது. பந்துவீச்சில் ஸ்ரீசாந்த் 4 விக்கெட்டுக்களையும், முனாப் பட்டேல், யூசுப் பதான், அஸ்வின் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

259 எனும் இலகுவான இலக்கைத் துரத்தத் தொடங்கிய இந்திய அணிக்கு முரளி விஜயும், கௌதம் கம்பீரும் பலமான அடித்தளத்தை இட்டார்கள்.

இருவரும் முதல் விக்கெட் இணைப்பாட்டமாக 87 ஓட்டங்களைப் பெற்றிருந்த போது, விற்றோரியின் பந்தில் முரளி விஜய் (33) 'போல்ட்' ஆனார்.

எனினும் கம்பீருடன் இணைந்த விராட் ஹோலியும் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி அரைச்சதம் அடித்து - 64 ஓட்டங்களுடன் - வெளியேறினார்.

மறுமுனையில் அதிரடியாக ஆடிய கம்பீர் (138) சதம் அடித்து ஆட்டமிழக்காமல் அணியை வெற்றிப்பாதைக்கு இட்டுச் சென்றார். ஹோலியின் ஆட்டமிழப்பைத் தொடர்ந்து களமிறங்கிய யுவராஜ் சிங் தனது ஒரு சிக்ஸர் அடங்கலாக 16 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழக்காது களத்தில் இருந்தார்.

இதனால், 43 ஓவர்களில் 2விக்கெட் இழப்பிற்கு 259 என்ற வெற்றி இலக்கை இந்தியா எட்டியது. நியூஸிலாந்து அணி சார்பாக, விற்றோரி, மைக்கே தலா ஒரு விக்கெட்டை வீழ்த்தினர்.

சதம் அடித்து அசத்திய இந்திய அணித்தலைவர் கம்பீர் ஆட்டநாயகனாகத் தெரிவானார்.

நேற்றைய போட்டியில் வெற்றியீட்டியதன் மூலம் கம்பீர் தலைமையிலான இளைய இந்திய அணி 5 போட்டிகள் கொண்ட தொடரில் 2-0 என்ற ரீதியில் முன்னிலை வகிக்கிறது. (எ)

## விளையாட்டு அரங்குகளில்

## இந்திய - தென்னாபிரிக்கத் தொடரில் நடுவரின் தீர்ப்புக்கு எதிர்ப்பு இருக்காது

இந்தியா-தென்னாபிரிக்க அணிகளுக்கிடையிலான டெஸ்ட் தொடரின்போது, நடுவரின் தீர்ப்பை மறுபரிசீலனை செய்யும் நடைமுறை இருக்காது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

டெஸ்ட் கிரிக்கெட்டில் நடுவர்களின் தீர்ப்பை மறுபரிசீலனை செய்யும் முறை அமுலில் இருந்துவருகிறது.

நடுவர்கள் வழங்கும் தீர்ப்பில் சந்தேகம் ஏற்படின், அதனை எதிர்த்து மூன்றாவது நடுவரிடம் மேன்முறையீடு செய்யலாம். ஓர் அணி ஓர் இனிங்ஸில் 2 தடவைகள் இவ்வாறு மேன்முறையீடு செய்யலாம்.

இந்த முறைக்கு இந்திய கிரிக்கெட் சபை தொடர்ந்து எதிர்ப்புத் தெரிவித்து வருகிறது.

இந்திய-தென்னாபிரிக்க அணிகள் மோதும் முதலாவது டெஸ்ட் போட்டி எதிர்வரும் 16ஆம் திகதி செஞ்சூரியனில் தொடங்குகிறது. இந்தத் தொடரில் நடுவர்களின் தீர்ப்பை மறுபரிசீலனை செய்யும் முறை இருக்க வேண்டும் என்று தென்னாபிரிக்க வீரர்கள் விரும்பினார்கள்.

ஆனால், அந்த முறை வேண்டாம் என்று இந்திய கிரிக்கெட் சபை வற்புறுத்தியது. இதற்குத் தென்னாபிக்கக் கிரிக்கெட் சபையும் சம்மதம் தெரிவித்துள்ளது.

இதனால், இந்தியா-தென்னாபிரிக்க டெஸ்ட் தொடரில் நடுவரின் தீர்ப்பை மறுபரிசீலனை செய்யும் முறை இருக்காது ஏன்று தென்னாபிரிக்கக் கிரிக்கெட் சபையின் தலைமை நிர்வாகி ஜெரால்ட் மஜோலா கூறியுள்ளார். (எ)

## இலங்கை மே.இந்தியத்தீவுகள் டெஸ்ட் 3ஆவது ஆட்டத்திலும் விளையாடுகிறது மழை





பள்ளேகலவில் நடைபெற்றுவரும் மூன்றாவது டெஸ்ட் போட்டியின் முதலாவது நாளான நேற்றைய ஆட்டம் முடிய சிறிதுநேரம் இருந்தபோது மேற்கிந்தியத் தீவுகள் அணி, 2 விக்கெட்டுகள் இழப்புக்கு 130 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

மேற்கிந்தியத்தீவுகள் - இலங்கை அணிகளுக்கிடையிலான 3 போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடர் இலங்கையில் நடைபெற்றுவருகிறது.

இதில் முன்னர் நடந்து முடிந்த இரண்டு போட்டிகளும் சமனிலையில் முடிந்தன.

இந்நிலையில் தொடரைத் தீர்மானிக்கும் மூன்றாவது மற்றும் கடைசிப் போட்டி பள்ளேகலவில் நேற்று ஆரம்பமானது.

நாணயச் சுழற்சியில் வென்ற இலங்கை அணி, முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது.

அதன்படி துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய மேற்கிந்தியத் தீவுகள் அணி, வீசப்பட்ட முதல் பந்திலேயே ஆரம்ப - அதிரடி வீரரான கெய்லை இழந்தது. எனினும், பின்னர் வந்த பிராவோ, ஸ்மித்துடன் இணைந்து நிதானமாக ஆடினார்.

சிறப்பாக ஆடிய ஸ்மித், அரைச்சதம் (55) அடித்து ஆட்டமிழந்தார்

ஆட்டம் ஆரம்பமாகியது முதல் இடையிடையே மழை குறுக்கிட்டதால் ஆட்டமும் அடிக்கடி பாதிக்கப்பட்டது.

நேற்று ஆட்ட நேரம் முடிய சிறிது நேரம் இருந்தபோது, மேற்கிந்தியத் தீவுகள் அணி, 2 விக்கெட்டுகள் இழப்புக்கு 130 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

இன்று ஆட்டத்தின் இரண்டாம் நாள் ஆகும்.

# இங்கிலாந்து டெஸ்ட் தொடரின்போது சூதாட்டம்: மேலும் 4 பாகிஸ்தான் வீரர்களுக்கு தொடர்பு!

## சூதாட்டத் தரகர் பேசிய விடியோவுடன் 'ஜியோ நியூஸ்' நிரூபிப்பு

லாகூர், டிச. 02

பாகிஸ்தான் கிரிக்கெட் அணி சமீபத்தில் இங்கிலாந்திற்குச் சுற்றுப்பயணம் மேற்கொண்டு விளையாடிய டெஸ்ட் போட்டியின் போது, பாகிஸ்தான் வீரர்களான சல்மான்பட், முகமது ஆஸிப், முகமது ஆமீர் ஆகியோர் சூதாட்டத்தில் ஈடுபட்டமை தெரிய வந்தது.

சூதாட்டத் தரகர் மஷ்கர் மஜீத்திடம் பணம் பெற்றுக்கொண்டு முறையற்றம முறையில் பந்து வீசியமையை இங்கிலாந்துப் பத்திரிகை ஆதாரத்துடன் வெளியிட்டது.

இதனையடுத்து ஐ.சி.சி. குறித்த 3 வீரர்களுக்கும் சர்வதேசப் போட்டிகளில் விளையாடத் தடை விதித்தது.

இந்நிலையில், மேலும் 4 பாகிஸ்தான் வீரர்களுக்கு சூதாட்டத்துடன் தொடர்பு இருக்கிறது என பரபரப்பான தகவல் வெளியாகியுள்ளது.

இங்கிலாந்தை சேர்ந்த பாகிஸ்தான் சூதாட்ட தரகர் மஜீத் பேசிய விடியோவை பாகிஸ்தானின் 'ஜியோ நியூஸ்' தொலைக்காட்சி ஒளிபரப்பியுள்ளது.

'நியூஸ் ஒப் தி வேல்ட்' பத்திரிகைச் செய்தியாளரிடம் மஜீத் கூறிய தகவல் அதில் இடம்பெற்றுள்ளது.

அதில் அவர், பாகிஸ்தான் அணியில் உள்ள 7 பேருக்கு சூதாட்டத்துடன் தொடர்பு இருக்கிறது எனத் தெரிவித்துள்ளார்.

ஏற்கனவே விளையாடத் தடைவிதிக்கப்பட்ட 3 வீரர்களோடு கம்ரன் அக்மல், உமர் அக்மல், இம்ரான் பர்கத், வகாப் ரியாஸ் ஆகியோரது பெயர்களையும் அவர் தெரிவித்துள்ளார். பாகிஸ்தான் அணியில் உள்ள 11 பேரில் 7 வீரர்களுக்கு சூதாட்டத்துடன் தொடர்புள்ளது எனவும் கூறியுள்ளார்.

சூதாட்டத் தரகரான மஜீத் மேலும் கூறியிருப்பவை வருமாறு:-

'சூதாட்டத்தில் ஈடுபட வைக்க இளம் வீரர்களையே நான் குறி வைத்தேன். ஏனென்றால் எதிர்காலத்தில் அவர்கள்தான் அணியில் இருப்பார்கள். மூத்த வீரர்கள் குறித்து நான் சிந்திக்கவில்லை.

மூத்த வீரர்களான அப்ரிடி, அப்துல் ரஸாக், யூனுஸ்கான் மற்றும் சயீத் அஜ்மல் ஆகியோர் சுத்தமானவர்கள். அவர்கள் எவரும் ஊழலில் ஈடுபடவில்லை. சயீத் அஜ்மல் மிகுந்த மத நம்பிக்கை கொண்டவர். இதைப் பற்றி பேசினால் அவர் அதிர்ச்சியடைந்து விடுவார். எனக்கு மிகுந்த நம்பிக்கையாக இருந்தவர் சல்மான்பட்.

- இவ்வாறு அவர் கூறியுள்ளார்.



இந்தத் தகவல் தற்போது பாகிஸ்தான் கிரிக்கெட்டில் மிகுந்த பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. இதன் காரணமாக நியூஸிலாந்துப் பயணத்துக்கான பாகிஸ்தான் அணியில் கம்ரன் அக்மல், இம்ரான் பர்கத் ஆகியோர் இடம்பெற வில்லை.

ஆனால், உமர் அக்மலும் வகாப்ரியாஸும் இடம்பெற்றுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக ஸ்கொட்லாந்து பொலிஸாரும், ஐ.சி.சி. விசாரணைகளை நடத்தி வருகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# DSI
## ரயர் மற்றும் ரியூப்

01.12.2010 இல் இருந்து சில்லறை விற்பனை விலை

### மோட்டார் சைக்கிள் ரயர்

| அளவு / தரம் | | சில்லறை விலை |
|---|---|---|
| **MC TYRES** | | |
| 350 * 8 - 4 PR | SRI/MC- 14 | 2,010.00 |
| 300 * 10 - 4 PR | SRI/MC- 30 | 1,790.00 |
| 350 * 10 - 4 PR | SRI/MC- 05 | 2,075.00 |
| 350 * 10 - 4 PR (NEW) | SRI/MC- 20 | 2,215.00 |
| 100 / 90 * 10 - 4 PR | SRI/MC- 21 | 2,185.00 |
| 275 * 14 - F - 4 PR | SRI/MC- 04 | 2,050.00 |
| 275 * 14 - R - 4 PR | SRI/MC- 03 | 2,050.00 |
| 250 * 16 - (F & R) - 4 PR | SRI/MC- 27 | 1,760.00 |
| 300 * 16 - R - 4 PR | SRI/MC- 10 | 2,780.00 |
| 350 * 16 - R - 4 PR | SRI/MC- 09 | 3,000.00 |
| 110/ 90*16- 4 PR MEGA SPORT | SRI/MC- 34 | 5,140.00 |
| 110/ 90*16 -4 PR TUBE LESS | SRI/MC- 34 | 5,575.00 |
| 225 * 17 - F - 4 PR | SRI/MC- 07 | 1,710.00 |
| 250 * 17 - F - 4 PR | SRI/MC- 02 | 1,895.00 |
| 250 * 17 - R - 4 PR | SRI/MC- 01/03 | 1,895.00 |
| 275 * 17- F - 4 PR - RIB | SRI/MC- 31 | 2,160.00 |
| 275 * 17- R - 4 PR | SRI/MC- 37 | 2,160.00 |
| 300 * 17 - F - 4 PR | SRI/MC- 02 | 2,565.00 |
| 300 * 17 - R - 4 PR | SRI/MC- 01 | 2,565.00 |
| 300 * 17 - R - 4 PR X MILE | SRI/MC- 35 | 2,925.00 |
| 90/ 90*17- F - 6 PR SAFE RUNNER | SRI/MC- 32 | 3,455.00 |
| 90/ 90*17- F - 6 PR TUBE LESS | SRI/MC- 32 | 4,055.00 |
| 100/ 90*17 R -6 PR MASTER GRIP | SRI/MC- 33 | 4,135.00 |
| 100/ 90*17 R -6 PR DISCOVERY | SRI/MC- 38 | 4,530.00 |
| 250*18 - F - 4 PR | SRI/MC- 08 | 1,970.00 |
| 275 * 18 - F - 4 PR | SRI/MC- 15 | 2,435.00 |
| 275 * 18 - F - 4 PR SUPERIOR | SRI/MC- 31 | 2,345.00 |
| 275 * 18 - R - 4 PR | SRI/MC- 06 | 2,205.00 |
| 300 * 18 - R - 4 PR | SRI/MC- 11 | 2,400.00 |
| 300 * 18 - R - 4 PR "NG" | SRI/MC- 18 | 2,520.00 |
| 300 * 18 - R - 4 PR SUPERIOR | SRI/MC- 28 | 2,835.00 |
| 300 * 18 - R - 4 PR SUPER PLUS | SRI/MC- 36 | 3,015.00 |
| 325 * 18 - R - 4 PR SUPERIOR | SRI/MC- 24 | 3,125.00 |
| 90 / 90 * 18 R - 4 PR TUBE LESS | SRI/MC- 26 | 3,940.00 |
| 100 / 90 * 18 R - 4 PR TUBE LESS | SRI/MC- 25 | 4,385.00 |
| 1.10/1.00*18 R -4 PR(MOTOR CROSS) | SRI/MC- 17 | 7,050.00 |
| 410 * 18 - R - 4 PR - TRAIL | SRI/MC- 12 | 5,920.00 |
| 275 * 21 - F - 4 PR - TRAIL | SRI/MC- 13 | 3,805.00 |
| 80/1.00*21 F- 4 PR (MOTOR CROSS) | SRI/MC- 16 | 4,790.00 |
| **THREEWHEELER TYRES** | | |
| 400 * 8 - 6 PR | SRI/TW- 01 | 1,910.00 |
| 400 * 8 - SAVIBALA - 6 PR | SRI/TW- 04 | 2,285.00 |
| 400 * 8 - JAWAYA - 6 PR | SRI/TW- 05 | 2,535.00 |
| **LIGHTTRUCK TYRES** | | |
| 450 * 12 - 8 PR | SRI/LT- 01 | 4,755.00 |
| **AGRICULTURE TYRES** | | |
| 500 * 12 - LM - 4 PR | SRI/AGR- 01 | 5,080.00 |
| 500 * 12 - LM - 4 PR STREET | SRI/AGR- 02 | 5,065.00 |
| 600 * 12 - LM - 4 PR | SRI/AGR- 03 | 7,335.00 |

ISO 9001 REGISTERED

MGMT. SYS. RvA C024

DNV Certification B.V. The Netherlands

சாம்சன் றபர் உற்பத்தி (தனியார்) நிறுவனம்

ஜினசேன மாவத்தை

மஹர. கடவத்த.

தொ.பே : 011-2926065

பக்ஸ் : 011-2925179

### மோட்டார் சைக்கிள் ரியூப்

| அளவு / தரம் | சில்லறை விலை |
|---|---|
| 225 / 250 * 17 DSI | 570.00 |
| 275 / 300 * 14 DSI | 570.00 |
| 275 / 300 * 18 DSI | 660.00 |
| 350 * 10 DSI | 610.00 |
| 275 / 300 * 17 DSI | 660.00 |
| 100/90*17 DSI | 705.00 |
| 400 * 8 DSI | 575.00 |
| 250 * 18 DSI | 590.00 |
| 225 / 250 * 16 DSI | 570.00 |
| 275 / 300 * 21 DSI | 845.00 |
| 300 * 10 DSI | 585.00 |
| 410 * 18 DSI | 845.00 |
| 350 / 375 * 16 DSI | 730.00 |
| 450 / 500 * 12 DSI | 655.00 |
| 550 / 600 * 12 DSI | 750.00 |




## மக்கள் வங்கியின் புதிய கிளை முகாமையாளர்

பண்டத்தரிப்பு,டிசெ.2

மக்கள் வங்கியின் வல்வெட்டித் துறை கிளையின் செயற்பாட்டு முகாமையாளராகக் கடமையாற்றிய ச.சர்வானந்தன் பதவி உயர்வு பெற்று மக்கள் வங்கியின் சங்கானை கிளை முகாமையாளராக கடமைப் பொறுப்பேற்றுள்ளார்.

(301-130)

## கிளாலி மாணவர்களுக்கு

கிளிநொச்சி,டிசெ.02

இந்த மாதம் நடைபெற விருக்கும் க.பொ.த சாதாரண தரப் பரீட்சைக்கு கிளாலி றோ.க.த.க. பாடசாலை ஊடாக விண்ணப்பித்த மாணவர்கள் அனைவரையும் இன்று காலை கிளிநொச்சி தர்மக்கேணி அ.த.க பாடசாலைக்குத் தவறாது சமுகம் தருமாறு பாடசாலை அதிபர் கேட்டுக் கொண்டுள்ளார். பரீட்சை தொடர்பான சில விடயங்களை சீராக்கும்பொருட்டே இந்த மாணவர்கள் அழைக்கப்பட்டுள்ளனரென அவர் மேலும் தெரிவித்தார்.

(க-301)

## இராமாவில் முகாம் பாடசாலை வடமராட்சி வலயத்தில்

தென்மராட்சி, டிசெ.2

தென்மராட்சி கல்வி வலயத்தில் இயங்கி வந்த கொடிகாமம், இராமாவில் நலன்புரி நிலைய பாடசாலையை நேற்று புதன்கிழமை தொடக்கம் வடமராட்சி கல்வி வலயத்துடன் இணைக்குமாறு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் இ. இளங்கோவன் அறிவித்துள்ளார்.

இதேவேளை தென்மராட்சி கல்வி வலய எழுதுமட்டுவாழ் அ.த.க. பாடசாலையின் நிர்வாகத்தின் கீழ் இயங்கிய நலன்புரி நிலைய பாடசாலை வடமராட்சி கிழக்கு வெற்றிலைக்கேணி பரமேஸ்வரா வித்தியாலய நிர்வாகத்தின் கீழ் இயங்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

(த-407)


## மலிவான விலையில் தரமான நூல்கள்

வே.நவமோகனின் புலமைப்பரிசில் நூல்கள்
- அமுதசுரபி 200/=
- வெற்றிமுரசு 225/=
- விடிவெள்ளி 225/=
- புலமைப்பரிசில் வழிகாட்டி (யாழ். வட்டம்) 200/=

சிங்களம் கற்பதற்கான நூல்கள்
- மும்மொழி வழிகாட்டி-1 75/=
- தமிழ் மூலம் சிங்களம்120/=
- மும்மொழி வழிகாட்டி-2 75/=
- சிங்களம் படிப்போம் 100/=

மொழிவிருத்திக்கான நூல்கள்
- பாஷைப்பயிற்சி 1,2,3,4 75/=
- உறுப்பெழுத்து வழிகாட்டல்75/=
- உறுப்பெழுத்துப் பயிற்சி80/=
- மொழித்திறன் 75/=
- சொற்களஞ்சியம் 75/=
- வாக்கியப்பேழை 55/=

கட்டுரை நூல்கள்
- புலமைக்கட்டுரை 75/=
- கட்டுரைக்கனி 150/=
- Children Essay 75/=
- கட்டுரைவளம் 85/=
- கட்டுரைச்சுரங்கம் 75/=
- Writing Essay 75/=

- வெற்றிக்கனி 140/=
- பழமொழிகள் (2000)150/=
- கணித வழிகாட்டி 1-6 75/=
- விடுகதைகள் (1500)150/=

நாடெங்கிலும் உள்ள புத்தகசாலைகளில் கிடைக்கும்' யாழ். நகரில் அன்னை புத்தகசாலையில் மொத்தமாகவும் பெற்றுக்கொள்ளலாம்

**காயத்திரி பப்ளிகேஷன்**

9-1/1, சிறி சரணங்கரா றோட், பாமன்கடை,

தெஹிவளை.

0777892028

(வி/573301)


## சேவைநலன் பாராட்டு

02.12.2010

திரு.கனகசபை தேவேந்திரன் (s.l.p.s.2-ii)



ஆசிரியர் சேவையில்

17.02.1977 - 15.10.1983

பண்டாரவளை கணவரல்ல அ.த.க.பாடசாலை

16.12.1983 - 01.05.1985

கிளி/ஸ்கந்தபுரம் இல.1 அ.த.க.பா (கிளிநொச்சி)

02.05.1985 - 31.12.1998வரை

கிளி/புனிதஅந்தோனியார் வித்தியாலயம் (முரசுமோட்டை)

அதிபர் சேவையில்

01.01.1999--10.02.2007வரை

கிளி/புனித அந்தோனியார் வித்தியாலயம் (முரசுமோட்டை)

11.02.2007--01.03.2008 வரை

கிளி/கண்ணகையம்மன் வித்தியாலயம் (கட்டுவன் கொட்டி)

02.03.2008--02-12-2010வரை

கிளி/நாகேந்திரா வித்தியாலயம் (புளியம் பொக்கணை)

இன்னும் பல்லாண்டு காலம் சிறப்பாக வாழ வாழ்த்தும்

வாழ்த்தி வழங்குவோர்

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

**சிவபாலன் குணபாலன்** S.L.A.S

(பிரதேச செயலர், துணுக்காய்-முல்லைத்தீவு)



மாவட்டத் தொழில் அலுவலகம் வவுனியாவில் உதவி தொழில் ஆணையாளராகக் கடமையாற்றிப் பின்னர் வட வலய பிரதித் தொழில் ஆணையாளராக கடமையாற்றி 01.12.2010 இல் துணுக்காய் முல்லைத்தீவு பிரதேச செயலாளராகக் கடமையேற்கும் திருவாளர்-சிவபாலன் குணபாலன் அவர்களைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

உதவித்தொழில் ஆணையாளர்களும் உத்தியோகத்தர்களும்

மாவட்டத்தொழில் அலுவலகம் - யாழ்ப்பாணம்

வடவலய தொழில் அலுவலகம் - யாழ்ப்பாணம்

தொழில் அலுவலகம் - கிளிநொச்சி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்கள்

### திருமதி கந்தையா சிவக்கொழுந்து

(தில்லைகட்டி வைரவர் ஆதீனகர்த்தா)



தில்லைக்கட்டி, சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா சிவக்கொழுந்து நேற்று (01.12.2010) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கார்த்திகேசு கந்தையாவின் அன்பு மனைவியும், வல்லிபுரம் -தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் மூத்த மகளும், கார்த்திகேசு -சேதுப்பிள்ளை தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்றவர்களான சரஸ்வதி, இரத்தினதேவி மற்றும் அரியதுரை ஆகியோரின் அன்புச் சகோதரியும், சுந்தரமூர்த்தி சுப்பிரமணியம், தேவிகாராணி ஆகியோரின் மைத்துனியும், தர்சினி (சுவிஸ்), தர்மினி (சுவிஸ்), தர்சன், தர்மஜீவன், சசீந்திரன் ஆகியோரின் பெரிய தாயாரும், சகிலா, சசிரேகா, காந்தரூபன், கவிதா, யசோதா, சந்திரதாஸ்(சுவிஸ்), பவானந்தன் (சுவிஸ்) ஆகியோரின் மாமியாரும், வைஷ்ணவன், திசோணவன், வருண், வருணிக்கா, சஞ்ஜெய், அபிசாலினி ஆகியோரின் பேர்த்தியாரும், சுப்பிரமணியம், சர்வேஸ்வரன், ஞானசேகரம், காலஞ்சென்ற பூரணம் மற்றும் அம்பிகை, கருணைநாயகம், பூமணி, மகேஸ்வரி, ஆகியோரின் மாமியாரும் அவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (01.12.2010) புதன்கிழமை பி.ப 4.00 மணிக்கு நடைபெற்று பூதவுடல் கொத்தியாலடி இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தில்லைகட்டி,
சுன்னாகம். (572699)
தகவல்:
குடும்பத்தினர்.

### வேலுப்பிள்ளை செல்லத்துரை



அத்தியடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை செல்லத்துரை நேற்றுமுன்தினம் (30.11.2010) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - சிதம்பரம் தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சந்தியாப்பிள்ளை - பொன்னம்மா தம்பதியரின் பாசமிகு மருமகனும் அரசரட்ணத்தின் (அரி யம்) அன்புச் சகோதரனும் சச்சிதானந்த தேவியின் (தேவா) அன்புக் கணவரும் செல்வானந்தன் (கனடா), காயத்திரி (டென்மார்க்), விஜயகௌரி, அபிராமி ஆகியோரின் பாசமிகு தந்தையும் விஜிதா, சுதர்சன், சுதர்சனன் ஆகியோரின் அன்பு மாமனும் பிறிஷா, கரிஷா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை நாளை (03.12.2010) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நண்பகல் 12 மணியளவில் இடம்பெற்று, பூதவுடல் தகனத்துக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.10, புது வீதி,
அத்தியடி. (106765)
தகவல் :
மனைவி, பிள்ளைகள்.

### டானியல் தேவகுமார் (தேவன்)



சக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் சாவகச்சேரியை தற்போதைய வசிப்பிடமாகவும் கொண்ட டானியல் தேவகுமார் (தேவன்) (30.11.2010) செவ்வாய்க்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் காலஞ்சென்ற திரு. திருமதி S.N அந்தோனிப்பிள்ளை தம்பதியரின் அன்புப் பேரனும், திரு. திருமதி டானியல் தம்பதியரின் அன்பு மகனும்(இலங்கை பெந்தகொஸ்தே சபை), லோறன்சியாவின் அன்புக் கணவரும், பிளசியா, அன்புக்குமார் ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்றவர்களான ராஜ்குமார், அந்தோனிப்பிள்ளை, யூட்சன் மற்றும் ஜீவமலர், சுதாமலர், ஆகியோரின் பாசமிகு சகோரதரனும், சாவகச்சேரி கபிரியேல் யேசுதாசனின் அன்பு மருமகனும், பமிலேஸ் (பிரதேச சபை தென்மராட்சி), ஆன்யான்சியா (ரூபா), டறன்சியா(சுபா) ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை நாளை (03.12.2010) வெள்ளிக்கிழமை அவரின் இல்லத்தில் பிற்பகல் 1.30 மணிக்கு நடைபெற்று பூதவுடல் பழைய வேதக்கோவிலடி கிறிஸ்தவ சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சக்கோட்டை,
அல்வாய் வடமத்தி.
தகவல்:
அந்தோனிப்பிள்ளை
டானியல்(தந்தை)

## இளைஞருக்கு கத்திக்குத்து

யாழ்ப்பாணம், டிசெ. 02

கோப்பாய் பகுதியில் நேற்று இரவு 7 மணியளவில் இடம்பெற்றதாகக் கூறப்படும் சம்பவத்தில் காயமடைந்த இளைஞர் ஒருவர் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

எஸ். தயன் (வயது 18) என்பவரே கத்திக்குத்துக்கு இலக்கானவர் ஆவார்.

நேற்றுப் பிற்பகல் நால்வர் வீடு புகுந்து இவரை கத்தியால் குத்திவிட்டு தப்பிச் சென்றதாகத் தெரிவிக்கப்பட்டது.

இச்சம்பவம் தொடர்பாக பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஒ-319)

## சீருடை துணிகள் நேற்று வந்தன

தென்மராட்சி, டிசெ. 02

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளின் மாணவர்களுக்கான 2011ஆம் ஆண்டுக்குரிய இலவச சீருடைத் துணிகள் நேற்று லொறிகளில் கொண்டுவரப்பட்டுள்ளன.

இவை விரைவில் பாடசாலைகளுக்கு சாவகச்சேரி கோட்டக் கல்வி அலுவலகத்தில் வைத்து விநியோகிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. (ஒ-207)


### முக்கிய அறிவித்தல்

கரைச்சி வடக்கு கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம்

மேற்படி சங்கத்தின் அங்கத்தவர்களின் விவரங்களைப் பெறவேண்டியிருப்பதுடன் புதிய அங்கத்தவர்களையும் இணைத்துக் கொள்ள வேண்டியுள்ளது. இது தொடர்பான விவரங்கள் கண்டாவளை பிரதேச செயலக பிரிவிலுள்ள கிராமசேவகர் பிரிவுகளிலும், பிரதேச செயலகத்திலும் சங்கத்திலும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. அதற்கமைய செயற்படுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

செயலாளர்- க.மகேந்திரராஜா

### German Swiss மொழி வகுப்புகள்

German Swiss மொழி வகுப்புக்கள் தமிழ் மொழி பெயர்ப்புடன் நடைபெறுகின்றன. அத்தோடு CD, புத்தகங்கள் கொடுக்கப்படும். Germany இல் படித்து வந்த ஆசிரியரால் கற்பிக்கப்படுகின்றது. NO.10, Palaly road, Jaffna. T.P.0771604823

### G.C.E (O/L) ICT - Personal Class

* Gr.10-11 வரையிலான துரித மீட்டல்.
* 2007, 2008, 2009 வினாவிடை வகுப்புகள்.
* Gr.10 -11 புதிய பிரிவு ஆரம்பம்.

உங்கள் வீடுகள், நிறுவனங்களைத் தேடி....

(ஆசிரியர்- வி.பாலா, (B.Sc, MCP, Pro.Dip.inIT)
T.P.-0777241823

### G.C.E (O/L) ICT - கருத்தரங்கு

* இடம்- நியூ பிறைற் கல்வி நிலையம், 37, மாட்டின் வீதி, யாழ்ப்பாணம்.
* காலம்-04.12.2010 சனிக்கிழமை
* நேரம்-காலை 9 மணி.
* அனுமதிகளை முன்பதிவு செய்யவும்.

(ஆசிரியர்- வி.பாலா, (B.Sc, MCP, Pro.Dip.inIT)
T.P.-0777241823

### சேவை

மாணவர்களுக்கு உரிய ரை, மோனிற்றர் பச், பிறிபெக்ட் பச், பிளாஸ்ரிக் அடையாள அட்டை, மெடல்கள், கேடயங்கள், பெயர்ப் பலகை என்பனவற்றை உடனுக்கு உடன் செய்து பெற்றுக்கொள்ள.

எஸ்.எஸ்.பாசோதரன் ஆர்ட்ஸ்

இல. 381, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.

தொ.பே.: 0777110610, 0217903020 (சி/672612)

### கோழிக்குஞ்சு விநியோகம்

35 நாள்களில் 2Kg வளரக்கூடிய தரமான மிட்லண்ட் (கிறிஸ்போ) புறோயிலர் குஞ்சுகள் 130/= ற்கு விற்பனைக் குண்டு. தொடர்புகளுக்கு-0212223353

### கோழிக்குஞ்சு விநியோகம்

தரமான புறோயிலர் குஞ்சுகள் 04.12.2010 விநியோகிக்கப்படும். விலை 90/= மட்டுமே. இறைச்சிக் கோழிகள் கொள்வனவு செய்யப்படும்.

ராஜீவ், நவாலி வீதி, ஆனைக்கோட்டை.

T.P-0776090926

### விற்பனைக்கு

வாங்கி குறுகிய நாள்களே பாவித்த LML Freedom NP HO - 8506 இலக்க முடைய மோட்டார் சைக்கிள் அவசரமாகவிற்பனைக் குண்டு.

தொடர்பு:- T.P.077-992-7117, 021-321-6928

### கடை விற்பனைக்கு

யாழ். நகரில் கஸ்தூரியார் வீதியில் ராஜா ... குண்டு. தொடர்பு:- 0719134767


## ஈரவிழிகளுடனான இதய அஞ்சலி



### பிலோமினா பாக்கியநாதர்

எமது பாடசாலை ஆசிரியை
செல்வி ஜசிந்தா பாக்கியநாதர்
அவர்களின் அன்புத் தாயாரின் பிரிவால்
துயருறும் எம் அன்பு ஆசிரியருக்கும் அவரது
குடும்பத்தினருக்கும் எமது இதயபூர்வமான
ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்
கொள்வதுடன் அன்னாரின் ஆன்மா
இறைவனடி சேர எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்
யா/பண்ட த்தரிப்பு ஜசிந்தா றோ.க.த.க.வித்தியாலயம்

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



தோற்றம்: 04.02.1932
மறைவு: 02.11.2010

### அமரர் ஞானமணி காசிலிங்கம்

கடந்த 02.11.2010 செவ்வாய்க்கிழமை அன்று இறைபதம் எய்திய எங்கள் குடும்பத் தலைவி

அமரர் ஞானமணி காசிலிங்கம்

அவர்களின் வீட்டுக்கிருத்தியம் இன்று 02.12.2010 வியாழக்கிழமை எமது இல்லத்தில் நடைபெற இருப்பதனால் அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இல.81, அம்பாள் வீதி,
நாயன்மார்கட்டு,
நல்லூர். (106761)
குடும்பத்தினர்
(சா.பத்மநாதன்)

## மரண அறிவித்தல்கள்

### தம்பிப்பிள்ளை சுதாகரன் (அரசன்)



பலாலி கிழக்கைப் பிறப்பிடமாக வும் அவுஸ்ரேலியாவை வசிப்பிடமாக வும் கொண்ட தம்பிப்பிள்ளை சுதா கரன் (29.11.2010) திங்கட்கிழமை அகால மரணமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பிப்பிள்ளை - அன்னப்பிள்ளை தம்பதிகளின் பாசமிகு மகனும், சுந்தரராஜா - நீலாம்பிகை தம்பதிகளின் அன்பு மருமகனும், சத்தியபாமாவின் அன்புக் கணவரும், கவிஷனின் பாசமிகு தந்தையும், பூமணி, சாந்தினிதேவி, சந்திராதேவி (U.K), சந்திரசேகர் (சுவிஸ்), கேதீஸ்வரன், சரோஜாதேவி (ஜேர்மனி), சசீஸ்வரன் (U.K) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

புன்னாலைக்கட்டுவன் தெற்கு,
சுன்னாகம்,
0213006792 (106769)
தகவல்.
குடும்பத்தினர்.

### திருமதி ஐயா பரிமளம்



கொக்குவில் கிழக்கை பிறப்பிடமாகவும், சைவ பாடசாலை ஒழுங்கை திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட ஐயா பரிமளம் நேற்று (01.12.2010) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - அன்னலட்சுமி தம்பதியரின் அன்பு மகளும், ஐயாவின் அன்பு மனைவியும், பரராஜசிங்கம், கந்தசாமி, ஆனந்தநடராசா, மகேந்திரராசா ஆகியோரின் அன்புச் சகோதரியும், யோகராசா, தேவமனோகரி, ரோசினி, வைகுந்தநாதன் (ஈஸ்வரபகவான் கம்பனி பணியாளர்), தேவரஞ்சினி ஆகியோரின் அன்புத் தாயாரும், சாந்தி, தர்மசீலன், சிவகுமார், சுகன்யா, ரவி ஆகியோரின் மாமியும், துவாரகன், துளசி, துசி, பிரசாந், வைஸ்ணவி, நிசாந்தினி, கிரிசாந்தினி, நிரூசன், லாவண்யா, வாகீசன் ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.12.2010) வியாழக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரின் இல்லத் தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

சைவ பாடசாலை
ஒழுங்கை,
திருநெல்வேலி. (சி/106771)
தகவல்:
வைகுந்தநாதன் (மகன்)
0777250033

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## டெங்கு அபாயம் குறித்தும் ஒலிபெருக்கி அறிவிப்பு

வண்ணை,டிசெ.2

குருநகர்ப் பகுதியில் டெங்குக் காய்ச்சல் பரவும் அபாயம் நிலவுவதாக நேற்று புதன் கிழமை இரவு ஒலிபெருக்கி வாகனம் மூலமாக எச்சரிக்கை விடுக்கப்பட்டது.

நேற்றுமுன்தினம் இரவு குருநகரைச் சேர்ந்த 12 வயதுச் சிறுவன் ஒருவன் மரணமாகியதையடுத்தே இரவு நேரத்தில் இந்த அறிவிப்பு விடுக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-160)

## ஜனாதிபதி லண்டன்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவிக்கும் கருத்துக்களும் அவர்கள் அந்தச் சடலங்களைப் பார்த்து எள்ளி நகையாடும் விதமும், கொல்லப்படுவதற்கு முன்னர் அந்தப் பெண்கள் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப் பட்டுள்ளார்கள் என்பதை அறுதியிட்டுக் காட்டுவதாக அமைகிறது என சனல்-4 தொலைக்காட்சி நிலையம் தெரிவித்துள்ளது.

தொலைக்காட்சியில் ஒளிபரப்ப முடியாத, ஆனால் வீடியோவில் இடம்பெற்றுள்ள காட்சிகள் தொடர்பில், சனல்-4 நிறுவனத்தின் வெளிவிவகாரச் செய்தியாளர் ஜொனத்தன் மில்லர் விவரித்துள்ளார்.

### ஒளிபரப்பமுடியாத அளவுக்கு குரூரமானவை

"எஞ்சியிருக்கும் காட்சிகள் ஒளிபரப்ப முடியாத அளவிற்குப் படுபயங்கரமானவையாக, குரூரமானவையாக இருக்கின்றன. பெண்கள் கைகள், கண்கள் கட்டப்பட்ட நிலையில் ஆடைகள் ஏதுமின்றி சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்கள். அதனைப் பார்த்துக் கொண்டிருப்பவர்கள் தெரிவிக்கும் வசனங்கள் மறைமுகமான பாலியல் அர்த்தங்களுடன் வருகின்றன.

சுமார் ஒரு வருடத்திற்கு முன்பு போர்க் குற்றங்கள் தொடர்பில் சனல்-4 நிறுவனம் ஆதார வீடியோவை வெளியிட்டதைத் தொடர்ந்து பல நூற்றுக் கணக்கான ஒளிப்படங்களும் திகிலூட்டக்கூடிய குரூரமான காட்சி கள் அடங்கிய வீடியோக்களும் எமக்குக் கிடைத்த வண்ணம் இருக்கின்றன. அவை அனைத்தும் கடைசியில் மரண தண்டனைப் பாணியிலான படுகொலைகள் மற்றும் பாலியல் வல்லுறவு என்பவை குறித்ததாகவே இருக்கின்றன.

நாம் இப்போது காண்பிக்கும் 5 நிமிடங்கள் 30 செக்கன்கள் கொண்ட இந்த வீடியோவை ஐ.நாவுக்கு அனுப்பி வைத்துள்ளோம். அது உண்மையானதோ இல்லையோ, இந்த விவகாரம், சுயாதீனமான அனைத்துலக போர்க் குற்ற விசாரணைக்குப் பொருத்தமான ஒன்றே" - என்று தெரிவித்தார் ஜொனத்தன் மில்லர். (உ)

## மஹிந்தவுக்கு எதிராக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேற்கொள்ளப்பட்டு வருகின்றது என 'தி கார்டியன்' இணையத்தளம் மேலும் தெரிவித்துள்ளது.

பல்வேறு தமிழ் அமைப்புகள் அங்கம் வகிக்கும் 'பிரிட்டன் தமிழ் போரம்' அமைப்பின் ஸ்தாபகரான சென். கந்தையா, பிடிவிறாந்து பிறப்பிப்பதற்கான ஏற்பாடுகளை தாங்கள் கடந்த சில நாட்களாக மேற்கொண்டு வருகின்றனர் என்றும் தமக்குபிரபலசட்ட நிறுவனம் ஒன்று ஆலோசனைகளை வழங்கி வருகின்றது என்றும், அத்துடன் பிரிட்டனின் பிரபுக் கள் சபைத் தலைவரிடம் இதுதொடர்பாகக் கலந்துரையாடினர் என்றும் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஒரு நாட்டின் தலைவர் என்ற வகையில் அவருக்குப் பாதுகாப்புக் கவசம் இருக்குமாயின் அவரது குழுவிலுள்ள இராணுவ உறுப்பினர்களுக்கு எதிராகப் பிடிவிறாந்தை பிறப்பிப்பது தொடர்பாக ஆராயப்படுமென மற்றொரு தமிழ் ஆதரவு அமைப்பின் உறுப்பினராக சுரேன் சுரேந்திரன் தெரிவித்துள்ளார்.

பிரிட்டன் பிரதமர் டேவிட் கமருன், 2009இல் முடிவடைந்த இறுதி யுத்தம் தொடர்பாக சுயாதீன விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும் எனத் தெரிவித்திருந்தார். அனைவரும் பத்திரிகைகளை வாசித்துள்ளனர். வீடியோக் காட்சிகளையும் பார்த்துள்ளனர். ஆனால் யுத்தத்தின் போது மனித உரிமைகள் மீறப்பட்டுள்ளனவா என்பது தொடர்பாக சுயாதீன விசாரணை அவசியம் என அவர் தெரிவித்திருந்தார்.

இதேவேளை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் அண்மைய பிரிட்டன் விஜயம் அவர் கைதுசெய்யப்படுவார் என்ற அச்சத்தின் காரணமாகவே ஒத்திவைக்கப்பட்டது என்பதை ஜனாதிபதியின் சார்பாக நியமிக்கப்பட்டுள்ள பொதுசனத் தொடர்பு நிறுவனத்தின் பேச்சாளரான பெல் பொட்டிங் தெரிவித்தார்.

ஜனாதிபதி ஐ.நாவில் உரையாற்ற வேண்டியிருந்தது. அத்துடன் சீனாவுக்கும் விஜயம் மேற்கொண்டார். மிகவும் இறுக்கமான சர்வதேச நிகழ்ச்சி நிரலை அவர் கொண்டிருந்தார். அதனால்தான் அவரது வருகை தாமதமானது என பெல் பொட்டிங் தெரிவித்தார்.

## கருமி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எனவும் இதன்போது மின்னல் ஆபத்துகளிலிருந்து காத்துக்கொள்ளும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை கைக்கொள்ளுமாறு மக்களை வானிலை அவதானிப்பு நிலையம் வேண்டியுள்ளது.(எ)

## எச்சரிக்கை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தங்களின் உடைமைகளுடன் பாதுகாப்பான இடங்களுக்குச் செல்லத் தயாராக இருக்குமாறு அந்த ஒலிபரப்பில் தெரிவிக்கப்பட்டது. (ஒ)

## இலங்கை..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

"முன்னர் வெளியிட்ட வீடியோவைவிட வேறொன்றும் இல்லை இப்போது வெளியிடப்பட்டுள்ளதில்" என்று தூதரக விளக்கத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (சி)

## கைதான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்ற சந்தேகத்தின்பேரில் இராணுவத்திலிருந்து தப்பிச் சென்றதாகச் சந்தேகிக்கப்படும் முன்னாள் இராணுவச் சிப்பாய் ஒருவரை நுவரெலியா பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த குழுவினர் நேற்றுப் பிற்பகல் 3.30 மணிக்கு கைதுசெய்து பொலிஸ் நிலையத்துக்கு அழைத்து வந்தபோதே இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

பொலிஸ் நிலைய வாசல் அருகே சந்தேக நபரை அழைத்துச் சென்றபோது, அவர் கைக்குண்டு ஒன்றை வெடிக்கச் செய்ததாகவும், இதன்போது 14 பொலிஸார் படுகாயமடைந்தனர் எனவும் சந்தேக நபர் அதே இடத்தில் உயிரிழந்தார் என்றும் பொலிஸ் ஊடகப் பேச்சாளரும், பொலிஸ் அத்தியட்சகருமான பிரஷாந்த ஜயக்கொடி தெரிவித்தார்.

இச்சம்பவத்தில் காயமுற்ற 14 பொலிஸ் கான்ஸ்டபிள்களும் நுவரெலிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். அத்துடன், உயிரிழந்தவரின் சடலம் பிரேத பரிசோதனைக்காக நுவரெலிய வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை நுவரெலிய பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஒ-சி)

## பாதுகாப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இன்று அவர் உரையாற்றவிருந்த மன்றத்தின் முன்பாகவும் ஆர்ப்பாட்டம் நடத்த தமிழ் அமைப்புகள் சிலவற்றால் அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையிலேயே அந்த உரை நிகழ்வு தவிர்க்க முடியாத காரணங்களால் ரத்துச் செய்யப்படுகிறது என அறிவிக்கப்பட்டுள்ளது.

பாதுகாப்புக் காரணங்களுக்காகவே அந்த உரை ரத்துச் செய்யப்பட்டது என அந்த அமைப்பு அறிவித்துள்ளது. இந்த ரத்து காரணமாக தாம் வருத்தமடைவதாகவும் அந்த அமைப்புக் கூறியுள்ளது.

நடக்கக்கூடிய ஆர்ப்பாட்டங்களின் அளவு பெரிதாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுவதால், இந்த உரை பாதுகாப்பாக நடக்கும் என்று தாம் கருதவில்லை என்றும் அந்த அமைப்பு கூறியுள்ளது.

## உண்மை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உண்மையானதா, நம்பகத்தன்மை வாய்ந்ததா என்பதை உறுதிப்படுத்துவதற்கு இந்த வீடியோ உதவும்" - என்றார் சர்வதேச மன்னிப்புச் சபையைச் சேர்ந்த சாம் சரீவ்.

"மேலும் பலர் கொல்லப்பட்டுள்ளார்கள் என்பதும் இன்னும் பல படையினர் இதில் தொடர்புபட்டுள்ளார்கள் என்பதையும் இந்த வீடியோவில் நாங்கள் அடையாளப்படுத்த முடிகிறது என்பதுதான் இதிலுள்ள முக்கிய விடயம்.

பாலியல் வல்லுறவுகள் இடம்பெற்றிருப்பதற்கான சாத்தியங்களையும் இதன் மூலம் உறுதிப்படுத்திக் கொள்ள முடிகிறது. குறைந்தது இரண்டு சடலங்கள் போர்க்கைதிகளான பெண்களுடையவையாகத் தோன்றுகின்றன. ஒரு சடலத்தின் பின்புறத்தையே பார்க்க முடிகிறது. நான்காவது சடலம் பாலியல் துன்புறுத்தலுக்கு உள்ளாக்கப்பட்டதாகத் தோன்றுகின்றது." - என்று சாம் சரீவ் மேலும் தெரிவித்தார். (உ)


# Wanted

Closing Date : 04.12.2010

1. Field Coordinators (Male)
   (2 Years Experience)
   Age 24-28
2. Marketing Officers (Male)
   (2 Years Experience Preferred)
   Age 24-28
3. Trainee Technicians (Male)
   Age 21-24



Send Your CV With Contact number.

ADVT No.4095, C/O Uthayan
361, Kasthuriyar Road, Jaffna.


## மரண அறிவித்தல்கள்

### திருமதி தம்பிப்பிள்ளை இராசம்மா

காரைநகரைப் பிறப்பிடமாகவும் திருநெல்வேலி கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பிப்பிள்ளை இராசம்மா நேற்று (01.12.2010) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - தெய்வானை தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற தம்பிப்பிள்ளையின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான தம்பிப்பிள்ளை, கனகரத்தினம், துரையப்பா, சின்னத்துரை, நாகம்மா ஆகியோரின் சகோதரியும் நாகேஸ்வரி, காலஞ்சென்ற குணரட்ணம் மற்றும் இராசலட்சுமி, கமலாதேவி, கோபால கிருஸ்ணன் (கோபால்) யோகரட்ணம் ஆகியோரின் பாசமிகு தாயாரும் உத்தமசீலன், சுப்பிரமணியம், சண்முகநாதன், திலகவதி, மீனலோஜினி ஆகியோரின் பாசமிகு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.12.2010) வியாழக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் 2 மணியளவில் பாற்பண்ணை செம்பாடு இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கெனடி லேன்,
திருநெல்வேலி கிழக்கு,
யாழ்ப்பாணம். (106779)

தகவல் :
பிள்ளைகள்.

### திருமதி கனகரத்தினம் ஐயர் விசாலாட்சி அம்மா

இணுவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் கோப்பாய் வீதி, உரும்பிராய் தெற்கை வதிவிடமாகவும் கொண்ட காலஞ்சென்ற கனகரத்தினம் ஐயர் (முன்னைநாள் அர்ச்சகர், முத்துமாரியம்மன் கோயில், கொழும்புத்துறை கிழக்கு) விசாலாட்சியம்மா நேற்று (01.12.2010) புதன்கிழமை சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பிப்பிள்ளை - நாகம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற ராமுஐயர் - அன்னம்மா தம்பதியரின் மருமகளும் கனகரத்தினம் ஐயரின் அன்பு மனைவியும் நாகேஸ்வரியின் அன்புத் தாயும் பாலச்சந்திரனின் (ஓய்வுபெற்ற சிமெந்துத் தொழிற்சாலை உத்தியோகத்தர் K.K.S) அன்பு மாமியும் தனுஜன் (லண்டன்), வர்மிலா (நுண்கலைத்துறை மாணவி, யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் காலஞ்சென்றவர்களான கந்தையா ஐயர், இரத்தினம்மா, ஐயாத்துரை, சின்னத்துரை ஐயர், ஆகியோரின் அன்புச சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.12.2010) வியாழக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் உரும்பிராய் வேம்பன் மயானத்தில் அடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அன்னை இல்லம்,
கோப்பாய் வீதி,
உரும்பிராய் தெற்கு.

தகவல் :
சோ.பாலச்சந்திரன் (மருமகன்),
வர்மிலா (பேர்த்தி). 0774430807 (இ/573377)


மாபெரும் கட்டணச்சலுகையுடன்
புதியபிரிவுகள் ஆரம்பம்

Dip. in Ms Office2007
~~3600/=~~ 1000/=
Dip. in Desktop Publishing
~~3600/=~~ 1000/=
Dip. in Computer Hardware & Networking
~~5000/=~~ 1000/=
Certificate in Internet & Email
~~1600/=~~ 1000/=

கே.கே.எஸ் வீதி
உப்புமடம் சந்தி அருகாமையில்

05.12.2010 முதல் அனைத்துப் பிரிவுகளும் ஆரம்பம்
கட்டணச்சலுகைகள் 05.12.2010 வரை மட்டுமே!

CB Computer Academy Station Road Kondavil. T.P: 021-3217903

வெளிவந்து விற்பனையாகிறது
G.C.E - A/L
புதிய பாடத்திட்டம்
அளவையியலும் விஞ்ஞானமுறையும்
P.கமல் விலை:400/
ஏகவிநியோகஸ்தர்
பூபாலசிங்கம் புத்தகசாலை
பஸ்நிலையம், யாழ்ப்பாணம். T.P:0212226693
வேம்படிச்சந்தி, யாழ்ப்பாணம். 0212221637

வெளிவந்து விற்பனையாகிறது
பொதுநிதி நடைமுறைகள்
செ.நாகராஜா,
(ஓய்வுபெற்ற கணக்காளர், கச்சேரி, யாழ்ப்பாணம்)
விலை:400/
ஏகவிநியோகஸ்தர்
பூபாலசிங்கம் புத்தகசாலை
பஸ்நிலையம், யாழ்ப்பாணம். T.P:0212226693
வேம்படிச்சந்தி, யாழ்ப்பாணம். 0212221637

A/L 2010 ? What Next? BIT, CIMA-UK, Engineering-USA
Government Schol. நீங்களும் தகவல்தொழில்நுட்ப, வணிக துறையில் சாதனை படைக்கலாம்.
USA, UK பல்கலைக்கழகங்களில் Master Degree Free : BCS-UK, IELTS / TOEFL, CISCO-CCNA, Hardware, ICDL
SMS your name & course to 772 395 895 & Get Schol.
MCS Supported By UNDP/JRRP புலமைப் பரிசிலுக்கும் மேலதிக விபரங்களுக்கும் 324, Palaly Road, Campus Junction, Jaffna.


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிடெட் [illegible] வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 02.12.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org